## (எ) அரசாங்க நிதி

1974 நிதியாண்டின் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் முக்கிய அம்சங்கள் (அதாவது 1974 சனவரி 1 தொடக்கம் திசெம்பர் 31 வரை) முந்திய ஒன்பது நிதியாண்டுகளுக்குரிய தொடர்பான தரவுகளுடனும் 1974, 1975ஆம் ஆண்டுகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடனும் அட்டவணை II (எ) 1இல் தரப்பட்டுள்ளன. பின்வரும் உரையிலும், அட்டவணைகளிலும் 1973, 1974ஆம் நிதி ஆண்டுகளுக்குரிய தரவுகளின் விபரமான பகுப்பும் பகுப்பாய்வும் செய்யப்பட்டுள்ளன

ஆய்வுக்குரிய 1974ஆம் நிதியாண்டின் மொத்த அரசிறை ரூ. 47,950 இலட்சமாகவும்.[1] மொத்தச்செலவு ரூ. 63,940 இலட்சமாகவுமிருந்தது. மொத்தச் செலவு வாக்களிக்கப்பட்ட செலவான ரூ. 63,470 இலட்சத்தையும் 'முற்பணக் கணக்கு' [2] சார்பான கொடுப்பனவுகளான ரூ 470 இலட்சத்தையும் கொண்டிருந்தது. மொத்த அரசிறையும் செலவும் சென்ற ஆண்டைவிட முறையே ரூ 7,610 இலட்சத்தினாலும் (அல்லது 18.9 சதவீதம்), ரூ. 9,460 இலட்சத்தினாலும் (அல்லது 17.4 சதவீதம்) அதிகரித்தன. அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு எந்த ஒரு ஆண்டிலும் பதிவுசெய்யப்படாத அதிகரிப்பாகும். மீண்டெழும் செலவு, மூலதனச் செலவு ஆகிய இரண்டும் பண ரீதியில் கணிசமான அளவால் முறையே ரூ. 6,490 இலட்சத்தாலும் (அல்லது 16 8 சதவீதம்) ரூ. 2,980 இலட்சத்தாலும் (அல்லது 19 3 சதவீதம்) அதிகரித்தன. விலை அதிகரிப்புக்களும் ஏற்பட்டு தேசிய அரசப் பேரவையில் பெருந் தொகையான துணை மதிப்பீடுகளும் மேற்கொள்ளப்பட்ட ஒரு ஆண்டின்போது இவ்வதிகரிப்பு ஏற்பட்டமை வியப்புக்குரிய விடயமல்ல. எனினும், உண்மை அடிப்படையில் நோக்கின் இவ்வாண்டில் ஏற்பட்ட விலை அதிகரிப்புகள் காரணமாக மீண்டெழும் செலவிலும், மூலதனச் செலவிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் அவ்வளவு கணிசமானதாகவில்லை.

ஆய்வுக்குரிய ஆண்டின் வரவு செலவுத்திட்டக்குறை ரூ. 15,990 இலட்சமாகும் இது, ரூ. 9,640 இலட்சம்கொண்ட உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளாலும், ரூ. 6.290 இலட்சம் கொண்ட வெளிநாட்டு நிதியினாலும் நிதியிடப்பட்டது. அதேவேளையில் ரூ. 390 இலட்சம் கொண்ட பண நிலுவைகள் (இணைக்கிணை நிதி உட்பட) எடுப்பனவு செய்யப்பட்டன. இவ்வாண்டில், ரூ. 330 இலட்சம்கொண்ட உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடுகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன கடன் மீளக் கொடுப்பனவு ஒழுங்குகளுக்கு இடமளித்து நோக்கின் ஆய்வுக்குரிய ஆண்டின் தேறிய பணக்குறை ரூ. 10,350 இலட்சமாகும்.

மூல வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், 1974இன் மொத்தச் செலவு ரூ. 8,160 இலட்சத்தினல் கூடுதலாக விளங்கியது. இது

---

1. பொதுக் கூட்டுத்தாபனங்கள் ரூ. 65 இலட்சத்தையும் உள்ளடக்கியது.
..... பக்கம் பார்க்க.

2. அடிக்குறிப்பைப் பக்கம் .... இல் பார்க்கவும்,

அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின்

| விடயங்கள் | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 |
|---|---|---|---|---|
| **1. அரசிறை .. ... ...** | **1,816** | **1,833** | **1,955** | **2,156** |
| **2. செலவு ... ... ..** | **2,337** | **2,515** | **2,677** | **3,006** |
| 2. 1 மீண்டெழுஞ் செலவு (ஆ) ... ... | 1,803 | 1,860 | 1,895 | 2,186 |
| 2. 2 மூலதனச் செலவு (ஆ) (இ) ... .. | 561 | 644 | 742 | 849 |
| 2. 3 முற்பணக் கணக்குகளும் ஏனையவையும்... | – 28 | 10 | 42 | – 29 |
| **3. வரவு செலவுத்திட்டக்குறை ... ...** | **520** | **682** | **723** | **850** |
| **4. படுகடன் மீளக் கொடுப்பனவு (ஈ) ... ...** | **90** | **116** | **117** | **135** |
| **5. தேறிய பணக்குறை ... ... ...** | **430** | **566** | **607** | **716** |
| **6. வரவு செலவுத்திட்டக் குறையின் நிதியீட்டம்** | | | | |
| 6.1 உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | 50 | 112 | 72 | 10 |
| 6.2 உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | 334 | 498 | 418 | 630 |
| 6.3 வெளிநாட்டு நிதி . ... | 117 | 154 | 256 | 247 |
| 6.4 பண நிலுவைகளின் வீழ்ச்சி ... ... | 20 | – 82 | – 22 | – 36 |
| **7. தேறிய பணக்குறையின் நிதியீட்டம்** | | | | |
| 7.1 உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு ... | 50 | 112 | 72 | 10 |
| 7.2 உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... | 261 | 418 | 348 | 552 |
| 7.3 வெளிநாட்டு நிதி ... ... | 100 | 118 | 209 | 190 |
| 7.4 பண நிலுவைகளின் வீழ்ச்சி ... ... | 20 | – 82 | – 22 | – 36 |
| **8. நிதித் தொழிற்பாட்டின் விரிவுத்தாக்கம் ...** | **35** | **122** | **56** | **267** |
| **9. வெளிநின்ற பொதுப்படுகடன் (தேறிய) ...** | **3,772** | **4,268** | **4,782** | **5,689** |

(அ) பின்னிணைப்பு II இன் அட்டவணைகள் 31 இலும் 33 இலும் உள்ள அடிக்குறிப்புகளிற் தரப்பட்டுள்ள காரணங்களுக்கமைய இவ்வெண்தொகைகள் அரசாங்கக் கணக்குகளிலிருந்து வேறுபடும்.

(ஆ) 1967/68 வரை மீண்டெழும் செலவுகளாகப் பாகுபடுத்தப்பட்ட கடன் கரைப்பு நிதியக் கொடுப்பனவுகள், படுகடனின் நேரடித் திருப்பிக் கொடுப்பனவுகள், பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகள் என்பன ஒப்பிடற்கு ஏதுவாக மூலதனக் கணக்கிற்கு மாற்றப்பட்டுள்ளன.

அட்டவணை II (எ) 1

**கருக்கக்குறிப்பு 1964/65 — 1975 *(அ)***

பத்து இலட்சம் ரூபாய்களில்

| 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 15 மாதங்கள் | 1971/72 12 மாதங்கள்* | 1973 | 1974 அங்கீகரிக் கப்பட்ட மதிப்பீடுகள் | 1974 தற்கா லிகம் | 1975 அங்கீகரிக் கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| **2,497** | **2,736** | **2,815** | **4,102** | **3282** | **4,034** | **4,115** | **4,795** | **4,881** |
| **3,445** | **3.886** | **4,143** | **5,809** | **4,647** | **5,448** | **5,578** | **6,394** | **6,941** |
| 2,384 | 2,659 | 2,981 | 4,233 | 3,386 | 3,857 | 3,840 | 4,506 | 4,767 |
| 1,012 | 1,026 | 1,054 | 1,508 | 1,207 | 1,543 | 1,638 | 1,841 | 2,074 |
| 49 | 201 | 108 | 68 | 54 | 48 | 100 | 47 | 100 |
| **947** | **1,150** | **1,327** | **1,707** | **1,366** | **1,414** | **1,463** | **1,599** | **2,060** |
| **160** | **214** | **244** | **412** | **330** | **433** | **559** | **564** | **584** |
| **788** | **936** | **1,083** | **1,295** | **1,036** | **981** | **904** | **1,035** | **1,476** |
| 52 | 16 | 140 | 249 | 199 | 251 | 50 | - 33 | 65 (ஊ) |
| 358 | 815 | 693 | 1,004 | 803 | 706 | 873 | 964 | 657 |
| 426 | 345 | 370 | 598 | 478 | 394 | 540 | 629 | 754 |
| 111 | - 26 | 123 (உ) | - 144 | - 115 | 63 | — | 39 | — |
| 52 | 16 | 140 | 249 | 199 | 251 | 50 | - 33 | 65 (ஊ) |
| 271 | 720 | 585 | 835 | 668 | 507 | 585 | 671 | 657 |
| 354 | 226 | 235 | 355 | 284 | 160 | 269 | 358 | 754 |
| 111 | - 26 | 123 (உ) | - 144 | - 115 | 63 | — | 39 | — |
| **181** | **425** | **218 (உ)** | **139** | **112** | **- 53** | **153** | **24** | — |
| **6,239** | **7,237** | **8,108** | **9,448** | **7.558** | **10,281** | வி. கி. | **11,027** | வி.கி. |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(இ) தேசிய அபிவிருத்தி ஒதுக்குகளுக்கான செலவுக் கட்டணத்தையும் உள்ளடக்கும்.

(ஈ) கடன்கரைப்பு நிதியத்தின் கொடுப்பனவுகளையும், நேரடியான படுகடன் திருப்பிக் கொடுப்பனவுகளையும், பன்னாட்டு நிதி நிறுவனங்களுக்கான உதவு தொகைகளையும் உள்ளடக்கும்.

(உ) 1971-க்குறிய ஆண்டறிக்கையின் 176ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(ஊ) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி மதிப்பிடப்பட்ட தொகை ரூ. 730 இலட்சமாகும். ஆனால் தற்போது மதிப்பிடப்பட்ட தேவையான தொகை ரூ. 650 இலட்சமாகும்.

* விகிதசம அடிப்படையில்.

முக்கியமாக இவ்வாண்டு காலப்பகுதியில் தேசிய அரசப்பேரவையினுல் நிறைவேற்றப்பட்ட ரூ. 10,450 இலட்சம் கொண்ட (ரூ. 7,930 இலட்சம் மீண்டெழும் செலவையும், ரூ. 2,520 இலட்சம் மூலதனச்செலவையும் உள்ளடக்கும்) துணை மதிப்பீடுகள் காரணமாக ஏற்பட்டதாகும். இவ்வாண்டில், நிறைவேற்றப்பட்ட துணை மதிப்பீடுகளில் பெரும்' அளவானவை விலை உயர்வுகள் தொடர்பானவையாகும். இது இவவாண்டில் தேசிய அரசப் பேரவையினுல் அங்கீகரிக்கப்பட்ட மூல மதிப்பீடுகளில் ஒரு குழப்ப நிலையை ஏற்படுத்துவது போல் இருந்தது. ஆயினும், வாக்களிக்கப்பட்ட செலவுகளுடன் குறிப்பாக, மூலதன வாக்குகளுடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவு (துணை வாக்குகள் உட்பட) 25 சதவீத குறைச்செலவைக் காட்டுகின்றது, மொத்த அரசிறையும் மூல எதிர்பார்க்கைகளைவிட ரூ. 6,800 இலட்சத்தினுல் மிகவும் அதிகரித்தது. இது முக்கியமாக எமது உள்நாட்டு விலைகளிலும் ஏற்றுமதி விலைகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புகளால் ஏற்பட்டதாகும். இதன் விளைவாக வரவு செலவுத்திட்டக் குறையில் மூல மதிப்பீட்டுத் தொகையைவிட ரூ. 1,360 இலட்சம் கொண்ட அதிகரிப்பு மட்டுமே காணப்பட்டது. உள்நாட்டுச் சந்தையிலும் வெளிநாட்டு மூலங்களிலுமிருந்தும் அத்துடன் நிருவாக மூலங்களிலிருந்து என்ற அடிப்படையில் செய்யப்பட்ட மூல மதிப்பீடு மூலங்களிலிருந்து ரூ. 500 இலட்சம் கடனுகப் பெறப்படும் முந்திய இரு மூலங்களிலுமிருந்து முறையே ரூ. 910 இலட்சமும் ரூ. 890 இலட்சம் பெறப்பட்டமை உண்மையில் இறுதியாகக் குறிக்கப்பட்ட இக் கடன்பாடுகளில் ரூ. 330 இலட்சத்தைத் திரும்பச்செலுத்த முடிந்தது.

ஆய்வுக்குரிய ஆண்டின் நிதித் தொழிற்பாடுகள் ரூ. 240 இலட்சம் கொண்ட தேறிய பண விரிவை ஏற்படுத்தின. 1974ஆம் ஆண்டுக்கான மதிப்பீடுகள் தேசிய பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டபோது, இது நிரப்பப்படாத இடைவெளியான (இது வங்கி நிதியீட்டத்தை நாடி நிரப்பப்படவிருந்தது) ரூ. 1,530 இலட்சத்தை விட மிகவும் குறைந்ததாக இருந்தது. முன் குறிப்பிட்டதுபோல உயர்ந்த அரசிறை வரவுகளும், வங்கியல்லா மூலங்களிலும் வெளிநாட்டு மூலங்களிலுமிருந்து பெறப்பட்ட அதிகரித்த கடன்பாடுகளும் (அதாவது ரூபாய்க் கடன்கள்) தேறிய விரிவுத் தாக்கத்தை ரூ. 240 இலட்சமாக வைத்திருக்க உதவின. உண்மையில் ஆய்வுக்குரிய ஆண்டில் வங்கியிலிருந்து பெறப்பட்ட உள்நாட்டு சந்தைக் கடன்பாடு ரூ. 150 இலட்சத்தினுல் வீழ்ச்சி அடைந்தது. இதற்கு முந்திய ஆண்டில் அரசாங்கத்தின் நிதித் தொழிற்பாடுகள் ரூ. 530 இலட்சம் கொண்ட சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்தின.

குறிப்பிடத்தக்கவாறுன மேலதிக அரசிறைத் திரட்டுதல்களுக்கான வழிமுறைகள் நடைமுறைப்படுத்தப்படாத ஒரு ஆண்டில் அரசிறையானது ரூ. 7610 இலட்சத்தினுல் அல்லது 18.9 சதவீதத்தினுல் அதிகரித்தமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும். உண்மையில் மூல மதிப்பீடுகளின்படி மதிப்பிடப்பட்ட அரசிறை 1973 ஆம் நிதியாண்டின் உண்மையான அரசிறையை விட ரூ.810 இலட்சம் அல்லது 2 சதவீதம் மட்டுமேஅதிகரிக்குமென மதிப்பிடப்பட்டது. அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பில் பெரும் பங்கு வெளிநாட்டுத் துறையிலிருந்து குறிப்பாக ஏற்றுமதித் தீர்வைகளினுலும் வெ. சா. உ. சா. விற்பனவுகளிலிருந்து பெற்ற அரசிறையினுலும் ஏற்பட்டது. மறுபுறம் பார்க்கையில்

கவர்ச்சிதரும் செயலாற்றமாக இது அமைந்தபோதும் இவ்வதிகரிப்பின் பெருமளவுக்கு ஏற்றுமதிப் பொருட்களின் சாதகமான விலைகளும் இறக்குமதிகளின் அதிகரித்த விலைகளுமே காரணமென்பதனை யாம் நினைவில் வைத்தல் வேண்டும். வெளிநாட்டு வர்த்தகத்துறை அடிப்படையில் அமைந்த வரிகளும் அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடியதாயுள்ள மூலவளங்களின் அளவைத் தீர்மானிப்பதில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. எனினும் நிதியமைச்சரினால் 1975ஆம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட உரையில் குறிப்பிடப்பட்டது போல தற்போது நிலவும் நிலைகளில் குறிப்பிட்ட ஒரு தொகையான வெளிநாட்டுதவியானது வெ. செ. உ. சா. இறக்குமதித் தீர்வை, வியாபார மொத்த விற்பனவு வரிகள் என்பவற்றின் வாயிலாக உள்நாட்டு அரசிறை அரசாங்சாங்கத்திற்கு வழங்கும் அதேயளவு தொகையைத் தரமுடியும்.[1] முக்கியமாக உள்நாட்டு அடிப்படையில் அமைந்த வரிகளின் உற்பத்தித் தன்மையையும் இவ்வாறு வெளிநாட்டுதவி அதிகரிக்கச் செய்யுமென்பதும் கவனிக்கற்பாலது.

இவ் ஆண்டில் அரசிறையில் அடையப்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, ரூ. 2420 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையைப் பெறுவதற்கும் உதவியது. இம் மிகை, ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையான ரூ. 1750 இலட்சத்தை விட மிக உயர்ந்த அளவாகும். முந்திய ஆண்டையும் கவனத்தில் எடுக்கையில் அரசாங்கம் தனது நடைமுறைக்கணக்கில் ரூ. 1290 இலட்சம் கொண்ட மிகையை அடைவதில் (1968/69ஆம் ஆண்டுக்குப்பின் முதல் தடவையாக) வெற்றியடைந்தமை ஊக்கமளிக்கும் ஒரு போக்காக அமைந்துள்ளது. நடைமுறைச் செலவில் 20 சதவீதம் அளவிற்கு உணவு உதவு தொகைச் செலவை அரசாங்கம் வைத்திருந்தமையும், அரசிறையில் ஏற்பட்ட கணிசமான அளவு அதிகரிப்பும் இதற்கு முக்கியமாக வகைகூறும்.

நிதியாண்டின் முடிவில் தேறிய பொதுப்படுகடன் ரூ. 110,270 இலட்சமாக அமைந்து 1973ஆம் நிதியாண்டிற்குப்பின் ரூ. 7460 இலட்சத்தினால் அதிகரித்து விளங்கியது.

நடைமுறை நிதியாண்டான 1975இல் அரசிறையும் செலவும் முறையே ரூ. 48,810 இலட்சமாகவும் ரூ. 69,410 இலட்சமாகவும் அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செலவு ரூ. 47,670 இலட்சம் மீண்டெழும் செலவையும், ரூ 20,740 இலட்சம் மூலதனச் செலவையும் ரூ. 1.000 இலட்சம் முற்பணக் கணக்குகளின் பேரிலான தேறிய கொடுப்பனவையும் உள்ளடக்கும். இதன் விளைவாக ஏற்படும் வரவு செலவுத் திட்டக்குறை ரூ. 20,600 இலட்சமாகும் இக்குறையில் ரூ. 9,000 இலட்சம் உள்நாட்டுச்சந்தை கடன்பாடுகளாலும் ரூ. 10.950 இலட்சம் வெளிநாட்டு நிதியினாலும் நிதியீட்டப்பட்டு மிகுதியான தொகை ரூ. 650 இலட்சம் கொண்ட உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகளால்[1] நிதியீட்டப்படும். 1975ஆம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டம் 1975இன் நிதித் தொழிற்பாடுகளிலிருந்து எவ்வித தேறிய விரிவுத்தாக்கத்தையும் எதிர்பார்க்கவில்லை.

---

1 வரவுசெலவுத் திட்டம் 1975 பக்கம்.....

*நிதிப் போக்குகள்*

முன்பு குறிப்பிட்டவாறு 1974இன் வரவு செலவுத்திட்டத் தொழிற்பாடுகள் மிகச் சிறு அளவான ரூ 240 இலட்சம் கொண்ட தேறிய விரிவுத் தாக்கத்தையே ஏற்படுத்தின. 1973இல் அரசாங்கத்தின் நிதித் தொழிற்பாடுகள் ரூ. 530 இலட்சம் கொண்ட தேறிய சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்தின. அட்டவணை 11 (எ) 1இல் காணப்படுவது போல 1973ஆம் ஆண்டுக்கு முந்திய அரசாங்கத்தின் நிதித் தொழிற்பாடுகள் கணிசமான அளவு விரிவுத் தாக்கலையே ஏற்படுத்தி 1969/70இல் மிக உயர்ந்த ஆண்டாக ரூ. 4250 இலட்சம் கொண்ட விரிவுத் தாக்கத்தைக் கொண்டிருந்தது. அரசாங்கம் உள்நாட்டு வங்கியல்லாத் துறையிலிருந்து முக்கியமாக ரூபாக் கடன்கள் வாயிலாகச் கணிசமான அளவு தொகையைப் பெற முயற்சித்த கடந்த இரு ஆண்டுகளிலும் இவ் விளைவுத் தாக்கல்களை நிருவகிக்கப்படத்தக்க ஒரு எல்லைக்குள் வைத்திருக்க முடிந்தமை சிறியதொரு விடயமல்ல இந் நீண்டகாலக் கடன்கள் அரசாங்கத்தின் ஆதிக்கத்தில் ஊழியர் சேமநிதிகள், தேசிய சேமிப்பு வங்கி. இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் போன்றவற்றின் வாயிலாகக் கிடைக்கத்தக்கதாக இருந்த அதே வேளையில் அத்தகைய கடன்பாடுகளின் வட்டிச் செலவுகளும் அண்மை ஆண்டுகளில் தொடர்ந்து குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டின. அரசாங்கத்திற்கு மிகப் பெருமளவிற் கிடைக்கத் தக்கதாயிருந்த வங்கியல்லா மூலங்களிலிருந்து பெற்ற நிதிக்கும் அதன் விளைவாக வட்டிச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கும் காரணங்கள் வேறோரிடத்தில் விரிவாகத் தரப்பட்டுள்ளன.[1] எனினும். கடந்த இரு வருடங்களிலும் வட்டிச் செலவும் அதிகரித்த நிலையிலும் குறிப்பிடத்தக்க அளவான நடைமுறைக் கணக்கு மிகையை ஏற்படுத்த முடிந்தமை மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும். சில சமயம் அரசாங்கத்திற்கு ஒரு குறிப்பிட்ட செலவில் பெறப்பட்ட இந்நிதிகளின் உற்பத்தித் தன்மை வற்புறுத்தப்பட்டமை மூலதனச் செலவிற்குக் கிடைக்கத் தக்கதாயுள்ள நிதியின் அளவையும், பொருளாதார வளர்ச்சிக்கு அரசாங்க உதவுதொகையையும் பொறுத்தவரை அரசாங்கத் தொழிற்பாடுகளை ஊக்குவிப்பதற்குப் பெருமளவில் உதவக்கூடும்

முழுமையாகப் பார்க்கையில் ஆய்வுக்குரிய ஆண்டிலும் அதற்கு முந்திய ஆண்டிலும் அரசாங்கம் வங்கியமைப்பிடம் கொண்டிருந்த தனது கடன்பாட்டை குறைக்கக்கூடியதாயிருந்தது என்பது கவனிக்கற்பாலது. 1974இல் மத்திய வங்கியிடமிருந்து பெற்ற கடன்பாடுகள் ரூ.1120 இலட்சத்தினால் அதிகரித்த அதே வேளையில் அரசாங்கம் வர்த்தக வங்கிகளிடம் கொண்டிருந்த தனது கடன் பாட்டை ரூ. 1270 இலட்சத்தினால் குறைத்துக்கொண்டது. அரசாங்கத்தினால் நிறைவு செய்யப்படவேண்டியிருந்த தேறிய பணக்குறையும் 1970/71இலிருந்து வீழ்ச்சியடைந்து செல்கின்றது. இது தவிர, 1974இல் நிதித் தொழிற்பாடுகளின் தேறிய பண விரிவுத் தாக்கத்தையும் ஒரு அளவிற்குள் வைத்திருப்பதற்கு வெளிநாட்டு நிதி பெருமளவில் கிடைக்கத்தக்கதாயிருந்தமை பெருமளவிற்கு உதவியது. ஆய்வுக்குரிய ஆண்டில், வெளிநாட்டு நிதியின் தேறிய வரவுகள் 1973இன் ரூ. 1600 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 3580 இலட்சமாக அமைந்தன. 1974இல் வெளிநாட்டு நன்கொடைகள் குறிப்பிடத்தக்களவு உயர்வாக ரூ. 2310 இலட்சமாக இருந்தன. மிகப்பெரும் அளவில் கிடைக்கத்

தக்கதாகவிருந்த வெளிநாட்டு நிதியும், ரூ 6860 இலட்சம் கொண்ட என்றுமில்லா அளவு உயர்வான உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகளும் அரசாங்கம் வங்கித்துறையிடம் கொண்டிருந்த அதன் கடன்பாட்டைக் குறைக்க முடிந்ததுடன் நிதித் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத்தாக்கத்தையும் ஒரு எல்லைக்குள் வைத்திருக்க முடிந்தது. பணரீதியிலான மீண்டெழும் செலவு கணிசமான அளவு அதிகரித்த ஒரு ஆண்டில் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு அதிகரித்த மீண்டெழும் செலவை விஞ்சிய அளவில் அமைந்து ரூ. 2420 இலட்சம் கொண்ட நடைமுறைக் கணக்கு மிகையையும்[1] ஏற்படுத்தியமை ஆய்வுக்குரிய ஆண்டின் நிதித் தொழிற்பாடுகளில் குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்தது. 1974ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் எவ்வித முக்கிய நிதித் தாக்கமுடைய புதிய அரசிறை வழிமுறைகள் எடுத்துரைக்கப்படாத போதும், அல்லது இவ்வாண்டு காலத்தின்போது எவ்வித வழிமுறைகளும் புகுத்தப்படாதபோதும் அரசிறையில் அதிகரிப்புப் பெறப்பட்டது பொதுப் படையான நோக்கில் அரசாங்கச் சேமிப்பில் கவர்ச்சிகரமான பதிவை ஏற்படுத்துவதில் இரு காரணிகள் முக்கிய பங்கை வகித்தன. முதலாவதாக, இவ் ஆண்டு காலத்தில் எமது ஏற்றுமதிகள் பெற்ற சாதகமான விலைகள் வடிவில் அரசிறை அடிப்படையானது மிகவும் உயர்ந்த உற்பத்தித் தன்மையுடையதாக அமைந்ததுடன் அதே வேளையில் அதே அளவில் கிடைக்கத்தக்கதாயிருந்த வெளிநாட்டு நிதியும் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட பொதுவான அதிகரிப்பும் உயர்ந்த அளவான அரசிறை ஏற்படுவதற்குத் துணைபுரிந்தன: இவ்வாறு வரி வீதங்களில் அடிப்படை மாற்றங்கள் இல்லாத போதும் உயர்ந்த, அளவான அரசிறை வரவுகளுக்கு உள்நாட்டு விலை உயர்வுகள் பெரிதும் உதவின. இரண்டாவதாக, அதேயளவு முக்கியத்துவமுடைய விடயம் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சி உணவு உதவு தொகை செலவை ஒரு எல்லைக்குள் வைத்திருக்கும் முறையில் செலவைக் கட்டுப்படுத்தின. குறிப்பாக இறக்குமதி விலைகளும் உள்நாட்டு விலைகளும் அதிகரித்த ஒரு ஆண்டில் இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பின் உணவு உதவு தொகைச் செலவான அச்சத்திற்குரிய ஒரு நிலையை ஏற்படுத்தியிருக்கும்.

அண்மை ஆண்டுகளில் முதல் தடவையாக உணவுப் பொட்களின் விற்பனையிலிருந்து எவ்வித இலாபமும் பெறமுடியவில்லை இவற்றின் விநியோகமும் விற்பனையும் வழமையாக உணவு ஆணையாளராலேயே கையாளப்பட்டன. உண்மையில், சீனி, மா என்பவற்றைப் பொறுத்தவரை அவற்றிலிருந்து பெறப்படும் இலாபத்தை அதிகரிப்பதை விட அவற்றிலிருந்து பெறப்படும் நட்டத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் பல வழிமுறைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திக்கப்பட்டது.[2] 1973 ஒற்றேரபரிலும், ஆய்வுக்குரிய ஆண்டு காலப்பகுதியிலும் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட வழிமுறைகளின் உண்மையான தாக்கமே உணவு உணவுதொகைச் செலவை மீண்டெழும் செலவின் 20 சதவீதமான அளவிற்குக் கட்டுப்படுத்தி வைத்திருப்

1. எனினும் திருத்தியமைக்கப்பட்ட பொருளாதார, தொழிற்பாட்டு பகுப்பாய்விற்கு ஏற்ப நடைமுறைக் கணக்கு மிகை ரூ. 2000 இலட்சமாக இருந்திருக்கும் இத்தொகை கடந்த காலச் செயலாற்றத்துடன் நோக்குகையில் மிகக் கணிசமானளவாக விளங்குகின்றது.

2 விபரங்களுக்கு ஏனைய நிதி வழிமுறைகள் என்ற பகுதியைப் பார்க்கவும்.

பதற்குப் பெரிதும் பொறுப்பாக இருந்தது என எண்ணும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. எனினும், 1974ஆம் ஆண்டுக்குரிய உணவு உதவு தொகைச் செலவு ரூ. 9250 இலட்சமாக அமைந்து அதற்கு முந்திய ஆண்டின் செலவை விட ரூ. 2240 இலட்சம் (அல்லது 32 சதவீதம்) கூடுதலாக விளங்கியது. 1974இல் உணவு உதவு தொகைச்செலவும் மொத்த மீண்டெழும் செலவின் 18 சதவீதத்திலிருந்து 20 சதவீதமாகச் சிறிதளவு அதிகரித்த வேளையில் கடந்த நான்கு வருடங்களிலும் உணவுப் பொருட்களின் விலை அதிகரித்த நிலையிலும் இவ் விகிதாசாரமானது ஏறக்குறைய இந்த அளவினதாகவே மாற்றமடையாதிருந்தது. சில சமயம், இலாபம் தருமெனக் கருதப்படும் விடயங்களின் விற்பனை விலைகளைப் பொறுத்து மிக நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையுடைய கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருப்பின் அது உணவு உதவு தொகைச் செலவைக் குறைக்க உதவியிருக்கலாம்

1973ஆம் ஆண்டறிக்கையில் அண்மை ஆண்டுகளின் வரவு செலவுத் திட்டங்களுடன் புகுத்தப்பட்ட அரசிறை வழிமுறைகளையும், மேலதிக மூல வளங்களைத் திரட்டும் முயற்சியில் அவற்றின் பங்கையும் பற்றிக் குறிப்பிடச் சந்தர்ப்பம் கிடைத்திருந்தது. இத்தகைய வழிமுறைகளை அடிக்கடி நாடுதல் அடிப்படையில் வரியமைப்பின் நெகிழ்ச்சியற்ற தன்மையைப் பிரதிபலிக்கின்றதென எடுத்துக்காட்டப்பட்டது. ஆய்வுக்குரிய ஆண்டின் அரசிறைச் செயலாற்றமானது வரியமைப்பின் குறிப்பாக வெளிநாட்டு வர்த்தகக் கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்ட வரியமைப்பின் நெகிழ்ச்சித் தன்மையில் பெரிதளவுக்குத் தங்கியிருத்தலைத் தெளிவாக எடுத்துக்காட்ட உதவுகின்றது. மறுசொற்களில்கூறின் கடந்த காலத்தில் எமது முக்கிய வரிமூலங்களின் உற்பத்தித் தன்மையற்ற நிலைக்கு எமது ஏற்றுமதிகளின் முக்கியமாக விலை ரீதியிலான செயலாற்றத் திறமையின்மையே முக்கிய காரணமாகும். வரி அடிப்படையை விரிவுபடுத்தலுடன் தொடர்புடைய அல்லது வரி வீதங்களில் மாற்றத்துடன் தொடர்புடைய வழிமுறைகளை அடிக்கடி நாடுவதற்கும் இதுவே காரணமாகும். வெளிநாட்டு வர்த்தகத்துறையின் செயலாற்றம் அவ்வளவு ஊக்குவிக்கும் தன்மையுடையதாக இல்லாத நிலையில் அரசிறை அமைப்பு முறையினல் ஏற்படக்கூடிய அதிகரிப்பின் மட்டத்திற்கேற்ப உணவு உதவு தொகைச் செலவு போன்ற இயல்பாகவே நெகிழ்வுத் தன்மையுடைய விடயங்களின் மீண்டெழும் செலவைக் கட்டுப்படுத்தவேண்டிய தேவையை இது எடுத்துக் காட்டுகின்றது.

கடந்த 10 வருடங்களில் அரசாங்கத்தின் அரசிறையும் செலவும் ஆண்டுக்கு 11.1 சதவீத, 11.2 சதவீதக் கூட்டு வீதத்தில் அதிகரித்துள்ளன. எனினும் கடந்த ஐந்து ஆண்டுகளில் இதில் ஒரு சிறு முன்னேற்றம் ஏற்பட்டுளது. இக்காலத்தில், மீண்டெழும் செலவில் ஏற்பட்ட 12.4 சதவீத (கூட்டு) சராசரி. வீதத்தைவிட அரசிறையில் ஏற்பட்ட 15.0 சதவீத (கூட்டு சராசரி வீத அதிகரிப்பு கூடிய ஒன்ருகக் காணப்படுகிறது. இத்தனித்த முன்னேற்றமே கடந்த இரு வருடங்களிலும் நடைமுறைச் கணக்கு மிகை வடிவில் வெளிப்பட்டது. மறுபுறம் கடந்த பத்து வருடங்களிலும் மூலதனச் செலவில் ஏற்பட்ட வருடாந்தச் சராசரி அதிகரிப்பு வீதம் 11.8 சதவீதமாக (கூட்டு) அமையக் கடந்த ஐந்து வருடங்களிலும் இவ் அதிகரிப்பு 12.2 சதவீதமாக (கூட்டு) மட்டுமே அமைந்திருந்தது.

## அட்டவணை II (எ) 2

## அரசிறை, செலவீடு, நடப்புக் கணக்குச் சேமிப்புக்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1964/65 | 1965/66 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72* | 1973 | 1974 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை .. .. | 1816 | 1833 | 1955 | 2156 | 2497 | 2736 | 2815 | 3282 | 4034 | 4795 |
| 2. மீண்டெழும் செலவு | 1803 | 1860 | 1895 | 2186 | 2384 | 2659 | 2981 | 3386 | 3857 | 4506 |
| கூட்டுக: முற்பணக் கணக்குகள்... | – 28 | 10 | 42 | – 29 | 49 | 201 | 108 | 64 | 48 | 47 |
| | 1775 | 1870 | 1937 | 2157 | 2433 | 2860 | 3089 | 3440 | 3905 | 4553 |
| 3. நடைப்புக் கணக்கு மிகை (1-2) .. | 41 | – 37 | 18 | – 1 | 64 | –124 | –274 | –185 | 129 | 242 |
| 4. மூலதனச் செலவு .. | 561 | 644 | 742 | 849 | 1012 | 1026 | 1054 | 1207 | 1543 | 1841 |
| கழிக்குக: கடன் மீளக் கொடுப் பனவுகள் .. | 90 | 116 | 117 | 135 | 160 | 214 | 244 | 330 | 433 | 564 |
| | 471 | 528 | 625 | 714 | 852 | 812 | 810 | 877 | 1110 | 1277 |
| 5. அரசிறை மொ. தே. உற்பத்தியின் சதவீதமாக ... .. | 24.3 | 23.8 | 23.7 | 21.8 | 23.3 | 23.7 | 23.9 | 25.9 | 26.6 | 24.4 |
| 6. மீண்டெழும் செலவு மொ. தே. உற்பத்தியின் சதவீதமாக ... | 23.7 | 24 3 | 23.4 | 21.8 | 22.7 | 24.7 | 26.2 | 27.1 | 25.8 | 23.1 |

* மாத விகித சம அடிப்படையில்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 11 (எ) 2 கடந்த பத்து வருடங்களின் நடைமுறைக் கணக்கு மிகை அல்லது குறை பற்றிய தரவையும், மூலதனச் செலவையும் தருகின்றது. மேலும் அது இதே காலத்தில் மொ. தே. உற்பத்தியின் வளர்ச்சியில் அரசிறையும் மீண்டெழும் செலவும் எவ்வளவுக்குப் பங்கு வகித்தன என்பதையும் காட்டுகின்றது பொதுப்படையாக இவ் அட்டவணையிலிருந்து வெளிப்படும் தன்மையைக் கடந்த இருவருடங்களினதும் செயலாற்றத்தைக் கொண்டு அளவிடின் மிகவும் உற்சாகமளிப்பதாயுள்ளது. முதலாவ்தாக, கடந்த இரு நிதியாண்டுகளிலும், ஏற்றுக்கொள்ளத்தக்க அளவான நடைமுறைக் கணக்கு மிகையை ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது. உண்மையில் இது தொடர்பான 1974 ஆம் ஆண்டுக்குரிய பதிவு கவனத்தை ஈர்க்கத்தக்கதாக உளது. இதில் மூலதனச் செலவை நிதியீட்டுவதற்குத் தேவையான நிதியில் ஐந்திலொரு பங்கு அரசாங்கத்தின் சொந்தச் சேமிப்பிலிருந்து பெறப்பட்ட தென்பது குறிப்பிடத்தக்கது. இன்னுமொரு கவனிக்கத்தக்க விடயம் என்ன வெனில் மீண்டெழும் செலவின் வளர்ச்சி வீதம் மொ. தே. உ. வளர்ச்சி வீதத்தை விடக் குறைவாகவேயிருந்து வந்துள்ளது. 1967/68 இலிருந்து மொ தே. உ. வளர்ச்சியை விடக் கூடுதலாகவிருந்த மீண்டெழும் செலவானது கடந்த இரண்டு வருடங்களிலும் மொ. தே. உற்பத்தியின் விகிதாசாரமாக வீழ்ச்சியடைந்து செல்கின்றது. மறுபுறம், 1967/68 இலிருந்து படிப்படியாக அதிகரித்துச்சென்ற அரசிறை மொ. தே. உ. விகிதாசாரம் 1973இல் 26.6 வீதத்திலிருந்து 1974இல் 24.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் முழுமையாக நோக்கில் முன்பு கூறப்பட்டதுபோல் குறிப்பிடத்தக்க அரசிறை வழிமுறைகள் ஏதும் மேற்கொள்ளப்படாத ஒரு ஆண்டில் அரசிறையில் ஏற்பட்ட ரூ. 7610 இலட்சம் கொண்ட அதிகரிப்பு மிகவும் கவர்ச்சியளிப்பதாக அமைந்துள்ளது.

அண்மை ஆண்டுகளில் அரசாங்கம் எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை உயர்ந்த வரி மொ. தே. உ. விகிதாசாரத்துடன் சமூக நலப்பணிக் கொள்கைகள் குறிப்பாக உணவு உதவு தொகை, கல்வி என்பவற்றில் செலவிடுவதன் காரணமாக வளர்ந்து செல்லும் மீண்டெழும் செலவைக் கட்டுப்படுத்தி வைப்பதேயாகும். பொருளாதாரத்தின் குறைவான வளர்ச்சி வீதத்தின் நோக்கில் அண்மைக்கால அனுபவங்கள் காட்டுவதுபோல செலவுத் தொகையை ஈடுசெய்வதும் மேலும் அரசாங்கத்திற்கு அதன் முதலீடுகளை அதிகரிப்பதற்குப் போதிய அளவான சேமிப்பை ஏற்படுத்துவதும் மிகவும் கடிமானதொன்றாக வுளது. கடந்த இரண்டு வருடங்களிலும் மீண்டெழும் செலவு ஓரளவு கட்டுப் பாட்டிற்குள் வைத்திருக்கப்பட்டதுடன் வெளிநாட்டு வர்த்தகத் துறையி லிருந்து பெறப்பட்ட அரசிறையின் அதிகரிப்பினால் ஏற்பட்ட உயர்ந்தனவான அரசிறை இதற்குப் பெரிதும் உதவியது. இவை யாவும் நுகர்வுச் செலவைக் குறைப்பதற்கு (முக்கியமாக உணவு உதவு தொகைச் செலவை மையமாகக் கொண்டது) தேவையான வழிமுறைகளை வேண்டி நிற்பதுடன் நிதிச் செயற் பாட்டில் கவனிக்கப்பட்ட பொதுவான முன்னேற்றம் அரசாங்கத்தினால் மேற் கொள்ளப்பட்ட இவ்வழிமுறைகளுக்கு மிகவும் வேண்டியதாகவிருந்தது.

இந்த ரீதியில் மிக உற்சாகமூட்டும் போக்குக் காணப்படும் அதே வேளையில் குறைச் செலவு பற்றிய குழப்ப நிலையையும் நாம் கவனிக்காமல் விடமுடியாது.

பின் ஓரிடத்தில் விரிவாகக் கூறப்பட்டிருப்பது போல, இது வாக்களிக்கப்பட்ட நிதிகள் தொடர்பான குறிப்பாக மூலதனச் செலவுகள் தொடர்பாக ஏற்பட்ட குறைச் செலவு 15 சதவீதத்திலிருந்து படிப்படியாக 25 சதவீதமாக அல்லது வாக்களிக்கப்பட்ட செலவின் கால் பங்காக விளங்குகிறது. உண்மையில் தேசியப் பேரவையில் வரவு செலவுத்திட்ட எடுத்துரைப்புகள் சமர்ப்பிக்கப் படும்போது மூலதன வாக்குகளின் பேரில் எதிர்பார்க்கப்படும் குறைச் செலவிற்காக 25 சதவீத வெட்டு அனுமதிக்கப்படுகின்றது. நிதியாண்டில் ஏற்படும் உண்மையான செலவுகள் இவ் எதிர்பார்ப்பு பெருமளவு சரியென்பதை எடுத்துக் காட்டுகின்றது. செலவழிக்கப்படாத பணத்தில் பெருந்தொகையான பங்கு வெளிநாட்டுச் செலாவணிச் செலவுகளை உள்ளடக்கும் செயற்றிட்டங்கள் தொடர்பானதாகும், எனவே பின்கூறப்பட்டதில் ஏற்படும் எவ்வித தாமதமும் இப்பணத்தைச் செலவிடும் முயற்சியில் தாமதத்தை ஏற்படுத்தக்கூடும். எனினும் வாக்களிக்கப்பட்ட செலவில் குறைச் செலவு கால் பங்கு என்ற மட்டத்தில் இருப்பதைத் தவிர்க்க முயற்சியெடுத்தல் அவசியமாகும்.

மேலும் குறிப்பிட்ட ஆண்டில் அரசாங்கக் கணக்குகளில் காட்டப்படும் உண்மையான மூலதனச் செலவானது ஆண்டுகாலத்தின்போது உண்மையில் செலவு செய்யப்பட்ட பணத்துடன் எல்வித தொடர்புமுடையதாகத்தோன்ற வில்லை. ஏனெனில் வாக்களிக்கப்பட்ட பணம், முக்கியமாகக் கூட்டுத் தாபனங்களைப் பொறுத்தவரை நிதியாண்டின் முடிவிற்கு முன்னரே உரிய கூட்டுத்தாபனங்களுக்கு அவை மாற்றல் செய்யப்பட்டு புத்தகப் பதிவேடுகளில் பிரதிபலிக்கப்பட்ட நிலையிலும் அவை உண்மையில், அதே ஆண்டில் செலவிடப் படுவதில்லை இவ்வாறு மாற்றல் செய்யப்பட்ட தொகைகள் உண்மையில் செலவு செய்யப்படாது ஒவ்வொரு நிதி ஆண்டின் முடிவிலும் திறைசேரி வைப்புக் கணக்குகளில் வரவு வைக்கப்படுகின்றன. இம்மாற்றல்கள் அரசாங்கக் கணக்குகளில் செலவாகக் காட்டப்பட்டபோதும் திறைசேரியில் வைக்கப்பட்ட இவ்வைப்புக்கள் நிதியீட்டப்பக்கத்தில் நிருவாக கடன்களாக அல்லது இச்செலவை நிதியீட்டம் செய்யும் உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு களாகக் கணிக்கப்படுகின்றன. மறுபுறம் திறைசேரியிலுள்ள இவ்வைப்புக்கள் குறிப்பிட்ட ஆண்டில் கூட்டுத்தாபனங்களினால் செலவழிக்கப்படும் போது குறைவடைகின்றன. ஆயினும் இவ்வாறு செலவிடப்பட்ட தொகையானது இவ் ஆண்டுக்காலத்தில் வாக்களிக்கப்படாத தொகையாகவிருக்கும் திறை சேரியின் கவனத்திற்கு இது கொண்டுவரப்பட்ட பின் அண்மை ஆண்டுகளில் அரசாங்கக் கணக்குகளின் காட்டப்பட்ட மூலதனச் செலவின் உண்மையான அளவைப் பெரிதுபடுத்திக் காட்டும் தன்மைக்கு இது வழிவகுப்பதினால் இம் முறை தொடர்வதைத் தடுப்பதற்குத் திறைசேரி பெருமளவு முயன்றுள்ளது.[1] உண்மையில், முந்திய ஆண்டுகளில் பல அரச கூட்டுத் தாபனங்களால் இவ்வாறு வைக்கப்பட்ட வைப்புக்களான ரூ. 650 இலட்சம் கொண்ட தொகை ஆய்வுக் குரிய ஆண்டில் அரசிறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டதினால் அர சாங்கக் கணக்கிலிருந்து நீக்கப்பட்டது. எனினும் அரசாங்க அரசிறையின் எமது மீளப்பகுப்பாய்வு செய்யப்பட்ட எண்தொகையில், அரசிறையில்

---

1 1974 வரவு செலவுத்திட்டத்தின் ...பக்கத்தைப் பார்க்கவும்.

ஏற்பட்ட இது தொடர்பான வீக்கமானது சீராக்கம் செய்யப்பட்டு, 1974இன் உண்மையான அரசிறைத் தொகை காட்டப்படுகின்றது.

அண்மை ஆண்டுகளில் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் அரசாங்கத்தின் மொத்த மூலதனச் செலவீட்டில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பங்கின் அளவிற்கு வகை கூறுகின்றன. அத்தகைய கூட்டுத் தாபனங்களின் எண்ணிக்கை அதிகரிப்புடன் புதிய கூட்டுத்தாபனங்களை நிறுவுவதிலும் தற்போதுள்ளவற்றை விரிவாக்குவதிலும் இத்தகைய மாற்றல்களின் அளவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கூட்டுத் தாபனங்களின் தொழிற்பாடுகள் பன்முகப்படுத்தப்பட்ட அதே வேளையில் அவை தம்மைப் பொறுத்தவரை நன்ருக இயங்குவது மட்டும் முக்கியமல்ல, வரவு செலவுத் திட்டத்தின் மூலம் தாம் பெற்ற வாக்களிக்கப்பட்ட மூலதனச் செலவையும் இவை அரசாங்கத்திற்குத் திருப்பிக் கொடுக்கக்கூடிய நிலை ஏற்படவேண்டும். கூட்டுத்தாபனங்கள் இலாபத்துடனும் திறமையுடனும் இயங்காதுவிடின் மூலதன மாற்றல்கள் மீது வட்டி உதவுதொகை என்ற வடிவில் வரவு செலவுத்திட்டத்தில் பாதகமான விளைவை ஏற்படுத்துவதுடன் அரசாங்க நடைமுறைச் செலவையும் அதிகரிக்கச் செய்து, இவ்வாறு ஏற்பட்ட நட்டங்களுக்கு மீளளிப்புச் செய்யவேண்டிய கட்டாய நிலைக்கும் அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படுகின்றது. இக் கூட்டுத்தாபனங்கள் ஆற்றவேண்டிய அதிகரித்த பணிகளை எதிர்பார்க்கையில் இவற்றில் முதலீடு செய்யப்படும் அரசாங்க நிதி போதியளவு உற்பத்தித் தன்மையுடையதாக அமைய வேண்டுமென்பதும் முக்கியமாக உறுதிப்படுத்தப்படவேண்டும். இதை நினைவிற் கொண்டே அரசாங்கம் 1971இன் எண் 38 தாங்கிய நிதிச்சட்டம் உட்பட ஏனைய பல வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியுள்ளது. எனினும், அதிகமான அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் அவற்றிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட இலக்கை அடையக் கூடிய வகையில் அவற்றின் செயலாற்றம் அமையவில்லை என்பதற்குச் சான்றுண்டு.

கடந்த சில ஆண்டுகளில் அரசாங்கத்தின் வரவுகளும் கொடுப்பனவுகளும் பற்றிய பின்வரும் ஆய்வானது அரசாங்கக் கொடுக்கல் வாங்கல்களின் மீளாய்வு செய்யப்பட்ட பொருளாதாரத் தொழிற்பாட்டுப் பாகுபாட்டின் அடிப் படையில் அமைந்துள்ளது. அரசாங்கத்தின் அரசிறை, செலவு என்பவற்றின் மீளப்பகுப்பாய்வு செய்யப்பட்ட நடைமுறை, மூலதன ஆக்கக்கூறுகளைப் பெறுவதற்காக அரசாங்கக் கணக்குகளில் தரப்பட்ட அரசிறை, செலவு எண் தொகைகளில் சில சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. 1970/71 தொடக்கம் அரசிறை, செலவு எண்தொகைகள் அரசாங்கக் கணக்குகளில் பிரசுரிக்கப்பட்ட எண் தொகைகளுடன் இணக்கம் செய்யப்பட்டு பின்வரும் அட்டவணை II (எ) 3இல் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (எ) 3

## அரசாங்கத்தின் அரசிறையும் செலவீடும் 1970/71 – 75 இணக்கம் செய்தல்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1970/71 | 1971/72 (எ) | 1973 | 1974 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) | 1974 (தற்காலிக மானவை) | 1975 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) |
|---|---|---|---|---|---|---|
| 1. அரசிறை (தலைப்புகள் 1-16 வரை)1 | 2,815.3 | 4,108.5 | 4,045.8 | 4,114.6 | 4,794.6 | 4,881.1 |
| கூட்டுக: உணவுவிற்பனைகளிலிருந்து இலாபங்கள் (அ) ... | 77.9 | — | — | — | — | — |
| கழிக்க: அரிசி மானிய வரி ... | 2.6 | — | — | — | — | — |
| 2. மொத்த அரசிறை ... .. | 2,890.5 | 4,108.5 | 4,045.8 | 4,114.6 | 4,794.6 | 4,881.9 |
| 3. மீண்டெழுஞ் செல்வு (வாக்குகள் 1, 2, 4, 6) (ஆ) ... | 2,980.5 | 4,128.6* | 3,850.0* | 3,918.6 | 4,505.7 | 4,862.1 |
| கழிக்க: தேறியஉணவுமானியம்(இ) | 508.0 | — | — | — | — | — |
| கூட்டுக: உணவு விற்பனைகளின் மீதான நட்டங்கள் (ஈ) | 614.1 | — | — | — | — | — |
| கழிக்க: மீண்டெழும் வாக்குகளிலுள்ள மூலதனவிடயங்கள் (உ) | 108.6 | 142.0 | 121.0 | 96.4 | 100.3 | 122.2 |
| கூட்டுக: மூலதன வாக்குகளிலுள்ள நடைமுறைவிடயங்கள் (ஊ) | 118 7 | 98.2 | 70.1 | 68.1 | 77.4 | 24.1 |
| 4. நடைமுறைக் கொடுப்பனவுகள் ... | 3,096.7 | 4,084.8 | 3,799.1 | 3,890.3 | 4,482.8 | 4,764.0 |
| 5. மூலதனச் செலவு (வாக்குகள் 3, 5, 7) (ஆ) ... | 809 7 | 1,096.4 | 1,109.9 | 1,438.1 | 1,277.0 | 1,987.4 |
| கூட்டுக: மீண்டெழும் வாக்குகளிலுள்ள மூலதனவிடயங்கள் (உ) | 108.6 | 142.0 | 121 0 | 96.4 | 100.3 | 122.2 |
| கழிக்க: மூலதன வாக்குகளிலுள்ள நடைமுறை விடயங்கள் (ஊ) | 118.7 | 98.2 | 70.1 | 68.1 | 77.4 | 24.1 |
| 6. மூலதனக் கொடுப்பனவுகள் .. | 799.6 | 1,140.2 | 1,160.8 | 1,466.4 | 1,299.9 | 2,085.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) கோதுமை மா, சீனி மற்றும் சில உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து கிடைத்த இலாபங்கள்.

(ஆ) கடன்கரைப்பு நிதி உதவுதொகைகளும், பொதுப்படு கடனுக்கான நேரடிக் கொடுப்பனவுகளும், சர்வ தேச நிறுவனங்களுக்கான விஷேட கொடுப்பனவுகளும், மூலதனச் செலவீட்டிலிருந்து நீக்கப்பட்டன. 1969/70, 1970/71 உக்கான எண் தொகைகள் (தற்காலிகமானவை) முறையே, வெளிநாட்டுப்படு கடனுக்கான நேரடித் திருப்பிக் கொடுப்பனவுக்கான வெ. செ. உ. சா. செலவு சில அரச கூட்டுத்தா பனத்துக்குரிய வெ. செ. உ. சா. அளிப்புக் கொடுப்பனவு ஆகிய ரூ. 392 இலட்சத்தையும் ரூ. 309 இலட்சத்தையும் நீக்குகின்றன. பிந்திய எண் தொலககள் மூலதனச் செலவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(இ) அரசாங்கக் கணக்குகளில் காட்டப்பட்டுள்ளபடி சீனி, கோதுமை மா, குறிப்பிட்ட சில விடயங்கள் என்ப வற்றின் விற்பனையிலிருந்து வந்த இலாபத்தைக் கழித்து அரிசி, வெண்காயம் என்பவற்றின் மீதான உற்பத்தியாளர், நுகர்ச்சியாளர்களுக்கான மானியங்களை உள்ளடக்கும்.

(ஈ) அரிசி, வெண்காயம் எனைய உணவுப் பொருட்கள் என்பவற்றின் கொள்வனவு, வழங்கல் மூலம் ஏற்பட்ட நட்டங்கள்.

(உ) முக்கியமாக மூலதன வேலைகளின் பராமரிப்புச் செலவையும், மூலதன வேலைகளில் ஈடுபட்டவர்களின் சம்பளங்களையும் உள்ளடக்கும்.

(ஊ) முக்கியமாக மூலதன வாக்குப் பணங்களிலடங்கிய பாதுகாப்புச் செலவையும் நடைமுறை மாற்றங்களையும் உள்ளடக்கும்.

(எ) 15 மாதங்கொண்ட காலப்பகுதி (1-10-71 தொட்டு 31-12-72 வரை) 1971/72 இலிருந்து உணவுப் பொருட்கள் விற்பனையின் இலாபம் அரசிறை வருவாயாகவும் மானியங்கள் செலவீட்டின்கீழ் மொத்த அடிப்படையிலும் காட்டப்பட்டுள்ளன. ஆகவே, 1971/72 றகுரிய எண் தொகைகளின் பொருந்தச் செய்தலில் இவ்விடயங்கள் காட்டப்படவில்லை.

* அரசாங்கக் கணக்குகளில் காட்டப்பட்ட உணவுமானிய எண்தொகைகளுக்கும் உணவு ஆணையாளரால் வழங்கப்பட்ட எண் தொகைகளுக்குமிடையேயுள்ள வேறுபாடு காரணமாக 1971/72, 1973 எண் தொகைகளான முறையே ரூ. 101. 8 இலட்சமும் 167 இலட்சமும் தவிர்க்கப்பட்டுள்ளன.

1. பின்னிணைப்பு III இல் அடடவணை 33 இற்குரிய அடிக்குறிப்பு (ஆ) வைப் பார்க்கவும்.

2. அரசிறை :

அரசிறை 1973 இல் பதிவு செய்யப்பட்ட ரூ. 7590 இலட்சம் அல்லது 23 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1974 ஆம் நிதியாண்டில் 1973 ஐ விட ரூ. 7490 இலட்சம் அல்லது 18 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. 1973 இற்கு முந்திய நான்கு ஆண்டுகளினதும் அரசிறைச் சேகரிப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பான ஆண்டுக்குச் சராசரி 8 சதவீதத்தைக் கணக்கில் எடுப்பின் ஆய்வுக்குரிய ஆண்டிலும் 1973 இலும் அடையப்பட்ட செயலாற்றம் மிகவும் கவர்ச்சிகரமானதாகக் கொள்ளலாம்.

பின்னிணைப்பு III இல் உள்ள அட்டவணை 36, கடந்த 9 வருடங்களுக்குரிய அரசிறை வரவுகளினதும் 1975 ஆம் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளினதும் விபரங்களைத் தருகின்றது. அட்டவணை II (எ) 4 கடந்த இரண்டு நிதியாண்டுகளினது அரசிறையினதும் 1974, 1975 ஆம் ஆண்டுகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளினதும் தொகுப்பைத் தருகின்றது.

மொத்த வரவுகளில் ஏறக்குறைய 98 சதவீதத்திற்குப் பொறுப்பாக அமைந்த நடைமுறை வரவுகள் 1974 இன் மிகப் பெருமளவான ரூ. 47,950 இலட்சம் கொண்ட அரசிறையை உருவாக்கின. ஆய்வுக்குரிய ஆண்டில் மூலதன வரவுகளில் சிறிதளவான வீழ்ச்சி காணப்பட்டது.

ஆய்வுக்குரிய ஆண்டில் மொத்த அரசிறையின் அதிகரிப்பிற்கு உற்பத்திச் செலவினம் மீதான வரிகள் பெருமளவிற்கு உதவின. இதன் விளைவாக மொத்த அரசிறையில் இவ்வரிகளின் பங்கு 1973 இல் 64 சதவீதமாகவிருந்து ஆய்வுக்குரிய ஆண்டில் 70 சதவீதமாக அதிகரித்தது.

1974 இல் அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கிய காரணிகளாக அமைந்தவை: தேர்ந்த விற்பனவு வரிகள் (ரூ. 3420 இலட்சம்), வெ.செ.உ.சா. விற்பனவுகள் (ரூ. 2900 இலட்சம்), ஏற்றுமதித் தீர்வைகள் (ரூ. 2730 இலட்சம்), பொது விற்பனவுகளும் மொத்த விற்பனவு வரிகளும் (ரூ. 700 இலட்சம்), வர்த்தக முயற்சிகளிலிருந்து பெற்ற மொத்த வரவுகள் (ரூ. 830 இலட்சம்), இறக்குமதித் தீர்வைகள் (ரூ 550 இலட்சம்) என்பவையாகும். இவ் அதிகரிப்புகளின் தாக்கம் வருமான வரிச் சேகரிப்புகளிலும் (ரூ 940 இலட்சம்) உணவு விற்பனவுகளிலிருந்து பெற்ற இலாபங்களிலும் (ரூ. 220 இலட்சம்) இருந்து கிடைத்த குறைவுற்ற வரவுகளினால் குறைக்கப்பட்டது.

1974 இல் தேர்ந்த விற்பனவு வரிகளிலிருந்து பெற்ற வரவுகள் குறிப்பிடத்தக்க அளவாக ரூ. 7500 இலட்சத்திற்கு அதிகரித்தன. எனினும், இவ்வதிகரிப்பிற்கு முக்கிய காரணமாக அமைந்தது சாராய விற்பனவிலிருந்து கிடைத்த ரூ. 1950 இலட்சம் கொண்ட தீர்வை வருவாயாகும். இது முந்திய ஆண்டுகளில் "அரசாங்கத் தனியுடைமைகளிலிருந்து பெற்ற இலாபமாகக்" கணிக்கப்பட்டது. தற்போது தேர்ந்த விற்பனவுகள் வரியாகப் பாகுபடுத்தப் படுகின்றது.[1] இம் மீளப்பகுப்பாய்விற்கு இடம்விட்டு நோக்குகையில், புகையிலை

1. கடந்த காலங்களில் அரசாங்கத்தின் சாராய விற்பனவிலிருந்து பெற்ற இலாபத்தைப் பிரதிபலித்த அரசிறை விடயமான அரசாங்கத் தனியுடைமைகளின் மிகையானது அரச வடித்தற் கூட்டுத்தாபனத்தினால் சாராயத் தயாரிப்பு விற்பனவு தொழிற்பாடுகள் கையேற்கப்பட்டதுடன் மதிப்பீடுகளில் தோற்றமளிக்காது 1974 இல் இருந்து அரசாங்கத்திற்கு அரசிறையின் பெரும் தொகையானது தேர்ந்த விற்பனவுகள் வரிகள் (மதுவரி), பொது விற்பனவு மொத்த விற்பனவு வரிகள், கூட்டு வருவாய் மீதான வரிகள், அரச கூட்டுத்தாபனங்களிலிருந்து பெற்ற இலாபங்களும் பங்கிலாபங்களும் என்பவற்றின் மூலம் கிடைக்கின்றது.

## அட்டவணை II (எ) 4

## அரசாங்க அரசிறை 1973 தொட்டு 1975 வரை *(அ)*

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்கள் | 1973 | 1974 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் | 1974 தற்காலிக மாணவை | 1975 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|
| 1. நடைமுறை வரவுகள் ... | 3,928.6 | 4,031.0 | 4,682.7 | 4,788.8 |
| 1.1 சொந்த, கூட்டு வருமானங்களிலிருந்து வரிகள் ... | 699.9 | 470.0 | 606.4 (ஆ) | 595.0 |
| 1.1.1 வருமான வரி ... | 699.9 | 470.0 | 606.4 (ஆ) | 595.0 |
| 1.1.2 ஏனைய ... | — | — | — | — |
| 1.2 உற்பத்தியிலும், செலவிலும் மீதான வரிகள் ... | 2,576.2 | 2,928.4 | 3,366.0 | 3,448.5 |
| 1.2.1 பொது விற்பனைகளும் மொத்த விற்பனை வரியும் ... | 564.8 | 525.0 | 635 2 (ஆ) | 634.0 |
| 1.2.2 தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனை வரிகள் ... | 407.7 | 410 8 | 749.6 | 776.0 |
| (அ) புகையிலை வரி ... | 341.5 | 350.0 | 372.9 | 380.0 |
| (ஆ) தேயிலை வரி ... | 39.0 | 40.0 | 160 7 | 188.0 |
| (இ) மது வரி ... | 27.0 | 20.7 | 215.9 | 207.9 |
| (ஈ) ஏனைய ... | 0.1 | 0.1 | 0.1 | 0.1 |
| 1.2.3 இறக்குமதித் தீர்வைகள் ... | 222.0 | 293 6 | 277 3 | 252.3 |
| (அ) காய்கறி உற்பத்திகள் ... | 22.9 | 30.0 | 25.8 | 30.0 |
| (ஆ) தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் குடிபானங்கள், புகையிலை முதலியன ... | 34.4 | 32.0 | 19.6 | 30.0 |
| (இ) கனிப்பொருள் உற்பத்திகள் ... | 3.1 | 10.0 | 6.2 | 6.0 |
| (ஈ) கைத்தொழில் இரசாயனத்தயாரிப்புக்கள் ... | 33.7 | 36.0 | 60 8 | 35 0 |
| (உ) செயற்கைப் பிசின், பிளாஸ்டிக் பொருட்கள் இரப்பர் முதலியன | 12.0 | 20.0 | 16.4 | 15.0 |
| (ஊ) கடதாசி தயாரிக்கும் பொருட்கள் முதலியன | 11.0 | 15.7 | 18.2 | 13.0 |
| (எ) புடவையும், புடவைப் பொருட்களும் ... | 32.1 | 41.5 | 38.5 | 34.0 |
| (ஏ) அடிப்படை உலோகமும், உலோகப் பொருட்களும் ... | 15.6 | 25.0 | 23.4 | 20.0 |
| (ஐ) இயந்திரமும், இயந்திரப் பாவிப்புக்களும் மின்சார உபகரணங்கள் முதலியன ... | 21.3 | 29.6 | 23.0 | 27.0 |
| (ஒ) வாகனங்கள், விமானங்கள் தளங்கள் முதலியன | 25.4 | 28 0 | 30.2 | 26 0 |
| (ஓ) ஏனையவை | 9.8 | 25.2 | 14.2 | 16.0 |
| (ஔ) இறக்குமதி உத்தரவுச் சீட்டுக் கட்டணங்கள் ... | 0.7 | 0.6 | 1.0 | 0.3 |
| 1.2.4 வெ.செ.உ.சா. விற்பனை மூலமான வரவுகள் ... | 673.7 | 890 0 | 964.1 | 948.0 |
| 1.2.5 ஏற்றுமதித் தீர்வைகள் ... | 386.4 | 400.0 | 660.1 | 742.3 |
| (அ) தேயிலை ... | 171.3 | 160 5 | 155.5 | 165.1 |
| (ஆ) றப்பர் ... | 141.5 | 180.0 | 284.3 | 218.0 |
| (இ) தெங்கு ... | 32.6 | 20.9 | 161.8 | 308.7 |
| (ஈ) ஏனையவை ... | 41.0 | 38.6 | 58.5 | 50.5 |
| 1.2.6 உத்தரவுச் சீட்டு வரிகள் ... | 57.5 | 61.3 | 58.7 | 50.6 |
| 1.2.7 சொத்து மாறல் வரிகள் ... | 22.3 | 27.6 | 21.4 | 27.5 |
| 1.2.8 அரசாங்கத் தனியுடைமைகளின் மிகைகள் ... | 200.0 | 196.2 | — | — |
| 1.2.9 உணவு விற்பனைகளின் மூலமான இலாபங்கள் ... | 21.8 | 123.9 | — | 17.7 |
| 1.3 பெறப்பட்ட வட்டியும், பங்கு இலாபங்களும் ... | 119.5 | 96.2 | 117.7 | 165.1 |
| 1.3.1 அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலிருந்து இலாபங்களும், பங்கு இலாபங்களும் .. | 87.7 | 61.2 | 92 6 | 129.2 |
| 1.3.2 ஏனைய ... | 31.8 | 35.0 | 25.1 | 36.0 |
| 1.4 வர்த்தக முயற்சிகளின் மொத்த வரவுகள் ... | 351.2 | 399.0 | 434.0 | 428.6 |
| 1.4.1 புகையிரதச் சேவை .. | 178.4 | 200.8 | 217.7 | 229.2 |
| 1.4.2 மின்சக்தி .. | 1.1 | 1.1 | 0.7 | 0.9 |
| 1.4.3 தபாற் தந்திப் போக்குவரத்து ... | 112.9 | 124.2 | 151.1 | 132.1 |
| 1.4.4 துறைகளும், துறைமுகங்களும் ... | 47.4 | 47.9 | 53.0 | 43.4 |
| 1.4.5 ஏனைய ... | 11.4 | 25.0 | 11 5 | 23.0 |
| 1.5 ஏனைய நடைமுறை வரவுகள் ... | 181.8 | 137.4 | 158 3 | 151.5 |
| 1.5.1 தேசிய தொத்தர் ... | 9.2 | 11.0 | 7 9 | 10 0 |
| 1.5.2 ஏனைய ... | 172.6 | 126 4 | 150.4 | 141.5 |
| 2. மூலதன வரவுகள் ... | 117.1 | 83.6 | 111.9 | 92.3 |
| 2.1 உள்ளூர்த் துறைகளின் மூலதனக் கணக்கிலிருந்து ... | 54.9 | 39 0 | 47.8 | 47.0 |
| மாற்றங்கள் ... | 13.6 | 12.0 | 10.7 | 12.0 |
| 2.1.1 பூதல் வரி ... | 31.1 | 12.0 | 25 5 | 18.0 |
| 2.1.2 செல்வ வரி ... | — | — | — | — |
| 2.1.3 ஏனைய ... | 10.2 | 15.0 | 11.6 | 17.0 |
| 2.2 ஏனைய மூலதன வரவுகள் ... | 62.2 | 44.6 | 64.1 | 45.3 |
| 3. மொத்த அரசிறை ... | 4,045.8 | 4,114.6 | 4,794.6 | 4,881.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) கீழே கொடுக்கப்பட்ட விடயங்கள் பற்றிய விபரங்களுக்கு பின்னிணைப்பு III அட்டவணை 36 ஐப் பார்க்கவும்.

(ஆ) திறைசேரிக் கணக்குகள் வகைப் படுத்தலில் ஏற்பட்ட தவறு காரணமாக வருமானவரி, மொத்த விற்பனவுகள் வரிச் சேகரிப்புகள் முறையே ரூ. 5067 இலட்சம், ரூ. 7037 இலட்சமாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(இ) வங்கிப் பற்று வரிகளையுள்ளடக்கும்.

வரியிலும் மிக முக்கியமாகத் தேயிலை வரியிலிருந்தும் பெற்ற அரசிறையே தேர்ந்த விற்பனவுகள் வரியிலிருந்து பெற்ற அரசிறையின் கணிசமான அளவிற்குப் பெரிதும் உதவின.

வெ. செ. உ. சா. விற்பனவுகளிலிருந்து பெற்ற வரவுகளும் 1973 இன் 26 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவான 43 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. வெ. செ. உ. சா. விற்பனவுகளிலிருந்து பெற்ற அரசிறை 1968/69 இல் 10 சதவீதமாக மட்டுமிருந்து தற்போது 20 சதவீதத்திற்கு வகை கூறுகின்றது. இலங்கையின் றப்பர், தெங்குப் பொருட்கள் எல்பவற்றின் ஏற்றுமதியினுல் பெருமளவில் பெறப்பட்ட உயர்ந்த விலைகளினுல் ஏற்றுமதித் தீர்வையிலிருந்து பெற்ற வரவுகளும் 1974ஆம் ஆண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க அளவான அதிகரிப்பைக் காட்டின. 1974 இன் மொத்த அரசிறையில் 40 சதவீதமான அளவிற்கு வெளிநாட்டுக் கொடுக்கல் வாங்கல்களிலிருந்து பெற்ற அரசிறை (ஏற்றுமதித் தீர்வைகள், இறக்குமதித் தீர்வைகள், வெ. செ. உ. சா. விற்பனவிலிருந்து பெற்ற சேகரிப்புகள்) வகை கூறின என்பது கவனிக்கப்படவேண்டும்.

1974 ஆம் ஆண்டுக்குரிய உண்மையான (தற்காலிக) அரசிறையும் இவ் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 6800 இலட்சம் (17 சதவீதம்) கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. தேர்ந்த விற்பனவு வரிகள் (ரூ. 3390 இலட்சம்), ஏற்றுமதித் தீர்வைகள் (ரூ. 2600 இலட்சம்), பொது விற்பனையும் மொத்த விற்பனவு வரியும் (ரூ. 1100 இலட்சம்), வெ. செ. உ. சா விற்பனை (ரூ. 740 இலட்சம்) வருமான வரி (ரூ. 1360 இலட்சம்) என்பன இவ்வதிகரிப்பிற்குப் பெரிதும் உதவின. இவற்றை மட்டுப்படுத்துவனவாக முக்கியமாக உணவு விற்பனவுகளிலிருந்து பெற்ற இலாபத்திலும் (ரூ. 1240 இலட்சம் கொண்ட இலாபம் எதிர்பார்க்கப்பட்டபோதும் 1974 இல் இது நட்டமாகவே மாறியது) இறக்குமதித் தீர்வைகளிலும் (ரூ. 160 இலட்சம்) ஏற்பட்ட வீழ்ச்சிகள் அமைந்தன.

அரசிறைச் சேகரிப்புகள் 1973 ஆம் ஆண்டினதையும் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளையும் விட 1974 இல் அதிகரித்தமைக்கு எமது ஏற்றுமதிகள் அனுபவித்த மிகவும் சாதகமான விலைகளே காரணமாகும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மிக உயர்ந்த விலைகளும் அதனுல் ஏற்பட்ட அதிகரித்த மொத்த வரவுகளும் மொத்த விற்பனவு வரிச் சேகரிப்புகளின் அதிகரிப்பிற்கு உதவிய அதே வேளையில், பண ரீதியிலான இறக்குமதிச் செலவும் வெ. செ உ. சா. விற்பனவிலிருந்து பெற்ற அரசிறையைக் கணிசமான அளவு உயர்த்த உதவியது.

1973 ஆம் நிதியாண்டில், மொத்த அரசிறை 1974 ஐ விட ரூ. 860 இலட்சத்தினுல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. தேர்ந்த விற்பனவு வரிகள், ஏற்றுமதித் தீர்வைகள், வட்டிகளும் பங்கு இலாபங்களும் ஆகியவற்றிலிருந்தான வரவுகள் முறையே ரூ. 260 இலட்சம், ரூ. 820 இலட்சம், ரூ. 480 இலட்சம் ஆகிய தொகைகளால் அதிகரிக்கும் அதே வேளையில் இவற்றை மட்டுப்படுத்துவனவாக வருமானவரி (ரூ. 110 இலட்சம்), இறக்குமதித் தீர்வைகள் (ரூ. 250 இலட்சம்), வெ செ. உ. சா. விற்பனவுகள் (ரூ. 160 இலட்சம்), ஏனைய நடைமுறை வரவுகள் (ரூ. 70 இலட்சம்) என்பவற்றின் வீழ்ச்சிகள் காணப்படுகின்றன.

**தனியார் கூட்டு வருமானத்தின் மீதான வரிகள் :-**

ஏறக்குறைய முற்றும் தனியாருடையதும் நிறுவனங்களினதும் வருமான வரியைக்[1] கொண்ட இம்மூலத்திலிருந்து சேகரிக்கப்பட்ட அரசிறை 1974 இல் அதற்கு முந்திய ஆண்டைவிட ரூ. 940 இலட்சம் குறைவாகவும் ஆனல் 1974 இன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 1360 இலட்சம் கூடுதலாகவும் இருந்தது. 1974 இன் இவ் எண்தொகை குறைவாக இருந்தமைக்கு 1971/72 ஆம் நிதியாண்டில் செலுத்தப்படவேண்டிய 1972/73 ஆம் மதிப்பாண்டின் முதல் இரு காலாண்டுகளுக்குமுரிய ரூ 1700 இலட்சம் கொண்ட செலுத்துமதிகள் உண்மையில் 1973 இலேயே செலுத்தப்பட்டதினல் 1973 ஆம் ஆண்டுக்குரிய வருமான வரிச் சேகரிப்புகள் அசாதாரண உயர்வடைந்திருந்தமையே காரணமாகும். இது தன் மதிப்புத் திட்டத்தை நடைமுறைப்படுத்தும் சட்டத்தை நிறைவேற்றுவதில் ஏற்பட்ட தாமதத்தினல் விளைந்ததாகும். 1974 இன் சேகரிப்புகளில் கூட்டல்லா வருமானம் ரூ. 1900 இலட்சமாக அமைய, கூட்டு வருமானத்தின் மீதான வரிகள் ரூ. 4160 இலட்சமாக அமைந்தன. 1974 இன் குறைந்த அளவிலான மூல மதிப்பீடுகள், தன் மதிப்புத்திட்டத்தின் முதல் கட்டத்தில் சிறிது குறைவாகவிருந்த கூட்டு மூலங்கள் தன்விருப்பு அடிப்படையில் தந்த எண்தொகைகளின் அளவினையே அடிப்படையாகக் கொண்டிருந்தன. எனவே 1974 இற்குரிய மூல மதிப்பீடுகள் குறைவான அடிப்படையிலே மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுகின்றன. (1973 இன் எண்தொகை வீக்கத்திற்கு இடமளித்து நோக்கின் 1974 இன் உண்மையான செயலாற்றமும் அதற்கு முந்திய ஆண்டை விடச் சிறந்ததாகவே விளங்கியதென்பது குறிப்பிடத்தக்கது.) பொதுவான விலை அதிகரிப்புகளும் அதிகமான கூட்டுத்தாபனங்களின் முன்னேற்றமான செயலாற்றங்களும் வருமான வரி வரவுகளின் அதிகரிப்பிற்கு உதவின. அரச வடித்தற் கூட்டுத்தாபனமும் தனது இலாபங்கள் மீதான வருமானவரியாக ரூ 120 இலட்சத்தைச் செலுத்தியது. 1975 இல் வருமான வரியிலிருந்து ரூ. 5950 இலட்சம் கொண்ட அரசிறை எதிர்பார்க்கப்படுகிறது.

**உற்பத்திச் செலவினம் மீதான வரிகள் :**

இவ்விடயம் பொது விற்பனையும் மொத்த விற்பனவு வரியும் (முழுவதும் வியாபார மொத்த விற்பனவு வரியையும் வங்கிப் பற்று வரியையுமே கொண்டது), தேர்ந்த விற்பனவுகள் வரி (புகையிலை, மதுபானம் என்பவற்றின் தீர்வைகள், தேயிலைப் பெறுமான விகிதவரி), இறக்குமதித் தீர்வைகள் ஏற்றுமதித் தீர்வைகள், வெ. செ. உ. சா. விற்பனவிலிருந்து பெற்ற வரவுகள், உத்தரவுப்பத்திர வரிகள், சொத்துக் கைமாறல் வரிகள், அரசாங்கத் தனியுடைமைகளின் மிகைகள் (1973 வரை சாராய விற்பனவிலிருந்து பெற்ற இலாபங்கள்) உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் என்பவற்றை உள்ளடக்கும்.

---

1. தனியாட்களினதும் நிறுவனங்களினதும் வருமான வரி பற்றிய விபரங்கள் கிடைக்காத நிலையிலும், முன்னையது மூன்றில் ஒரு பங்கிற்கும், பின்னையது மூன்றில் இரண்டு பங்கிற்கும் வகை கூறுகின்றது என்று மதிப்பிடப்படுகின்றது.

(அ) மொத்த விற்பனவு வரிகள்

அண்மை ஆண்டுகளில் காணப்பட்டதுபோல 1973இலும் இவ்வரிகள் அரசாங்க அரசிறையின் நெகிழ்ச்சியுடையதும், உற்பத்தித் தன்மையுடையதுமான மூலமாகத் தொடர்ந்து விளங்குகின்றது. இம்மூலத்திலிருந்து பெறப்பட்ட சேகரிப்புகள் 1973இனதைவிட ரூ. 700 இலட்சம் அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன. 1974இன் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் வரியமைப்பின் குறைந்த வீதமும் திருத்தமும் காரணமாக இச்சேகரிப்புகள் ரூ. 400 இலட்சத்தினல் வீழ்ச்சியுறுமென எதிர்பார்க்கப்பட்டபோதும், இவை ரூ. 1100 இலட்சம் கூடுதலாக விளங்கின. பண்டங்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு பண ரீதியில் மொத்த வரவுகளின் பெறுமதியை அதிகரித்ததுடன் மொத்த விற்பனவு வரிச் சேகரிப்புகளில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கும் முதன்மைக் காரணமாக அமைந்தது மொத்தச் சேகரிப்புகளில் ஏறக்குறைய ஆறில் ஐந்து பங்கு தயாரிப்பிலும் மீதி தயாரிப்பல்லா வரவுகளிலுமிருந்து கிடைக்கப்பெற்றது. இவ்விரண்டு பகுப்புக்களிலுமிருந்து பெற்ற சேகரிப்புகள் 1974இல் அதிகரிப்பைக் காட்டியதுடன் இதில் தயாரிப்புத்துறை ரூ. 4950 இலட்சத்தையும் வழங்கியது. தயாரிப்புத் துறையில் அதிகமான வகுப்பைச் சார்ந்த தயாரிப்புக்கள் அதிகரித்த மொத்த விற்பனவு வரிச் சேகரிப்புக்களை வழங்கிய அதே வேளையில் தயாரிப்புத்துறையில் சேகரிக்கப்பட்ட மொத்த விற்பனவு வரிகளில் அரைப்பங்கு பெற்ருேல் தயாரிப்பிலிருந்து பெறப்பட்டதென்பது குறிப்பிடத்தக்கது. பெற்ருேலின் விலைகள் 1974 தொடக்கத்தில் இரு மடங்காக்கப்பட்டு மொத்த வரவுகளை மிகப் பெருமளவிற்கு உயர்த்தின. அரச வடித்தற் கூட்டுத்தாபனம் உருவாக்கப்பட்டதுடன் சாராயத் தயாரிப்பிலிருந்து கிடைத்த வரவுகள் 5 சதவீத வரிக்கு உள்ளாக்கப்பட்டு 1974இன் சேகரிப்புக்களின் அதிகரிப்பிற்கு உதவின. 1975இல் மொத்த விற்பனவு வரிச் சேகரிப்புகள் 1973இன் அதே மட்டத்திலேயே ஏறக்குறைய இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(ஆ) தேர்ந்த விற்பனவு வரிகள்

1974இன் தேர்ந்த விற்பனவு வரியிலிருந்து பெற்ற அரசிறை (மதுவரி நீங்கலாக) 1973ஆம் ஆண்டினதைவிட ரூ. 1530 இலட்சம்கொண்ட கணிசமான அளவு அதிகரிப்பைக் காட்டியது. இது முக்கியமாக புகையிலை வரி வரவுகளிலிருந்து பெற்ற ரூ. 310 இலட்சம்கொண்ட அதிகரிப்பினலும், தேயிலை வரியிலிருந்து பெற்ற ரூ. 1220 இலட்சம்கொண்ட அதிகரிப்பினலுமே ஏற்பட்டது. 1973 நவம்பரில் புகையிலையின் தீர்வை வரி இறுத்தலுக்கு ரூ. 52.50 இலிருந்து ரூ. 47.50 ஆகக் குறைக்கப்பட்டபோதும் நுகர்வில் ஏற்பட்ட அதிகரிப்புக் காரணமாக இம்மூலத்திலிருந்து பெற்ற வரவுகள் உயர்வாகக் காணப்பட்டன. புகையிலை வரியிலிருந்து அரசிறைக்குக் கிடைத்த தொகை 1973இன் மொத்த அரசிறையில் 8.4 சதவீதமாக அமைந்தமையை 1974உடன் நோக்கும்போது இது 7.8 சதவீதமாக விளங்கியது. 1974இல் தேயிலை வரியின் சேகரிப்புக்களில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு எமது தேயிலை ஏற்றுமதிகளுக்குக் கிடைத்த உயர்ந்த விலைகளும், தேயிலை வரி விதிப்பின் அடிப்படையில் செய்யப்பட்ட மாற்றங்களுமே காரணமாகும்.[1] மதுத் தீர்வை வரி

1. தேயிலையின் விற்பனவு வரியில் ஏற்பட்ட மாற்றங்களை "ஏனைய நிதி வழிமுறைகள்" என்ற பகுதியில் பார்க்கவும்.

யிலிருந்து பெற்ற வரவுகள் 1973இன் ரூ. 270 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1974இல் மிக உயர்ந்த தொகையான ரூ. 2160 இலட்சத்தைப் பதிவுசெய்தன. இது முன்னைய ஆண்டுகளில் அரசாங்கத் தனியுடைமைகளின் மிகையின்கீழ் காணப்பட்ட சாராய விற்பனவிலிருந்து பெற்ற தீர்வை வரியான ரூ. 1950 இலட்சத்தை உள்ளடக்கும்.

1975இல் தேர்ந்த விற்பனவுகள் வரியிலிருந்து பெறும் அரசிறை ஆய்வுக்குரிய ஆண்டைவிட ரூ. 260 இலட்சம் கூடுதலாகவிருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. புகையிலையின் வரியில் எவ்வித அதிகரிப்புமின்றிப் புகையிலை வரி வரவுகள் ரூ. 70 இலட்சத்தில் அதிகரிக்குமெனவும், தேயிலை வரி ரூ. 270 இலட்சத்தினால் அதிகரிக்குமெனவும், இவ்வதிகரிப்புகள் மதுவகையின் தீர்வை வரியில் ஏற்படும் ரூ. 80 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினால் ஓரளவு மட்டுப்படுத்தப்படுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ) இறக்குமதித் தீர்வைகள்**

அண்மை ஆண்டுகளில் இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புகள் அரசிறையின் ஒரு குறைந்து செல்லும் மூலமாக விளங்குகின்றன. இது பெருமளவிற்கு வெ. செ. உ. சா. விற்பனவிலிருந்து பெறப்படும் அரசிறையினால் பதிலீடுசெய்யப்படும். 1968 மேயில் வெ. செ சா திட்டம் புகுத்தப்பட்டதின் பின் முதல் தடவையாக 1974 இல் இவை முந்திய ஆண்டைவிட ரூ. 550 இலட்சம் கொண்ட உயர்வைப் பதிவுசெய்தன. இது பெருமளவிற்கு இறக்குமதிகளின் மிகப் பெருமளவு விலை அதிகரிப்பினால் ஏற்பட்டது. தயாரிக்கப்பட்ட உணவு வகைகள், குடிபானங்கள், புகையிலை போன்றவை நீங்கலாகப் பெரும்பாலும் எல்லா விடயங்களுடனும் தொடர்பான இறக்குமதித் தீர்வைச் சேகரிப்புகள் 1973ஆம் ஆண்டினதைவிட அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன. உரம் உட்பட இரசாயனமும் அது சார்ந்த கைத்தொழில்களும் தொடர்பான உற்பத்திகளின் தீர்வைச் சேகரிப்புகள் இப்பொருட்களின் மிகப் பெருமளவு விலை அதிகரிப்புக் காரணமாகப் பெரும்பாலும் இரண்டு மடங்காக அதிகரித்துள்ளன. தாள் செய்யும் பொருட்கள், புடவையும் புடவைப் பொருட்களும், அடிப்படை உலோகங்களும் உலோகப் பொருட்களும் ஆகியனவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளன. இறக்குமதித் தீர்வை வரவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு, இறக்குமதியின் அளவு குறைவாக இருந்தநிலையிலும் தனியே விலைகளில் ஏற்பட்ட மிக உயர்ந்த அதிகரிப்புகளாலேயே ஏற்பட்டது. 1944இல் இறக்குமதித் தீர்வைகளிலிருந்து கிடைத்த உண்மையான வரவுகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 160 இலட்சம் குறைவாக இருந்தன. இது இறக்குமதிகளின் குறைவான அளவினால் ஏற்பட்டதாகும்.

1975இல் இம்மூலத்திலிருந்து பெறப்படும் அரசிறை மேலும் ரூ. 250 இலட்சத்தினால் வீழ்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ) வெ செ. உ. சா. விற்பனவிலிருந்து பெற்ற வரவுகள்**

1973ஆம் ஆண்டைவிட 1974இல் வெ. செ. சா. விற்பனவிலிருந்து பெற்ற அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 2900 இலட்சமாகும். இம்மூலத்திலி

ருந்து பெற்ற அரசிறை 1974ஆம் ஆண்டின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளை யும்விட ரூ. 740 இலட்சம் கூடுதலாகவுளது. மொத்த அரசாங்க அரசிறையில் இம்மூலத்திலிருந்து கிடைக்கும் வரவுகளின் பங்கு 1973இல் 17 சதவீதமாக இருந்து 1974இல் 20 சதவீதமாக அமைந்துள்ளது. இம்மூலத்திலிருந்து கிடைத்த அதிகரித்த அரசிறைக்குக் காரணம் 1974இல் இறக்குமதியின் அளவு குறைந்திருந்த நிலையிலும் இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களின் டலைகளில் பெருமளவு அதிகரிப்புக் காணப்பட்டமையேயாகும். 1975இல் வெ. செ. உ. சா. விற்பனவிலிருந்து கிடைக்கும் அரசிறை ரூ. 160 இலட்சத் தினால் குறைவுடையதாக விளங்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(உ) ஏற்றுமதித் தீர்வைகள்

1974இன் ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புகள் ஆய்வுக்குரிய ஆண்டில் ஏற் றுமதிகளின் விலைகளில் ஏற்பட்ட பெருமளவான அதிகரிப்புக் காரணமாக முந்திய ஆண்டைவிட ரூ. 2740 இலட்சத்தினால் மிகக்கூடுதலாக அதிகரித் துள்ளன. தேங்காய்த்துருவல், தேங்காய் எண்ணெய், கயிற்றுத்தும்பு, றப்பர் என்பவற்றின் விலைகள் மிகப் பெருமளவிற்கு அதிகரித்தன. தெங்குப்பொருட் களிலிருந்தான ஏற்றுமதித் தீர்வை வரவுகள் ரூ. 1290 இலட்சத்தினால் நான்கு மடங்காக அதிகரிக்க றப்பரிலிருந்து கிடைத்த அதிகரிப்பு ரூ. 1430 இலட்ச மாக நூறு சதவீத அதிகரிப்பாகக் காணப்பட்டது எனினும் தேயிலை மீதான தீர்வை வரவுகள் 1974இல் ஏற்றுமதி செய்யப்பட்ட தேயிலையின் மிகக்குறைந்த அளவு காரணமாக ரூ. 169 இலட்சத்தினால் வீழ்ச்சியுற்றன. 1974இல் அர சாங்க அரசிறையில் ஏற்றுமதித் தீர்வைச் சேகரிப்புக்களின் பங்கு 1973இல் 9 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதமாக அமைந்தது. இவ்வரவுகள் 1974இல் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 2600 இலட்சம் கூடுதலாக அமைந்து, 1975இல் ரூ. 7420 இலட்சமாக அமையுமென எதிர்பார்க்கப் படுகின்றது.

(ஊ) உத்தரவுப்பத்திர வரிகளும் சொத்துக்கைமாறல் வரிகளும்

உத்தரவுப்பத்திர வரிகளிலிருந்து பெற்ற அரசிறை (சாராயத் தவறணை வாடகைகள், கள்ளுத்தவறணை வாடகைகள், கள் இறக்கும் உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள் மோட்டார் வாகன உத்தரவுப்பத்திரக் கட்டணங்கள்) ரூ. 10 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்ய, சொத்துக் கைமாறல் வரிகள் (தபால், நீதிமன்றத் தேவைகள் நீங்கலான முத்திரை வரிகள்) அதேயளவு தொகையான வீழ்ச்சியைப் பதிவுசெய்தன. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் உத்தரவுப்பத்திர வரிகளும் சொத்துக் கைமாறல் வரிகளும் முறையே ரூ. 30 இலட்சத்தினாலும், ரூ. 60 இலட்சத்தினாலும் வீழ்ச்சியுற்றன. 1975இல் உத்தரவுப் பத்திர வரிகள் மேலும் ரூ. 80 இலட்சத்தினால் வீழ்ச்சியுற சொத்துக் கைமாறல் வரிகள் ரூ. 60 இலட்சத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(எ) அரசாங்கத் தனியுடைமைகளின் மிகை

முந்திய ஆண்டுகளில் இம் மூலத்திலிருந்து பெற்ற அரசிறை முழுவதும் அரசாங்கத்தின் தனியுரிமையான சாராய விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்

களையே கொண்டிருந்தது. 1974இல் இருந்து இத்தனியுரிமையானது இலங்கை வடித்தற் கூட்டுத்தாபனத்திற்கு மாற்றல் செய்யப்பட்டு சாராய விற்பனை விலிருந்து பெறும் இலாபத்தின் பெரும் பகுதி தற்போது சேர்ந்த விற்பனவுகள் வரியாக அரசாங்கத்திற்குச் செல்கின்றது அதாவது மதுவரி, கூட்டு வருமானங்கள் மீதான வரி, மொத்த விற்பனவு வரிகள் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் இலாபங்களும் பங்கிலாபங்களும் என்பவை.

### (ஏ) உணவு விற்பனவிலிருந்து பெற்ற இலாபம்

முந்திய ஆண்டுகளில் அரசாங்கத்தின் இம்மூலத்திலிருந்து கிடைக்கும் முக்கியமாக சீனி விற்பனவிலிருந்து பெற்ற இலாபத்தையே கொண்டிருந்ததுடன் 1974இல் இதன் பேரில் ரூ 1240 இலட்சம் எதிர்பார்க்கப்பட்டது. எனினும் உலக சந்தையில் சீனியின் விலையில் ஏற்பட்ட மிகப் பெருமளவு அதிகரிப்பும் உதவிப்பண விலைகளில் சீனியையும் மாவையும் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் விநியோகிச்கும் அரசாங்சத்தின் கொள்கையும் காரணமாக இம்மூலத்தி லிருந்தான அரசிறை 1974 இல் இல்லாதொழிந்தது. எனினும் 1975ஆம் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் மாவிற்பனையிலிருந்து ரூ. 180 இலட்சம் கொண்ட இலாபத்தை எதிர்பார்க்கின்றன.[1]

### வட்டியும் பங்கிலாபங்களும்

இம்மூலத்திலிருந்தான அரசிறை 1973இல் பெறப்பட்ட ரூ. 320 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக, 1974இல் ரூ. 20 இலட்சத்தினால் வீழ்ச்சி யுற்றது. இது முக்கியமாக 1874இல் அரசாங்க நிறுவனங்களிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலுமிருந்து பெற்ற வட்டியில் ஏற்பட்ட ரூ. 110 இலட்சம் கொண்ட வீழ்ச்சியினால் ஏற்பட்டது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலிருந்து பெற்ற இலாபங்கள், பங்கிலாபங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 90 இலட்சத்தினால் இத்தொகை எதிரீடு செய்யப்பட்டது. பங்கிலாபங் களிலிருந்து பெற்ற வரவுகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளை விட ரூ. 220 இலட்சம் கூடுதலாக விளங்கின. 1975 இல், வட்டியும் பங்கிலாபங்களும் தற்போது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் உயர்ந்த உதவுதொகை காரணமாக 1974ஆம் ஆண்டை விட ரூ.490 இலட் சத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### வர்த்தக முயற்சிகளிலிருந்து பெற்ற மொத்த வரவுகள்

சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974இல் வர்த்தக முயற்சியிலிருந்து பெற்ற மொத்த வரவுகள் (அதாவது புகையிரதப்பகுதி, தபால் தந்தி செய்தித் தொடர்பும் துறைமுகங்களும்) ரூ. 830 இலட்சத்தினால் அதிகரித்தன.

புகையிரதப் பகுதியிலிருந்து[2] கிடைத்த வரவுகள் 1973ஆம் ஆண்டைவிட ரூ. 390 இலட்சத்தினால் அதிகரித்தன. இவ் அதிகரிப்பு முக்கியமாக எரிபொருள்

---

1. உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபத்தின் விபரங்களை அறிய "தேறிய உணவு உதவுதொகை" என்ற பிரிவைப் பார்க்கவும்.

2. வரவுகள் அரசாங்கக் கணக்குகளில் காட்டப்பட்டதைவிடக்கூடுதலாக உள்ளன. ஏனெனில் அவை மீளக்கொடுப்பனவுகள், வட்டிகள், செலுத்து தொகைகள் என்பவற்றையும் உள்ளடக்கும்.

பிரச்சினை எழுந்ததினால் நடைமுறைப்படுத்தப்பட்ட புகையிரதக் கட்டணம், கட்டண வீதங்கள் என்பவற்றின் திருத்தம் காரணமாக ஏற்பட்டதாகும்.

முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 1974இல் தபால், தந்தி செய்தித் தொடர்புகளிலிருந்து பெற்ற வரவுகள் ரூ. 380 இலட்சத்தினால் அதிகரித்தன. இவ்வதிகரிப்பு தபால் கட்டணங்கள், தந்திச் சேவைகள் என்பவற்றிலிருந்து பெற்ற வருமானத்தில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டதாகும்.

துறைமுகங்களிலிருந்து கிடைத்த வரவுகளும் சென்ற ஆண்டை விட ரூ. 60 இலட்சத்தினால் அதிகரித்தன.

அரசாங்க வர்த்தக முயற்சிகளிலிருந்து பெற்ற அரசிறையில் ஏற்பட்ட அதிகரிப்பு அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளையும் விட ரூ. 350 இலட்சம் உயர்வானதாகும். எனினும் 1975இல் இவ்அரசிறை ரூ. 50 இலட்சத்தினால் வீழ்ச்சியுறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

### ஏனைய நடைமுறை வரவுகள்

1974இல் ஏனைய பல்வகை மூலங்களிலிருந்து பெற்ற நடைமுறை வரவுகள் சென்ற ஆண்டைவிட ரூ. 230 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளன. எனினும் இவை அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 210 இலட்சம் கூடியதாகும். தேசிய லொத்தர் சபையிலிருந்து பெற்ற வரவுகள் முந்திய ஆண்டைவிட ரூ. 10 இலட்சத்தினால் வீழ்ச்சியடைய பல்வகை மூலங்களிலிருந்து பெற்ற வரவுகள் ரூ. 220 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

### மூலதன வரவுகள்

#### (அ) உள்நாட்டுத் துறையின் மூலதனக் கணக்கிலிருந்து மாற்றல்

பூதல் வரி, செல்வ வரி, நன்கொடை வரி, மூலதன வரி என்பவற்றை முக்கியமாக உள்ளடக்கிய இம்மூலத்திலிருந்து கிடைத்த வரவுகள் 1974இல் முந்திய ஆண்டை விட ரூ. 70 இலட்சத்தினால் வீழ்ச்சியுற்றன. நில உடைமைகள் உச்சவரப்பு, வீட்டு உச்சவரம்பு என்பவற்றை நடைமுறைப்படுத்தியதையடுத்து இவ்வாண்டில் செயற்பட்ட நன்கொடைகளின் பெறுமதியில் வீழ்ச்சியேற்பட்டதினால் செல்வவரி நன்கொடை வரிச் சேகரிப்புகள் வீழ்ச்சியடைந்தன. எனினும், இம்மூலத்திலிருந்து கிடைத்த வரவுகள் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 90 இலட்சத்தினால் அதிகரித்தன நன்கொடைவரி, செல்வ வரி என்பவற்றால் ரூ. 160 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்ட அதே வேளையில், பூதல்வரி, மூலதன வரி என்பவற்றின் சேகரிப்புகள் முறையே ரூ. 10 இலட்சத்தினாலும் ரூ. 60 இலட்சத்தினாலும் வீழ்ச்சியுற்றன.

#### (ஆ) ஏனைய மூலதன வரவுகள்

இவ்விடயம் அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டிய நிதியிலிருந்து செய்யப்பட்ட முற்பண மீளக்கொடுப்பனவுகளையும், மூலதனப் பொருட்களின் விற்பனையையும் உள்ளடக்கும். கடன்களினதும் முற்பணங்களினதும் மீளக்கொடுப்பனவுகளிலிருந்து பெற்ற வரவுகள் சென்ற ஆண்டைவிட ரூ. 2 இலட்சத்தினால் வீழ்ச்சியடைய உள்ள மூலதனப் பொருட்களின் விற்பனையிலிருந்து ரூ. 21 இலட்சம் பெறப்பட்டது. எனவே சென்ற ஆண்டை விட ரூ. 19 இலட்சம் கொண்ட மொத்த அதிகரிப்பு ஏற்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில் இம் மூலத்திலிருந்து கிடைத்த அரசிறை 1974இல் ரூ. 195 இலட்சத்தினால் அதிகரித்தது.

3. செலவு

அரசாங்கக்கணக்குகளின்படி 1974ஆம் நிதியாண்டில் ஏற்பட்ட மொத்த அரசாங்கச் செலவு (கடன்கரைப்பு நிதிய உதவு தொகையும் பொதுப்படு கடனின் நேரடி மீளக் கொடுப்பனவும் நீங்கலாக) ரூ. 58,300 இலட்சமாக அமைந்தது. இது ரூ. 57,830 இலட்சம் வாக்களிக்கப்பட்ட செலவையும், ரூ. 470 இலட்சம் "முற்பணக்கணக்குகளின்" கொடுப்பனவையும் உள்ளடக்கும். வாக்களிக்கப்பட்ட செலவில் அடங்கிய மீண்டெழும் செலவு ரூ. 45,060 இலட்சமாக அமைய, மூலதனச் செலவு (மீளக்கொடுப்பனவும் கடன்கரைப்பு நிதிய உதவுதொகையும் நீங்கலாக) ரூ. 12,770 இலட்சமாக அமைந்தது. பொருளாதார, தொழிற்பாட்டுப் பாகுபாட்டின் அடிப்படையில் 1974இல் அரசாங்கத்தின் நடைமுறை, மூலதனச் செலவுகள் முறையே ரூ. 44,830 இலட்சமாகவும் ரூ. 13,000 இலட்சமாகவும் அமைந்தன.

நடைமுறைச் செலவு

1973இல் ரூ. 5310 இலட்சம் அல்லது 16 சதவீத அதிகரிப்பைக் காட்டிய அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுகள் 1974இல் ரூ. 6840 இலட்சத்தினால் அல்லது 18 சதவீதத்தினால் அதிகரித்தன. 1975 இல், அரசாங்க நடைமுறைச் செலவுகள் (மொத்த ஒதுக்கீடு) 1974 ஐ விட ரூ. 2810 இலட்சத்தினால் அல்லது 6 சதவீதத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த மூன்று வருடங்களுக்கான நடைமுறைச் செலவின் விபரங்கள், 1976ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் அட்டவணை II (எ) 5இல் தரப் பட்டுள்ளன.

(அ) நிருவாகம்

ஆய்வுக்குரிய ஆண்டில் நிருவாகத்தின் மீதான நடைமுறைச் செலவுகள் ரூ. 8300 இலட்சமாக அமைந்து முந்திய நிதியாண்டைவிட ரூ. 2510 இலட்சம் அல்லது 43 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தன. இதன்விளைவாக மொத்த நடைமுறைச் செலவில் நிருவாகச் செலவுகளின் அளவு ரீதியான பங்கு 1973இல் 15 சதவீதமாகவிருந்து 1974இல் 19 சதவீதத்திற்கு அதிகரித்தது. பாதுகாப்புச் செலவுடன் ஒப்பிடுகையில் பொது நிருவாகத்தில் ஏற்பட்ட செலவு மிகவும் கூடியதாகும்.[1] ஆய்வுக்குரிய ஆண்டில் பொது நிருவாகத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு முக்கியமாக 1974 ஏப்பிரல் 1 தொடக்கம் மாதம் ரூ. 800 இதற்குக் குறைவான சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு ரூ. 50ஐ உச்ச எல்லையாகக்கொண்டு சிறப்புப்படியாக வழங்கப்பட்ட அவர்களது சம்பளத்தின் 20 சதவீத அதிகரிப்பே காரணமாகும். பல்வேறு அமைச்சுக்களின் ரீதியில் நோக்குகையில் பொது நிருவாகச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக பாதுகாப்பு அமைச்சு, நிதி அமைச்சு. விவசாயக் காணி அமைச்சு

---

1. 1974இல் பொது நிருவாகத்தின் மீதான நடைமுறைச் செலவுகள் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது. ஏனெனில் இத்தொகை அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட சிறப்புப் படியான ரூ. 1500 இலட்சத் தையும் உள்ளடக்குகின்றது. இத்தொகை அரசாங்கக் கணக்குகளில் அவை சார்ந்த செலவுத் தலைப்புகளின்கீழ் பாகுபடுத்தப்படாதிருப்பதினால் தற்காலிகமாகப் பொது நிருவாகத்தின் கீழ் சேர்க்கப்பட்டுள்ளது.

## அட்டவணை II (எ) 5

## அரசாங்கத்தின் நடைமுறைச் செலவு 1971 / 72 — 1975(அ)

| விடயங்கள் | 1971/72 15 மாதங்கள் தொகை ப. இ. ரூ. | 1971/72 12 மாதங்கள் தொகை ப. இ. ரூ. | 1971/72 சதவீதம் | 1973 தொகை ப. இ. ரூ. | 1973 சதவீதம் | 1974 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) தொகை ப. இ. ரூ. | 1974 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) சதவீதம் | 1974 (தற்காலிகம்) தொகை ப. இ. ரூ. | 1974 (தற்காலிகம்) சதவீதம் | 1975 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) தொகை ப. இ. ரூ. | 1975 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. நிருவாகம் ... ... | 724.5 | 579.6 | 17.7 | 579.2 | 15.3 | 694.0 | 17.8 | 830.1 | 18.5 | 717.9 | 15.1 |
| 1.1 பொது ... ... | 521.4 | 417.7 | 12.8 | 434.3 | 11.5 | 565.3 | 14.5 | 660.2(ஈ) | 14.7 | 571.3 | 12.0 |
| 1.2 பாதுகாப்பு ... .. | 203.1 | 162.5 | 4.9 | 144.9 | 3.8 | 128.7 | 3.3 | 169.9 | 3.8 | 146.6 | 3.1 |
| 2. சமூக சேவைகள் ... ... | 1,000.1 | 800.0 | 24.5 | 856.4 | 22.6 | 903.0 | 23.2 | 911.6 | 20 3 | 1,018.9 | 21.4 |
| 2.1 கல்வி ... | 649.1 | 519.3 | 15.9 | 563.4 | 14.9 | 579.3 | 14.9 | 583.1 | 13.0 | 659.2 | 13.8 |
| 2.2 சுகாதாரம் ... | 317.4 | 253.9 | 7.8 | 261.8 | 6.9 | 287.9 | 7.4 | 292.4 | 6.5 | 319.2 | 6.7 |
| 2.3 ஏனைய | 33.6 | 26.9 | 0.8 | 31.2 | 0.8 | 35.8 | 0.9 | 36.1 | 0.8 | 40.5 | 0.9 |
| 3. பொருளாதாரச் சேவைகள் ... | 181.3 | 145.0 | 4.4 | 165.8 | 4.4 | 181.0 | 4.7 | 164.5 | 3 7 | 161.1 | 3.4 |
| 3.1 விவசாயமும், நீர்ப்பாசமும் ... | 88.2 | 70.6 | 2.2 | 84.5 | 2.2 | 100.7 | 2.6 | 82.6 | 1.8 | 69.1 | 1.5 |
| 3.2 போக்குவரத்துச் செய்தித் தொடர்பு ... ... | 38.8 | 31.0 | 30.9 | 35.6 | 0.9 | 30.1 | 0.8 | 32.6 | 0.7 | 36.8 | 0.8 |
| 3.3 ஏனைய ... ... | 54.3 | 43.4 | 1.3 | 45.7 | 1.2 | 50.2 | 1.3 | 49.3 | 1.1 | 55.2 | 1.1 |
| 4. வர்த்தக முயற்சிகளின் மொத்தக் கொடுப்பனவுகள் ... | 327.0 | 261.6 | 8.0 | 291.7 | 7.7 | 303 2 | 7.8 | 356.4 | 7.9 | 387.5 | 8.1 |
| 5. அரசாங்கத் திணைக்களங்களுக்கிடையிலான கொடுப்பனவுகள் ... | 7.1 | 5.7 | 0.2 | 6.8 | 0.2 | 7.8 | 0.2 | 10.7 | 0.2 | 10.7 | 0.2 |
| 6. மாற்றற் கொடுப்பனவுகள் ... | 1,829.8 | 1,463.8 | 44.8 | 1,896.4 | 49.9 | 1,794.3 | 46.1 | 2,208.8 | 49.3 | 2,467.5 | 51.8 |
| 6.1 உணவு மானியங்கள் | 783.5 | 626 8 | 19.2 | 756.7 | 19.7 | 630.2 | 16.2 | 964.1 | 21.5 | 1,162.0 | 24.4 |
| அவற்றில்: உணவுமானியங்கள் | (718.8) | (575.0) | (17.6) | (700 8) | (18.3) | (584.0) | (15.0) | (925.0) | (20.6) | (1,092.0) | (22.9) |
| 6.2 பொதுப்படுகடன் மீதான வழக்கு ... ... | 515.9 | 412.7 | 12.6 | 514.4 | 13.6 | 601.9 | 15.5 | 580.2 | 12.9 | 669.7 | 14.1 |
| 6.3 இளைப்பாறற் சம்பளங்கள் | 316.9 | 253.5 | 7.8 | 270.1 | 7.1 | 279.4 | 7.2 | 292.1 | 6.5 | 295.5 | 6.2 |
| 6.4 சொந்த நடைமுறைக் கணக்கு | 64.7 | 51.8 | 1.6 | 65.9 | 1.7 | 70.7 | 1.8 | 70.8 | 1.6 | 63.8 | 1.3 |
| 6.5 உள்ளூராட்சி மன்றங்கட்கு ... | 76.2 | 61.0 | 1.9 | 65.3 | 1.7 | 66.8 | 1.7 | 70.4 | 1.6 | 79.5 | 1.7 |
| 6.6 ஏனைய .. ... | 72.6 | 58.1 | 1.7 | 224.0 | 5.9 | 145.3 | 3.7 | 231.2 | 5.2 | 197.1 | 4.1 |
| 7. மொத்தம் ... ... | 4,084.8(இ) | 3,267.8 | 100.0 | 3,799.1(இ) | 100.0 | 3,890.3(ஆ)(இ) | 100.0 | 4,482.8(இ) | 100.0 | 4,764.0(இ)(ஈ) | 100.0 |

* விகித சம அடிப்படையில்.

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) பின்னிணைப்பு III அட்டவணை 36 ற்குரிய அடிக்குறிப்புகளைப் பார்க்கவும்.

(ஆ) இவ் எண்தொகைகள் குறைச் செலவு ஒதுக்குகளைக் கணக்கிலெடுக்கவில்லை.

(இ) ஒதுக்க முடியாத வெ. செ. உ. சா. தொகைகளாக 1971/72 இல் ரூ. 150 இலட்சம், 1973 இல் ரூ. 28 இலட்சம், 1974 இல் (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) ரூ. 70 இலட்சம், 1974 இல் (தற்காலிகமான) ரூ. 6 இலட்சம், 1975 இல் (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) ரூ. 4 இலட்சம் என்பவற்றை உள்ளடக்கும்.

(ஈ) அரசாங்க ஊழியர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிரத்தியேகப் படியான ரூ. 1500 இலட்சத்தையும் உள்ளடக்கும். இத்தொகையானது அரசாங்கக் கணக்குகளில் அவ்வவற்றுக்குரிய தொடர்பான தலைப்புகளின்கீழ் பகிரப்படாததினால் அதனை வகைப்படுத்த முடியாமல் உளது.

என்பவற்றிலேயே ஏற்பட்டுள்ளது. பாதுகாப்புச் செலவானது பயங்கரவாதிகளின் நடவடிக்கை காரணமாக 1970/71இல் பதிவுசெய்யப்பட்ட வழமைக்கு மாருன அதிகரிப்பின் பின் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 1974இல் அதற்கு முந்திய நிதி ஆண்டைவிட ரூ. 250 இலட்சம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. 1975இல் நிருவாகத்தின் மீதான நடைமுறைச் செலவு ரூ. 7180 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 15 சதவீதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஆ) சமூக சேவைகள்**

1974இல் ரூ 9120 இலட்சமாக அமைந்த சமூக சேவைகள் மீதான நடைமுறைச் செலவு மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளில் 20 சதவீதமாக அமைந்து 1973ஆம் நிதியாண்டைவிட ரூ. 550 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டியது. இவ்வதிகரிப்பு முக்கியமாக நலத்துறையில் ஏற்பட்ட ரூ. 310 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும், கல்வியில் ஏற்பட்ட ரூ. 200 இலட்சம் கொண்ட அதிகரிப்பினுலும் விளைந்ததாகும். நலத்துறைச் சேவையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக நோயாளர் பராமரிப்புச் சேவை சமூக நலத்துறைச் சேவை என்பவற்றுல் ஏற்பட, மேற்பார்வைச் சேவை உத்தியோகத்தர்களின் சம்பளம், பொதுக்கல்வியின் கல்வித்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஏற்படும் செலவு என்பன காரணமாகக் கல்வித் துறைச் செலவு அதிகரித்தது. 1975இல் சமூகசேவைகள் மீதான செலவு ரூ 1070 இலட்சத்தினுல் அதிகரித்து ரூ. 10,190 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 21 சதவீதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**(இ) பொருளாதார சேவைகள்**

1974இல் பொருளாதார சேவைகள் மீதான நடைமுறைச் செலவு ரூ 1640 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 4 சதவீதமாக அமைந்து 1973ஆம் ஆண்டைவிட மிகச் சிறிய அளவான ரூ. 10 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. இது முக்கியமாக வேளாண்மை நீர்ப்பாசனம், போக்குவரத்துச் சேவை என்பவற்றின் செலவில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும். எனினும், வர்த்தகம், தயாரிப்பு, மீன்பிடி என்பவற்றின் செலவில் சிறிதளவு அதிகரிப்புக் காணப்பட்டது. 1975ஆம் ஆண்டுக்குரிய பொருளாதார சேவைகள் மீதான செலவு ரூ. 1,610 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 3 சதவீதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**(ஈ) வர்த்தக முயற்சிகளின் மொத்தக் கொடுப்பனவுகள்**

இலங்கை அரச புகையிரத சேவை, தபால் தந்தித் தொடர்புகள், துறைமுகச் சேவை என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தக முயற்சிகள் மீதான நடைமுறைச் செலவு 1974இல் ரூ. 3,560 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 8 சதவீதமாக அமைந்து, 1973ஆம் நிதியாண்டைவிட ரூ. 650 இலட்சம் கூடுதலாக விளங்கியது. இவ் அதிகரிப்பு இலங்கை அரச புகையிரத சேவை (ரூ 590 இலட்சம்) இலங்கைத் துறைமுக சேவை (ரூ. 55

இலட்சம்) தபால் தந்தித் தொடர்பு (ரூ. 3 இலட்சம்) என்பவற்றில் ஏற்பட்ட தாகும். இலங்கை அரச புகையிரத சேவையில் ஏற்பட்ட உயர்ந்த செலவு முக்கியமாகப் போக்குவரத்துச் சேவைகள், சம்பள உயர்வு, களனிப்பள்ளத் தாக்குப் பாதையின் பராமரிப்பு என்பன காரணமாக ஏற்பட்டதாகும். இம்முயற்சிகளிலிருந்து எதிர்பார்க்கப்படும் 1975ஆம் ஆண்டுக்கான செலவு ரூ. 3,880 இலட்சமாகும். (மொத்த ஒதுக்கு)

**நடைமுறை மாற்றல்கள்**

அண்மை ஆண்டுகளில் நடைமுறை மாற்றல்கள் அரசாங்கத்தின் மொத்த நடைமுறைச் செலவில் சராசரியாக 46 சதவீதத்தை வழங்கியுள்ளன. ஆய்வுக்குரிய ஆண்டில் நடைமுறை மாற்றல்கள் ரூ. 22,090 இலட்சமாக அல்லது மொத்த நடைமுறைச் செலவில் 49 சதவீதமாக அமைந்துள்ளன. இது முந்திய நிதியாண்டைவிட ரூ. 3,120 இலட்சம் அல்லது 16 சதவீதம் கூடுதலானதாகும். இவ்வதிகரிப்பில் முக்கிய பங்கு வகித்தவை உதவு தொகைகள் (ரூ. 2,070 இலட்சம்) பொதுப்படுகடன் மீதான வட்டி (ரூ. 660 இலட்சம்), ஓய்வூதியங்கள் (ரூ. 220 இலட்சம்) என்பனவாகும். உதவு தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு முக்கியமாக உணவு உதவுதொகை (ரூ. 9,250 இலட்சம்)[1] உர உதவு தொகை (ரூ. 390 இலட்சம்) என்பவற்றால் ஏற்பட்டதாகும். வட்டிக் கொடுப்பனவில் ஏற்பட்ட ரூ. 660 இலட்சம் கொண்ட அதிகரிப்பு உயர்ந்த அளவான கடன்பாடுகள் காரணமாகவும், 1970இற்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட ரூபாக்கடன்கள் மீதான உயர்ந்த வட்டி வீதம் காரணமாகவும் ஏற்பட்ட தாகும். முந்திய நிதியாண்டுடன் ஒப்பிடுகையில் அரசாங்கக் கூட்டுத்தாபனங் களுக்கான நடைமுறை மாற்றல்கள் பெரும்பாலும் அதே வட்டமாக ரூ. 1,640 இலட்சத்தில் அமைந்திருந்தன. 1973இல் ரூ. 1,229 இலட்சமாக அமைந்த அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் நட்ட மீளளிப்புத்தொகை 1974இல் ரூ. 1,450 இலட்சமாக அமைந்தது. இந்நட்டங்கள் முக்கியமாகப் பாற்சபை, (ரூ. 660 இலட்சம்) உரக்கூட்டுத்தாபனம் (ரூ. 570 இலட்சம்) என்பவற்றில் ஏற்பட்டதாகும்.

1975இல் நடைமுறை மாற்றல்கள் ரூ. 24,670 இலட்சமாக (மொத்த ஒதுக்கு) அல்லது மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளில் 52 சதவீதமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்வாறாக, அண்மை ஆண்டுகளில் முதல் தடவையாக இத்தகைய கொடுப்பனவுகள் அரசாங்கத்தின் மொத்த நடைமுறைக் கொடுப்பனவுகளின் அரைப்பங்கிலும் சிறிது கூடுதலான தொகையை வகிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. 1974ஆம் ஆண்டிலும் பார்க்க ரூ. 2,590 இலட்சத்தினால் ஏற்படும் அதிகரிப்பானது, பெருமளவிற்கு உணவு தொகை (ரூ. 1,670 இலட்சத்தால்) கூடியதும் பொதுப்படுகடன் மீதான வட்டி ரூ. 890 இலட்சத்தினால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதுமே காரணமாகும். அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான நடைமுறை மாற்றல்கள் 1975இல் ரூ. 1,439 இலட்சமாக 1974ஆம் ஆண்டினதைவிட ரூ. 210 இலட்சம் குறைவாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

---

1. உணவு உதவுதொகை பற்றிய விரிவான பகுப்பாய்வு ''தேறிய உதவுதொகை'' என்ற பிரிவில் வெளிவந்துள்ளது.

### மூலதனச் செலவு

கடந்த மூன்று வருடங்களுக்குமான மூலதனச் செலவு பற்றிய விபரங்கள் 1975ஆம் ஆண்டிற்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் அட்டவணை II (எ) 6இல் தரப்பட்டுள்ளன. அரசாங்கத்தின் மூலதனச் செலவுகள் ரூ. 13,000 ஆக அமைந்து 1973ஆம் ஆண்டிற்குரிய தொடர்பான எண்தொகையைவிட ரூ. 1,390 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. எனினும், உண்மை ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் உண்மையான செலவுகளுடன் பெரிதும் மாறுபட்டிருப்பதை நோக்கின், விலை அதிகரிப்புகள் மட்டுமே மூலதனச் செலவில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு காரணமாகும் என்று கூறுவதற்கில்லை. மேலும், 1974ஆம் நிதியாண்டில் மூலதனச்செலவில் பண ரீதியில் அதிகரிப்பு ஏற்பட்டபோதும், மொத்தச் செலவில் அதன் தொடர்பான பங்கு முந்திய நிதியாண்டில் பதிவுசெய்யப்பட்ட 23 சதவீத மட்டத்திலிருந்து 21 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1974இல் ஏற்பட்ட ரூ. 13.000 கொண்ட மூலதனச் செலவானது ரூ. 7,810 இலட்சம் (அல்லது 60 சதவீதம்) அரசாங்கத்திணைக்களங்களின் மூலதனச் செலவையும், ரூ. 4,070 இலட்சம் (அல்லது 31 சதவீதம்) மூலதன மாற்றல்களையும், ரு. 1,130 இலட்சம் (அல்லது 9 சதவீதம்) நிதிச் சொத்துக்களின் கொள்வனவையும் உள்ளடக்கும். முந்திய நிதியாண்டின் ஒப்பீட்டுத்தரவுகள் முறையே ரூ. 6,110 இலட்சம் (அல்லது 53 சதவீதம்) ரூ 4,450 இலட்சம் (அல்லது 38 சதவீதம்) ரூ. 1,050 இலட்சம் (அல்லது 9 சதவீதம்) ஆக அமைந்திருந்தன. இவவாறு அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவுகளும், நிதிச்சொத்துக்களின் கொள்வனவும் முறையே ரூ. 1,690 இலட்சத்தாலும், ரூ.80 இலட்சத்தாலும் அதிகரிக்க அதேவேளையில் மூலதன மாற்றல்கள் காரணமாக ரூ. 380 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

1975இல் மதிப்பிடப்பட்ட மொத்த மூலதனச்செலவு ரு 20,860 இலட்சமாக அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இது ரூ. 11,670 இலட்சம் (அல்லது 56 சதவீதம்) அரசாங்கத்திணைக்களங்களின் செலவையும், ரூ. 8,050 இலட்சம் (அல்லது 38 சதவீதம்) மூலதன மாற்றல்களையும், ரூ. 1,170 இலட்சம் (அல்லது 1 சதவீதம்) நிதிச் சொத்துக்களின் கொள்வனவையும் உள்ளடக்கும். 1975இல் மூலதனச் செலவு மதிப்பீடுகள் 1974ஆம் ஆண்டினதைவிட ரூ. 7,860 இலட்சம் அல்லது 60 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பிரதிபலிக்கின்றன இவ்வதிகரிப்பில் அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு ரூ. 3,860 இலட்சமாகவும், மூலதன மாற்றல்கள் ரு. 3,950 இலட்சமாகவும் நிதிச் சொத்துக்களின் கொள்வனவு ரு. 50 இலட்சமாகவும் அமைந்திருந்தன. எனினும், மூலதன வாக்குகளின் மீதான மதிப்பிடப்பட்ட குறைச் செலவாகிய ரூ. 4,930 இலட்சத்திற்கு இடம்விட்டு நோக்கின் எதிர்பார்க்கப்படும் செலவு ரூ. 15,920 இலட்சமாக, 1974ஆம் ஆண்டைவிட ரு. 2,920இலட்சம் அல்லது 24 சதவீதம் கூடுதலாக விளங்கும்.

## அட்டவணை II (ஏ) 6

### அரசாங்கத்தின் மூலதனச் செலவு 1971/72 – 1975 (அ)

| விடயங்கள் | 1971/72 15 மாதங்கள் தொகை ப.இ.ரூ. | 1971/72 12* மாதங்கள் தொகை ப.இ.ரூ. | 1971/72 சதவீதம் | 1973 தொகை ப.இ.ரூ. | 1973 சதவீதம் | 1974 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொகை ப.இ.ரூ. | 1974 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் சதவீதம் | 1974 தற்காலிகமானவை தொகை ப.இ.ரூ. | 1974 தற்காலிகமானவை சதவீதம் | 1975 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் தொகை ப.இ.ரூ. | 1975 அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1. உண்மை இருப்புச் சொத்துக்களின் கொள்ளல் ஆக்கல், பராமரிப்பு ...** | **678.9(இ)** | **543.1** | **59.5** | **611.2(இ)** | **52.7** | **932.2(இ)** | **63.5** | **780.6(இ)** | **59.9** | **1,166.7 இ** | **55.9** |
| 1. 1 பொது நிருவாகம் ... | 52.7 | 42.2 | 4.6 | 50 7 | 4.4 | 54.1 | 3.6 | 60.6 | 4.7 | 54.6 | 2.6 |
| 1. 2 சமூக சேவைகள் .. | 165.5 | 132.5 | 14.5 | 132.8 | 11.4 | 158.9 | 10.8 | 127.8 | 9.8 | 209.4 | 10.0 |
| 1. 2. 1 கல்வி .. | 61.7 | 49.4 | 5.4 | 38.6 | 3.3 | 53.6 | 3.7 | 39.7 | 3.1 | 59.1 | 2.8 |
| 1. 2. 2 சுகாதாரம் . | 32.2 | 25.8 | 2.8 | 36.5 | 3.1 | 52.8 | 3.6 | 39.1 | 3.0 | 87.6 | 4.2 |
| 1. 2. 3 வீடமைப்பு . | 31.9 | 25.5 | 2.8 | 41 7 | 3.6 | 39.0 | 2.7 | 36.6 | 2.8 | 37.2 | 1.8 |
| 1. 2. 4 ஏனைய ... | 39.7 | 31.8 | 3.5 | 16.0 | 1.4 | 13.5 | 0.9 | 12.4 | 1.0 | 25.5 | 1.2 |
| 1. 3 பொருளாதாரச் சேவைகள் ... | 453.2 | 362.5 | 39.7 | 418.9 | 36.1 | 709.6 | 48.4 | 589.7 | 45.4 | 897.7 | 43.0 |
| 1. 3. 1 விவசாயமும் நீர்பாசனமும் ... | 166.0 | 132.8 | 14.6 | 160.0 | 13.8 | 330.7 | 22.6 | 315.8 | 24.3 | 415.1 | 19.9 |
| 1 3. 2 மீன் பிடித்தொழில்... | 5.4 | 4.3 | 0.5 | 2 8 | 0.2 | 28.9 | 2 0 | 12.7 | 1.0 | 39.8 | 1.9 |
| 1. 3. 3 தயாரிப்பும் சுரங்கத் தொழிலும் ... | 11.6 | 9.3 | 1.0 | 12.2 | 1.0 | 21.5 | 1.5 | 16.0 | 1.3 | 17.1 | 0.8 |
| 1. 3. 4 வர்த்தகம் | 18.9 | 15.1 | 1.7 | 6.5 | 0.6 | 8.8 | 0.6 | 5.2 | 0.4 | 17.5 | 0.8 |
| 1. 3. 5 போக்குவரத்து செய்தித் தொடர்புகள் ... | 251.3 | 201.0 | 22.0 | 237.4 | 20.5 | 319.7 | 21.8 | 240.0 | 19.1 | 408.2 | 19.6 |
| **2. மூலதன மாற்றல்கள் ...** | **382.7** | **306.2** | **33.6** | **445.0** | **38.3** | **448.5** | **30.6** | **406.8** | **31.3** | **801.7** | **38.4** |
| 2. 1 உள்ளூராட்சி மன்றங்கள் ... | 18.8 | 15.0 | 1.6 | 15.3 | 1.3 | 15.2 | 1.0 | 14.8 | 1.1 | 12.0 | 0.6 |
| 2. 2 பொதுக் கூட்டுத்தாபனங்கள்... | 322.6 | 258.1 | 28.3 | 384.4 | 33.1 | 395.8 | 27.0 | 378.3 | 29.1 | 747.6 | 35.8 |
| 2. 2. 1 விவசாயமும் நீர்ப்பாசனமும் .. | 157.7 | 126.2 | 13 8 | 144.3 | 12.4 | 174.9 | 11.9 | 195.8 | 15.6 | 233.4 | 11.2 |
| 2. 2. 2 மீன்பிடித் தொழில் .. | 22.0 | 17.6 | 1.9 | 7.8 | 0.7 | 14.2 | 1.0 | 9.0 | 0.7 | 28.5 | 1.4 |
| 2. 2. 3 தயாரிப்பும், சுரங்கத் தொழிலும் .. | 86 6 | 69.3 | 7.6 | 120.1 | 10.3 | 118.2 | 8.1 | 69.2 | 5.5 | 357.4 | 17.1 |
| 2. 2. 4 ஏனைய ... | 56.3 | 45.0 | 4.9 | 112.2 | 9.7 | 88.5 | 6.0 | 104.3 | 8.3 | 128.3 | 6.1 |
| 2. 3 ஏனைய ... | 41.3 | 33.0 | 3 6 | 45.3 | 3.9 | 37.5 | 2.6 | 13.7 | 1.1 | 42.1 | 2.0 |
| **3. நிதி இருப்புச் சொத்துக்களின் ஈட்டம்** | **78.6** | **62.9** | **6.9** | **104.6** | **9.0** | **85.8** | **5.9** | **112.5** | **8.7** | **117.1** | **5.6** |
| **4. மொத்தம் ...** | **1,140.2** | **912.2** | **100.0** | **1,160.8** | **100.0** | **1,466.4ஆ** | **100.0** | **1,299.9** | **100.0** | **2,085.5ஆ** | **100.0** |

(அ) பின்னிணைப்பு III அட்டவணை 36 இன் அடிக்குறிப்பைப் பார்க்க.

(ஆ) இவ் எண் தொகைகள் குறைச் செலவு ஒதுக்குகளைக் கணக்கிலெடுக்கவில்லை.

(இ) 1971/72 இன் ரூ. 75 இலட்சத்தையும், 1973 இன் ரூ. 88 இலட்சத்தையும், 1974 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) இன் ரூ. 95 இலட்சத்தையும் 1974 (தற்காலிகம்) இன் 25 இலட்சத்தையும், 1975 (அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்) இன் ரூ. 50 இலட்சத்தையும் கொண்ட பகுக்கப்படாத வெ. செ. உ. சா. உள்ளடக்கும்.

* விகிதசம அடிப்படையில்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

**(அ) அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு**

அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு 1973ஆம் ஆண்டைவிட 1974இல் ரூ. 1,690 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. பொருளாதாரச் சேவைகள் (ரூ. 1,710 இலட்சம்) பொது நிருவாகச் சேவைகள் ரூ. 100 இலட்சம்) என்பன இவ்வதிகரிப்பிற்குப் பொறுப்பாக அமைய, சமூக சேவைகள் மீதான மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ரூ. 50 இலட்சம்) இதனை ஓரளவு மட்டுப்படுத்தியது. பொருளாதார சேவைகளின்கீழ்ப் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பானது வேளாண்மையும் நீர்ப்பாசனமும் (ரூ. 1,560 இலட்சம்), மீன் (ரூ. 100 இலட்சம்), தயாரிப்பும் சுரங்கத் தொழிலும் (ரூ. 40 இலட்சம்) போக்குவரத்து (ரூ. 30 இலட்சம்) என்பவற்றில் ஏற்பட்டது. இவ்வதிகரிப்பானது வர்த்தகத்தின் மூலதனச் செலவில் ஏற்பட்ட ரூ.10 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினால் சிறிதளவு குறைக்கப்பட்டது. பொருளாதார சேவையில் ஏற்பட்ட மூலதனச் செலவில் அரைப்பங்கிற்கு மேலான தொகை வேளாண்மையிலும் நீர்ப்பாசனத்திலும் ஏற்பட்டதென்பது கவனிக்கத்தக்கது. இச்செலவில் முக்கிய அம்சங்களாக விளங்கியவை. தேயிலை உதவு தொகை (ரூ. 1170 இலட்சம்) அவசரகால உணவு உற்பத்தி இயக்கம் (ரூ. 800 இலட்சம்) நில அளவைத் திணைக்களம் (ரூ. 270 இலட்சம்) முக்கிய நீர்ப்பாசன வேலைகளின் நிருமாணமும் அபிவிருத்தியும் (ரூ. 130 இலட்சம்) வடிகால் அமைப்பு நில மீட்பு வேலைகள் என்பவற்றைச் செயற்படுத்தல் (ரூ, 130 இலட்சம்) வேளாண்மைத் திட்டங்களுக்கான நன்கொடைகளும் உதவு தொகைகளும், குடியேறியவர்களுக்கான உணவு உதவியும் (ரூ. 120 இலட்சம்) தூக்கு நீர்ப்பாசன வேலைகள் (ரூ. 110 இலட்சம்) என்பவையாகும்.

1975இல், அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு ரூ. 11,670 இலட்சமாக (மொத்த ஒதுக்கு) அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது ரூ. 540 இலட்சம் பொது நிருவாகத்தையும். ரூ. 2,090 இலட்சம் சமூக சேவைகளையும் ரூ. 8980 இலட்சம் பொருளாதார சேவைகளையும் உள்ளடக்கும். அரசாங்கத் திணைக்களங்களின் மூலதனச் செலவு 1974ஐவிட ரூ. 3860 இலட்சம் அல்லது 50 சதவீதம் கூடுதலாக அமையும். முக்கியமான அதிகரிப்புகள் சமூக சேவைகளில் ஏற்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதில் நலத்துறை, கல்வி என்பவற்றின் மீதான செலவுகள் முறையே ரூ. 490 இலட்சத்தாலும், ரூ. 190 இலட்சத்தாலும் கூடுதலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. பொருளாதார சேவை மீதான செலவுகளும் ரூ 3080 இலட்சத்தினால் கணிசமானளவு அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. இது பெருமளவிற்குத் துணைகோள் நிலைய செயற்றிட்டம் தொடர்பாக ஏற்பட்ட செய்தித் தொடர்பு மூலதனச் செலவினாலும் (ரூ. 1680 இலட்சம்) வேளாண்மையும் நீர்ப்பாசனத்திலும் ஏற்பட்ட ரூ. 990 இலட்சத்தினாலும் விளைந்ததாகும்.

**(ஆ) மூலதன மாற்றல்கள்**

மொத்த மூலதனச் செலவினால் மூலதன மாற்றல்கள் 1971/72இல் (விகித சமம்) ரூ 3060 இலட்சம் அல்லது 34 சதவீதத்திலிருந்து 1973இல் ரூ. 4450 இலட்சத்திற்கு அல்லது 38 சதவீதத்திற்கு அதிகரித்தன. ஆய்வுக்குரிய ஆண்

டில் அத்தகைய செலவுகள் முழுமை ரீதியில் ரூ. 4070 இலட்சமாக ஏறக்குறைய அதே மட்டத்தில் இருந்தபோதிலும் மொத்த மூலதனச் செலவின் ஒரு பங்கு என்ற அடிப்படையில் நோக்குகையில் இவை 31 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இத்தொகையில், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 3780 இலட்சமாகவும், உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்கான மாற்றல்கள் ரூ. 150 இலட்சமாகவும் அமைந்திருந்தன.

1973இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மூலதன மாற்றல்கள் அதற்கு முந்திய ஆண்டின் விகிதசம எண்தொகையைவிட ரூ. 1260 இலட்சம் கூடுதலாக விளங்க 1974இல் இத்தகைய மாற்றல்கள் ரூ. 60 இலட்சத்தினல் வீழ்ச்சியுற்றன. 1974இல் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த மூலதன மாற்றல்களில் வேளாண்மைத் துறையைச் சார்ந்த கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்கள் ரூ. 1960 இலட்சம் அல்லது 52 சதவீதமாக அமைந்து, ரூ. 520 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இது முக்கியமாக மகாவலி அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்ட அதிகரித்த நன்கொடைகள் (ரூ. 540 இலட்சம்) காரணமாக ஏற்பட்டதாகும் எனினும், தயாரிப்புத் துறைக்கான மூலதன மாற்றல்கள் ரூ. 690 இலட்சமாக அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மொத்த மூலதன மாற்றல்களில் 18 சதவீதமாக அமைந்து, ரூ. 510 இலட்சத்தினல் வீழ்ச்சியடைந்தன. இது முக்கியமாக இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம், (ரூ. 200 இலட்சம்), பாற்சபை (ரூ. 130 இலட்சம்), இலங்கைத் தோற்பொருட்கள் கூட்டுத்தாபனம் (120 இலட்சம்), தேசிய புடவைக் கூட்டுத்தாபனம் (ரூ. 50 இலட்சம்) என்பவற்றில் ஏற்பட்ட வீழ்ச்சி காரணமாக ஏற்பட்டதாகும்

1975இல் மூலதன மாற்றல்கள் ரூ. 8020 இலட்சமாக (மொத்த ஒதுக்கு) அல்லது அரசாங்கத்தின் மொத்த மூலதனச் செலவில் 38 சதவீதமாக அமையுமென மதிப்பிடப்பட்டுள்ளது. உள்ளூராட்சி மன்றங்கள் ரூ. 120 இலட்சத்தைப்பெற, அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும், ஏனையவையும் முறையே ரூ. 7480 இலட்சத்தையும், ரூ. 420 இலட்சத்தையும் பெறுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கக் கூட்டுத்தாபனங்களுக்கான மாற்றல்களில் பெருமளவான தொகை கைத்தொழிற் துறைக்கும் (ரூ. 3570 இலட்சம்) வேளாண்மைத் துறைக்கும் (ரூ. 2330 இலட்சம்) ஆகும்.

(இ) நிதிச் சொத்துக்களின் கொள்வனவு

மொத்த மூலதனச்செலவில் நிதிச் சொத்துக்களின் கொள்வனவுகள் மீதான மூலதனச்செலவின் சார்பு ரீதியான பங்கு 1973இல் 9 சதவீதமாகவிருந்து, 1974இல் மிகச் சிறிதளவாக 8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தபோதும் முழுமை ரீதியில் அண்மை ஆண்டுகளில் இச்செலவுகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. 1974இல் அரசாங்கத்தினல் கொள்வனவு செய்யப்பட்ட முக்கிய நிதிச் சொத்துக்கள் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 600 இலட்சம் கடனும், தேசிய வீடமைப்பு நிதிக்குக் கொடுக்கப்பட்ட ரூ. 380 இலட்சம் கடனுமாகும்.

**4. பணக்குறையும் அதனை நிதியிடலும்**

1974ஆம் ஆண்டுக்குரிய அரசாங்கத்தின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ரூ. 9040 இலட்சம்கொண்ட தேறிய பணக்குறையை எதிர்பார்த்தன. எனினும், வரவுசெலவுத்திட்டத்தின் இறுதி விளைவுகள் மிக உயர்ந்த அளவான ரூ. 10,350 இலட்சம்கொண்ட குறையை ஏற்படுத்தின. 1973இல் ரூ. 9810 இலட்சம்கொண்ட குறை ஏற்பட்டது.

1974இன் தேறிய பணக்குறை முந்திய நிதி ஆண்டைவிட ரூ. 540 இலட்சத்தால் அதிகரித்தது. இது, நடைமுறை, மூலதனச் செலவுகளில் ஏற்பட்ட முறையே ரூ. 6490 இலட்சம், ரூ. 1670 இலட்சம் ஆகிய தொகைகளின் ஒன்றுசேர்ந்த விளைவாகும். ரூ. 7610 இலட்சம்கொண்ட அரசிறை வரவுகளாலும், முற்பணக் கணக்குகளின்தொழிற்பாடுகளின் செலவில் ஏற்பட்ட ரூ. 10 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினாலும் ஓரளவு எதிரீடுசெய்யப்பட்டது.

1974இன் தேறிய பணக்குறை அவ்வாண்டின் அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளைவிட ரூ. 1310 இலட்சம் கூடுதலாயிருந்தது. இது மீண்டெழும் செலவில் ஏற்பட்ட ரூ. 6660 இலட்சம்கொண்ட அதிகரிப்பினதும், மூலதனச் செலவில் ஏற்பட்ட ரூ. 1980 இலட்சம்கொண்ட அதிகரிப்பினதும் ஒன்றுசேர்ந்த விளைவாகும். இது அரசிறை வரவுகளில் ஏற்பட்ட ரூ. 6800 இலட்சம்கொண்ட அதிகரிப்பினாலும், முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளின் தேறிய வெளிக்கொடுப்பனவுகளில் ஏற்படட ரூ. 530 இலட்சம்கொண்ட வீழ்ச்சியினாலும் ஓரளவு குறைக்கப்பட்டது.

1975ஆம் நடைமுறை நிதியாண்டுக்குரிய தேறிய பணக்குறை ரூ. 14,760 இலட்சமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1974ஆம் நிதியாண்டைவிட, ரூ. 4,410 இலட்சம் அதிகரிப்பைக் காட்டுகிறது. மீண்டெழும் செலவில் ரூ. 2,610 இலட்சம், மூலதனச்செலவில் ரூ. 2,130 இலட்சம், முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகளில் தேறிய வெளிக்கொடுப்பனவுகளில் ரூ. 530 இலட்சம் ஆகிய இவற்றில் எதிர்பார்க்கப்படும் ஒன்றுசேர்ந்த விளைவுகள் அரசிறை வரவுகளில் ஏற்பட்ட ரூ. 860 இலட்சத்தினால் குறைக்கப்பட்டு 1975இன் தேறிய பணக்குறை அதிகரிக்குமென எதிர்பார்க்கப்பட்டது.

**பணக்குறையை நிதியிடல்**

1970/71 தொடக்கம் 1974 வரையான ஆண்டுகளின் நிதிமூலங்களும் தேறிய பணக்குறையின் விரிவு சுருக்க விளைவுகளும் பற்றிய தரவுகள் 1975ஆம் ஆண்டிற்குரிய தொடர்பான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன், அட்டவணை II (எ) 7இல் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (எ) 7

### தேறிய பணக்குறையை நிதியீட்டல் — 1970/71 — 1975 (அ)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| மூலங்கள் | 1970/71 | | | 1971/72 12 மாத காலப்பகுதி* | | | 1971/72 15 மாத காலப்பகுதி | | | 1973 | | | 1974 தற்காலிகம் | | | 1975 அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **1. வெளிநாட்டு நிதி** | | | | | | | | | | | | | | | | |
| (அ) செயற்றிட்டக் கடன்கள் (மொத்தம்) .. | 141.1 (இ) | | | 93.3 | | | 116.6 (இ) | | | 153.1 | | | 83.4 | | | |
| கடன்கரைப்புநிதிய உதவுதொகைகளையும் திருப்பிக்கொடுப்பனவுகளையும் நீக்கி .. | 82.8 | 58.3 | | 95.8 | -2.5 | | 119.8 | -3.2 | | 98.4 | 54.7 | | 119.1 | -35.7 | | |
| (ஆ) செயற்றிட்டமல்லாக் (பண்டக்) கடன்கள் | 169.0 | | | 325.2 | | | 406.6 | | | 193.7 | | | 314.2 | | | |
| (மொத்தம்) திருப்பிக் கொடுப்பனவுகளை நீக்கி | 52.8 | 116.2 | | 98.2 | 227.2 | | 122.7 | 283.9 | | 134.9 | 58.8 | | 152.3 | 161.9 | | |
| (இ) நன்கொடைகள் ... | | 59.9 | 234.4 | | 59.7 | 284.3 | | 74.6 | 355.3 | | 46.6 | 160.1 | | 231.4 | 357.6 | 754.0 |
| **2. உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடு** ... | | | 140.5 | | | 198.8 | | | 248.6 | | | 251.0 | | | -32.5 | 65.0(உ) |
| **3. வங்கித் தொழில் முறையிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு (ஆ)** ... | | | | | | | | | | | | | | | | |
| (அ) மத்திய வங்கி ... | | -160.9 | | | 168.2 | | | 210.2 | | | 113.9 | | | 112.3 | | |
| (ஆ) வர்த்தக வங்கிகள் ... | | 254.5 | 93.6 | | 58.2 | 226.4 | | 72.7 | 282.9 | | -229.5 | -115.6 | | -127.3 | -15.0 | — |
| **4. வங்கியல்லாத மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு** | | | | | | | | | | | | | | | | |
| கடன்பெற்ற மொத்தத் தொகை ... | | 599.1 | | | 577.0 | | | 721.2 | | | 819.4 | | | 976.2 | | |
| கடன்கரைப்புநிதிய உதவுதொகைகளை நீக்கி ... | | 107.4 | 491.7 | | 135.4 | 441.6 | | 169.3 | 551.9 | | 196.9 | 622.5 | | 290.0 | 686.2 | 657.0 |
| **5. பண நிலுவைகளிலும், பண்ட உதவி இணைக்கிணை நிதிகளிலும் ஏற்பட்ட வீழ்ச்சி** ... | | | | | | | | | | | | | | | | |
| (அ) பண நிலுவைகள் ... | | -3.3 | | | -87.8 | | | -109.8 | | | 45.1 | | | 10.0 | | |
| (ஆ) வெளிநாட்டு உதவி இணைக்கிணை நிதிகள் (மொத்த வரவுப் பதிவுகள்) ... | -245.6 | | | -342.6 | | | -428.2 | | | -238.8 | | | 484.1 | | | |
| வரவு செலவுத் திட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்ட தொகைகள் நீக்கி .. | 372.1 | 126.4 | (ஈ) 123.1 | 315.2 | -27.4 | -115.2 | 394.0 | -34.2 | -144.0 | 256.6 | 17.8 | 62.9 | 512.7 | 28.6 | 38.6 | — |
| **6. தேறிய பணக் குறை** ... | | | 1083.3 | | | 1035.8 | | | 1294.7 | | | 980.9 | | | 1034.9 | 1476.0 |
| **7. ஐ. அ. உதவி இணைக்கிணை நிதியின் வீழ்ச்சி** | | | 1.4 | | | — | | | — | | | -0.2 | | | — | — |
| **8. அரசாங்க நிதி இயக்கங்களின் தேறிய விரிவுத் தாக்கம் (3+5+7)** ... | | | 218.1(ஈ) | | | 111.1 | | | 138.9 | | | - 52.9 | | | 23.6 | — |

* விகிதசம அடிப்படையில்

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) சய அடையாள விடயங்கள் 1-4ஐயும் 8ஐயும் பொறுத்தவரையில் திருப்பிக் கொடுப்பனவையும், 5ஐயும் 7ஐயும் பொறுத்தவரையில் அதிகரிப்பையும் குறிக்கின்றன.

(ஆ) இவ்வெண்தொகைகள் வங்கிகள் கொண்டிருந்த அரசாங்க இறக்குமதி (உணவு) உண்டியல்களின் பெறுமதிகளைக் கணக்கில் எடுக்கவில்லை. வங்கியல்லா மூலங்களிலிருந்து உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டுத் துறைக்குள் இப்போது அடக்கப்பட்ட வங்கித்துறையின் வரி ஒதுக்குச் சான்றிதழ்களையும் தவிர்த்து.

(இ) மக்கள் சீனக்குடியரசிடமிருந்து 1970/71ல் பெறப்பட்ட பணக்கடனாகிய ரூ. 1000 இலட்சத்தையும் 1971/72ல் பெறப்பட்ட ரூ. 500 இலட்சத்தையும் உள்ளடக்கும்.

(ஈ) 1971உக்குரிய ஆண்டறிக்கையின் 176ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைப் பார்க்கவும்.

(உ) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி மதிக்கப்பட்ட தொகை ரூ. 730 இலட்சமாகும். ஆனால் தற்போது மதிப்பிடப்பட்ட தேவையான தொகை ரூ. 650 இலட்சமாகும்.

1974இன் ரூ. 10,350 இலட்சம்கொண்ட தேறிய பணக்குறையானது உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து பெற்ற ரூ. 6,860 இலட்சத்தினுலும், வெளிநாட்டு உதவிகளிலிருந்து பெற்ற ரூ. 3,580 இலட்சத்தினுலும் நிதியிடப்பட்டது என்பது கவனிக்கத்தக்கது. அதேவேளை உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகளின் தேறிய மீளக்கொடுப்பனவான ரூ. 330 இலட்சமும் வங்கியமைப்பிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளான ரூ. 150 இலட்சமும் செய்யப்பட்டன. கிடைக்கத்தக்கதாயிருந்த மூலவளங்களுக்குத் துணைசெய்யும் வகையில் அரசாங்கத்தின் பண நிலுவைகள் (வெளிநாட்டுதவி இணைக்கிணை நிதி உட்பட) ரூ. 390 இலட்சத்தினுல் குறைக்கப்பட்டன.

1975ஆம் நடைமுறை நிதியாண்டின் மதிப்பிடப்பட்ட தேறிய பணக்குறையான ரூ. 14,760 இலட்சம் முழுவதும் ரூ. 7,540 இலட்சம்கொண்ட வெளிநாட்டு நிதிப்பெறுகைகளாலும், உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைமூலங்களிலிருந்து திரட்டப்படும் ரூ. 6,570 இலட்சத்தினுலும், நிருவாக மூலங்களிலிருந்து பெறப்படும் ரூ. 650 இலட்சத்தினுலும் நிதியிடப்படும்.

1974இல் அரசாங்க நிதித் தொழிற்பாடுகளின் தேறிய விரிவுத்தாக்கம் அதற்கு முந்திய நிதியாண்டின் சுருக்கத் தாக்கமான ரூ. 530 இலட்சத்திற்கு மாருக ரூ. 240 இலட்சமாக அமைந்தது. இவ்விரிவுத்தாக்கம் ரூ. 390 இலட்சம்கொண்ட அரசாங்கத்தின் பண நிலுவைகளின் எடுப்பனவினதும், அரசாங்கம் வங்கி அமைப்பிடம் கொண்டிருந்த தனது கடன்பாட்டை ரூ. 150 இலட்சத்தினுல் குறைத்ததினதும் தேறிய விளைவாகும். 1974இன் வெளிநாட்டு உதவியிலிருந்து பெற்ற தேறிய வரவுகள் ரூ. 1980 இலட்சத்தினுல் அதிகரிக்க (1973ஆம் ஆண்டு வரவுகளைவிட 124 சதவீத அதிகரிப்பு) உள்நாட்டு வங்கியல்லாச் சந்தை மூலங்களிலிருந்து திரட்டப்பட்ட தேறிய மூலவளங்கள் ரூ. 640 இலட்சத்தினுல் மட்டும் அதிகரித்தன. வெளிநாட்டு உதவியிலிருந்து கிடைத்த அதிகரித்த வரவுகள், முக்கியமாக 1974இல் ரூ. 2310 இலட்சமாக அமைந்த வெளிநாட்டு நன்கொடைகளில் ஏற்பட்ட நான்கு மடங்கான அதிகரிப்பினுல் ஏற்பட்டது,

அரசாங்கம் மத்திய வங்கியிடம் கொண்டிருந்த கடன்பாடுகள் 1973இன் ரூ. 1140 இலட்ச அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1974இல் ரூ. 1120 இலட்சத்தினுல் அதிகரித்தன. 1974இல் ஏற்பட்ட அதிகரிப்பு திறைசேரி உண்டியல்கள் மீதான ரூ. 830 இலட்ச அதிகரிப்பையும், முற்பணங்கள் மீதான ரூ. 390 இலட்சத்தையும் இவற்றை ஓரளவு குறைக்கும் ரூபாக்கடன்கள் மீதான ரூ 100 இலட்ச வீழ்ச்சியையும் உள்ளடக்கும். மறுபுறம், அரசாங்கம் வர்த்தக வங்கிகளிடம் கொண்டிருந்த கடன்பாடு 1973இல் ஏற்பட்ட ரூ. 2290 இலட்சம்கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் ரூ. 1270 இலட்சத்தினுல் வீழ்ச்சியுற்றது. இந்த ரூ 1270 இலட்சம்கொண்ட வீழ்ச்சியானது, ரூபாக் கடன்களின்பேரில் ரூ. 190 இலட்சத்தையும், திறைசேரி உண்டியல்களின்பேரில் ரூ. 1080 இலட்சத்தையும் உள்ளடக்கும். இத்தொழிற்பாடுகளின் தேறிய விளைவாக அரசாங்கம் வங்கியமைப்பிடம் கொண்டிருந்த பொறுப்பின் குறைப்பு 1973இல் ஏற்பட்ட ரூ. 1160 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 150 இலட்சமாக அமைந்தது.

உள்நாட்டு வங்கியல்லாத்துறையிடமிருந்து அரசாங்கத்தினுல் திரட்டப்பட்ட மூலவளங்கள் 1973இல் பெறப்பட்ட ரூ. 6230 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 6860 இலட்சமாக அமைந்தன. இவ்வறிக்கையின் 'பொதுப்படுகடன்' என்ற பகுதி அரசாங்கக் கடன் திட்டங்கள் பற்றிய விரிவான ஆய்வைத் தருகின்றது.

கடந்த நான்கு நிதியாண்டுகளிலும் வங்கியல்லா முதலீட்டுத் தொகுதியின் தேறிய உதவுதொகைகளை (உதாரணமாக அரசாங்கப் பிணைகளின் உடைமையில் ஏற்பட்ட மாற்றல்கள்) அட்டவணை II (எ) 8 காட்டுகின்றது. 1974இன் வங்கியல்லா முதலீட்டுத் தொகுதியிலிருந்து பெற்ற தேறிய உதவுதொகைகளின் அதிகரிப்பு முக்கியமாகத் தேசிய சேமிப்பு வங்கியிலும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திலுமிருந்து கிடைத்தது. ஊழியர் சேமநிதியினுல் வழங்கப்பட்ட தேறிய உதவுதொகை 1974இல் அதற்கு முந்திய ஆண்டைப்போன்று குறிப்பிடத்தக்க அதிகரிப்பைப் பதிவுசெய்யவில்லை. மேற்குறிப்பிட்ட முதலீட்டாளர்கள் என்ன சூழ்நிலைகளில் தமது அரசாங்கப் பிணைகளிலுள்ள உடைமைகளை அதிகரித்தார்கள் என்பது பற்றிய விரிவான பகுப்பாய்வும் இவ்வறிக்கையில் 'பொதுப்படுகடன்' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளது.

### அட்டவணை II (எ) 8

### அரசாங்கப் பிணைகளுக்கான(அ) வங்கியல்லா முதலீட்டுத் தொகுதிகளின் உதவு தொகைகள்

ப. இ. ரூ.

| உதவுநர்கள் | 1970/71 | 1971/72 12* மாதங்கள் | 1971/72 15 மாதங்கள் | 1973 | 1974 தற்காலிகம் | அதிகரிப்பு 1971/72 (12 மாதங்கள்) இலும் பார்க்க 1973 | அதிகரிப்பு 1973 இலும் பார்க்க 1974 |
|---|---|---|---|---|---|---|---|
| 1. சேமிப்பு நிறுவனங்கள் ... | 180.7 | 93.8 | 117.3 | 213.0 | 276.1 | 119.2 | 63.1 |
| 2. ஊழியர் சேம நிதி ... | 143.0 | 164.2 | 205.3 | 197.0 | 198.6 | 32.8 | 1.6 |
| 3. ஏனைய சேம, இளைப்பாறற் சம்பள நிதிகள் ... | 44.5 | 47.7 | 59.6 | 29.5 | 25.9 | -18.2 | - 3.8 |
| 4. திணைக்கள, ஏனைய அலுவலக நிதிகள் | 6.9 | 41.7 | 52.1 | 42.8 | 9.1 | 1.1 | -33.7 |
| 5. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 60.7 | 55.2 | 69.0 | 99.8 | 106.9 | 44.6 | 7.1 |
| 6. ஏனைய காப்புறுதி நிதியங்கள் ... | - 1.8 | - 9.7 | -12.1 | -15.8 | - 7.6 | - 6.1 | 8.2 |
| 7. ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள் | — | — | — | — | — | — | — |
| 8. கூட்டு நிலையங்களும், சங்கங்களும், நிறுவனங்களும் | 5.6 | 13.6 | 17.0 | 2.9 | - 4.3 | -10.7 | - 7.2 |
| 9. தனியாட்கள் | 2.5 | - 1.9 | - 2.4 | - 7.1 | - 1.9 | - 5.2 | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* விகித சம அடிப்படையில்

(அ) இவ்வட்டவணை அதில் தரப்பட்ட நிறுவனங்கள் கொண்டிருக்கும் ரூபாப் பிணைகள், இறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குப் பத்திரங்கள் முதலியவற்றின் தேறிய மாற்றத்தைக் காட்டும்.

*1973*இன் ரூ. *2510* இலட்சம்கொண்ட உள்நாட்டுச் சந்தையல்லாக் கடன்பாடுகளுக்கு மாருக *1974*இல் இக்கடன்களின் தேறிய மீளக் கொடுப்பனவுகள் ரூ. *330* இலட்சமாக விளங்கின. இந்நிலை வைப்புக்களிலும் 'பல்வகை நிதி'களிலும் ஏற்பட்ட முறையே ரூ. *490* இலட்சம், ரூ. *10* இலட்சம் கொண்ட வீழ்ச்சிகள் 'நிருவாகக் கடன்பாடுகளிலும்' 'அரசாங்க நிறுவனங்களுக்கான' கடன்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பான முறையே ரூ. *150* இலட்சத்தினுலும், ரூ. *30* இலட்சத்தினுலும் ஈதிரீடுசெய்யப்பட்டதனுல் ஏற்பட்டது.

*1974*இல் அரசாங்கத்திற்கு அதன் நிதித்தொழிற்பாடுகளைத் தாங்குவதற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த வெளிநாட்டு நிதியின் அளவு ரூ. *6290* இலட்சமாகும். இது ரூ. *830* இலட்சம்[1] (*13* சதவீதம்) செயற்றிட்டக் கடன்களையும், ரூ. *3140* இலட்சம்[1] (*50* சதவீதம்) பண்டக்கடன்களையும், ரூ. *231* இலட்சம் (*37* சதவீதம்) வெளிநாட்டு நன்கொடைகளையும் உள்ளடக்கும். கடன்தீர் நிதிக்கும், கடன்கரைப்பு நிதியத்துக்கும் இடமளித்து நோக்கின் தேறிய பணக்குறையைச் சமாளிப்பதற்குக் கிடைக்கத்தக்கதாயுள்ள தேறிய வெளிநாட்டு நிதியின் அளவு ரூ. *3580* இலட்சமாகும். இத்தொகையில் பண்டக் கடன்கள் ரூ. *1620* இலட்சமாகவும், வெளிநாட்டு உதவி நன்கொடைகள் ரூ. *2310* இலட்சமாகவும் அமைய செயற்றிட்டக் கடன்கள் தொடர்பாக ரூ. *360* இலட்சம் தேறிய மீளக் கொடுப்பனவு காணப்பட்டது. ஒப்பிடுகையில் சென்ற ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தேறிய வெளிநாட்டு நிதி ரூ. *1600* இலட்சமாக அமைந்தது இது ரூ. *550* இலட்சம் செயற்றிட்டக் கடன்களையும், ரூ. *590* இலட்சம் பண்டக் கடன்களையும், ரூ. *470* இலட்சம் வெளிநாட்டு நன்கொடைகளையும் உள்ளடக்கும். *1974*இல் செயற்றிட்டக் கடன்களின் தேறிய வரவில் மிகப் பெருமளவு வீழ்ச்சி ஏற்பட்டபோதும் பண்டக்கடன்களில் குறிப்பிடத்தக்க அளவான அதிகரிப்புக் காணப்பட்டது. இவ்வாண்டில் பெறப்பட்ட வெளிநாட்டு நன்கொடைகள் முந்திய ஆண்டைவிட நான்கு மடங்கு அதிகரிப்பைக் காட்டுகின்றன. இந்த நன்கொடைகளில் அரிசி, கோதுமை மா என்பனவற்றின் வடிவில் உணவு உதவிகளாக ரூ. *1400* இலட்சம் பெறப்பட்டது. தேறிய பணக்குறையின் மூன்றிலொரு பங்கிலும் சிறிது கூடுதலான தொகை இவ்வாறு வெளிநாட்டு உதவியினுல் நிதியீடு செய்யப்பட்டது.

கடந்த ஏழு வருடங்களிலும் வெளிநாட்டு உதவியிலிருந்து பெற்ற தேறிய வரவுகள் பற்றிய விபரங்கள் அவற்றின் வகைகளின்படியும் மூலங்களின்படியும் அட்டவணை II (எ) 9இல் தரப்பட்டுள்ளது.

---

1. இவ்வெண்தொகைகள் தகவல் மூலங்களிலுள்ள வேறுபாட்டின் காரணமாக "பொதுப்படுகடன்" என்ற பகுதியில் காட்டப்பட்ட தொடர்பான எண்தொகைகளைவிட ரூ. 90 இலட்சம் கூடியதாகும். அதாவது திறைசேரியும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களமும்.

# அட்டவணை II (எ) 9

## வெளிநாட்டு உதவிகளின் தேறிய வரவுகள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகையும் மூலமும் | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 12 மாதங்கள்* | 1971/72 15 மாதங்கள் | 1973 | 1974 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|---|---|---|
| **1. கடன்கள்** ... | **334.1** | **202.8**அ | **220.6**அ | **293.6** | **367.0**அ | **202.0**அ | **226.2**அ |
| 1.01 ஆ. அ. வ. | — | — | 9.2 | 17.9 | 22.4 | 19.5 | 17.4 |
| 1.02 ப. பு. அ. வ. | - 8.4 | - 9.3 | - 7.7 | - 10.4 | - 13.0 | - 12.4 | - 4.3 |
| 1.03 ப. அ. ச. ... | — | 4.7 | 20.1 | 17.2 | 21.5 | 32.2 | 41.3 |
| 1.04 கனடா ... | 8.5 | 6.0 | 7.5 | 17.7 | 22.0 | 12.5 | - 1.6 |
| 1.05 மக்கள் சீனக் குடியரசு ... | - 5.5 | 4.8 | 137.7 | 66.1 | 82.6 | 27.4 | 61.8 |
| 1.06 ஐ. இ. | 37.0 | 38.2 | 11.4 | 32.2 | 40.2 | 1.3 | - 9.0 |
| 1.07 ஐ. அ. நா. ... | 177.9 | 49.8 | 34.4 | 102.0 | 127.5 | 66.0 | - 13.8 |
| 1.08 ஐ. சோ. ச. கு. ... | - 9.6 | - 9.2 | - 7.1 | - 7.2 | - 9.0 | - 8.5 | - 8.3 |
| 1.09 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு ... | 17.4 | 29.0 | 1.5 | 9.0 | 11.9 | 19.5 | 54 2 |
| 1.10 யூகோசிலாவியா ... | - 0.8 | - 0.4 | - 1.3 | - 0.2 | - 0.3 | - 0.3 | - 0.3 |
| 1.11 போலாந்து ... | - 0.6 | - 0.9 | - 0.9 | - 1.3 | - 1.6 | - 0.4 | - 0.3 |
| 1.12 பிரான்சு ... | 1.6 | 10.2 | 1.5 | 7.7 | 9.6 | 22.1 | 18.6 |
| 1.13 யப்பான் ... | 18.3 | 13.7 | 8.2 | 50.5 | 63 0 | 18.5 | 40.5 |
| 1.14 இந்தியா ... | 16.9 | 23.6 | 4.7 | 9.1 | 11.4 | 6.9 | 7.4 |
| 1.15 சேர்மன் சனநாயகக் குடியரசு ... | 79.6 | 28.3 | - 9.2 | - 18.7 | - 23.4 | - 7.0 | - 11.8 |
| 1.16 தென்மாக்கு | 1.6 | 8.0 | 3.4 | 4.0 | 5.0 | 6.7 | - 1.9 |
| 1.17 இத்தாலி ... | — | 6.3 | 7.2 | - 2.3 | - 2.9 | - 2.0 | 8.1 |
| 1.18 கங்கேரி ... | — | — | — | — | — | — | 0.7 |
| **2. நன்கொடைகள்** ... | **19.5** | **62.8** | **59.9** | **59.7** | **74.6** | **46.6** | **231.4** |
| 2.01 கொழும்புத் திட்டம் | 1.4 | 26.2 | 24.1 | 19.7 | 24.6 | 34.6 | 54.7 |
| 2.01.1 அவுத்திரேலியா ... | 0.1 | 4.8 | 6.0 | 5.7 | 7.1 | 13.1 | 28.0 |
| 2.01.2 கனடா | — | 18.7 | 18.1 | 14.0 | 17.5 | 20.4 | 16.7 |
| 2.01.3 யப்பான் | — | 2.7 | — | — | — | 1.1 | 10.0 |
| 2.01.4 நியூசிலாந்து ... | 1.3 | — | — | — | — | — | — |
| 2.02 ஏனைய ... | 18.2 | 36.6 | 35 7 | 40.0 | 50.0 | 12.0 | 176.7 |
| 2.02.1 ஐக்கிய நாடுகள் ... | 3 1 | 2.0 | 5.0 | 3.1 | 3.9 | 1.0 | 17.1 |
| 2.02.2 மக்கள் சீனக் குடியரசு .. | ... | 4.7 | 7.9 | 11.0 | 13.8 | 1.4 | 126.3 |
| 2.02.3 ஐ. அ. நா. | 0.8 | 6.6 | 4.8 | 14.5 | 18.1 | ... | 0.1 |
| 2.02.4 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு | — | 9.7 | 5.7 | 0.6 | 0.7 | 5.1 | 4.8 |
| 2.02.5 செக்கோசிலாவாகியா ... | — | — | — | — | — | ... | — |
| 2.02.6 ஐக்கிய இராச்சியம் | 14.3 | 13 6 | 9.4 | 4.8 | 6.0 | 0.1 | — |
| 2.02.7 சேர்மன் சனநாயகக் குடியரசு ... | — | — | — | 0 6 | 0.8 | — | 1.4 |
| 2.02.8 பிரான்சு ... | — | — | — | 5.4 | 6.7 | 4.4 | 9.2 |
| 2.02. 9 ஐ. சோ. ச. கு. ... | — | — | — | — | — | — | ... |
| 2.02.10 சுவீடன் ... | — | — | — | — | — | — | 14.8 |
| 2.02.11 சுவிற்சலாந்து ... | — | — | — | — | — | — | 0.2 |
| 2.02.12 பகுப்பாய்வு செய்யப்படாதது | — | — | — | — | — | — | 2.8 |
| **3. மொத்தக் கடன்களும் நன்கொடைகளும்** ... | **353.6** | **265.6** | **280.5** | **353.3** | **441.6** | **248.6** | **457.6** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

† இந்த மொத்தக் கடன்களின் எண்தொகைகள் பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 31இன் தொடர்பான எண்தொகைகளுடன் ஒத்திருக்காது. ஏனெனில் 1969/70, 1970/71, 1971/72, 1973, 1974 ஆம் ஆண்டுகளின் வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகளுக்குக் கொடுக்கப்படவேண்டிய வெ. செ. உ. சா. தொகையான ரூ. 392 இலட்சம், ரூ. 461 இலட்சம், ரூ. 862 இலட்சம், ரூ. 885 இலட்சம், ரூ. 980 என்பவை இவ்வட்டவணையில் சேர்த்துக்கொள்ளப்படாமையேயாகும். மேலும் அவை "பொதுப் படுகடன்" என்னும் பகுதியில் கொடுக்கப்பட்ட தொடர்பான எண் தொகைகளை விட ரூ. 92 இலட்சத்தால் வேறுபடுகின்றன, இது தகவல்கள் பெறப்பட்ட வேறுபட்ட மூலங்கள் காரணமாக ஏற்பட்டதாகும். உ + ம். இறைசேரியும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப் படுகடன் திணைக்களமும்.

* விகிதசம அடிப்படையில்

5. **தேறிய உணவு உதவுதொகை**

அரசாங்கக் கணக்குகளில் மொத்த உணவு தொகை ஒரு செலவு விடயமாகவும், உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் அரசிறை விடயமாகவும் தரப்பட்டுள்ளது. தேறிய உணவு உதவுதொகையானது மொத்த உணவு உதவுதொகையிலிருந்து சில குறிப்பிட்ட உணவுப் பொருட்களின் (முக்கியமாகக் கடந்த காலத்தில் சீனியும் மாவும்) இறக்குமதி விற்பனை என்பவற்றின்மூலம் கிடைத்த இலாபத்தைக் கழித்துப் பெறப்படுகின்றது. மொத்த உணவு உதவுதொகை பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசி மீதான தேறிய கொடுப்பனவுகளையும், உத்தரவாத விலைத் திட்டத்தின்கீழ் நெல்லிற்கு வழங்கப்பட்ட உற்பத்தியாளர் உதவுதொகையையும் பருப்பு, சீனி, குழந்தைகளின் பாலுணவு போன்ற உணவுப்பொருட்களின் இறக்குமதி விற்பனை என்பவற்றின் மீதான உதவுதொகையையும் உள்ளடக்கும். 1970/71இற்கு முந்திய காலப்பகுதியில் தொடர்ந்து இலாபத்தைக் கொடுத்துவந்த சீனி, மா என்பவற்றின் இறக்குமதியும் விற்பனையும் அண்மைக் காலங்களில் தொடர்ச்சியான இலாபத்தைத் தராததுடன் சில ஆண்டுகளில் நட்டமும் ஏற்பட்டுள்ளது. (எனவே மொத்த உணவு உதவுதொகை அதிகரிக்கிறது.) தேறிய உணவு தொகையைக் கணிக்கையில் இவ்விடயங்களின் வீநியோகச் செலவுகளும் ஏனைய செலவுகளும் கணக்கிலெடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை II (எ) 10 சடந்த மூன்று நிதி ஆண்டுகளின் மொத்த உணவு தொகை, உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள், விநியோகச் செலவுகள், ஏனைய செலவுகள் என்பவற்றை 1974, 1975ஆம் ஆண்டுகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுடன் தருகின்றது. ஒவ்வொரு ஆண்டுக்குமான தேறிய உணவு உதவுதொகையும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

**மொத்த உணவு உதவுதொகை**

*1974*ஆம் (தற்காலிக) ஆண்டுக்குரிய மொத்த உணவு உதவுதொகை ரூ. 9250 இலட்சமாக அமைந்து, *1973*ஆம் ஆண்டுக்குரிய எண்தொகைகளைவிட ரூ 2240 இலட்சம் அல்லது 33 சதவீதம்கொண்ட மிகப் பெருமளவு அதிகரிப்பைக் காட்டியது. இதற்குமாறாக *1973*ஆம் ஆண்டுக்குரிய உதவுதொகை *1971/72*ஆம் ஆண்டுக்குரிய 12 மாத விகிதசம எண்தொகைகளைவிட ரூ. 1270 இலட்சம் அல்லது 22 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

*1973*ஆம் நிதியாண்டு.

*1971/72*ஆம் (12 மாத விகிதசம) ஆண்டைவிட *1973*இல் அரிசி மீதான உதவுதொகை ரூ. 300 இலட்சம் அல்லது 6 சதவீதம் அதிகமானதாகவிருந்தது. இது முக்கியமாக, அரிசியின் சராசரி இறக்கற் செலவு ஒரு லோங் தொன்னுக்கு ரூ. 577/- இலிருந்து ரூ. 1015 ஆக அதிகரித்தமையினாலும் (76 சதவீதம்), உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட நெல்லின் விலை ரூ. 14/ இலிருந்து ரூ. 25 ஆக அதிகரிக்கப்படடமையினால்[1]

---

1. முதலில் 1973 பெப்புருவரி 15 தொடக்கம் உத்தரவாத விலைத்திட்டத்தின்கீழ் ஒரு புசல் நெல்லின் விலை ரூ. 14/- இலிருந்து ரூ. 18/- ஆக அதிகரிக்கப்பட்டது. மீண்டும் 1973 ஒற்றோபர் 1இலிருந்து இது ரூ. 25/- ஆக அதிகரிக்கப்பட்டது.

## அட்டவணை II (எ) 10

## தேறிய உணவு உதவிப் பணம் 1971/72—1975

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | 1971/72 15 மாதங்கள் | 1971/72 12 மாதங்கள்[1] | 1973 | 1974 அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடுகள் | 1974 தற்காலிக மாவனவை | 1975 அங்கீகரிக்கப் பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|---|
| **I. மொத்த உணவு உதவிப்பணம்** | | | | | | |
| 1. இறக்குமதி செய்யப்பட்ட அரிசி மீது நுகர்வோருக்கான உதவிப் பணமும் | 614.1 | 491.3 | 139.9 | 532.7 | 392.0 | 904.0 |
| 2. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அரிசி மீது உற்பத்தியாளர்க்கும் ... | | | 381.1 | | 373.0 | |
| கூட்டுக: (அ) வழங்கும் செலவுகளும் ஏனைய கட்டணங்களும் ... | 44.9 | 35.9 | 41 8 | 45.9 | 46.3 | 97.5 |
| (ஆ) தன்னியல்பான குடும்பத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் | — | — | 1.1 | | — | — |
| 3. உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட வெங்காயத்தின் மீதான உதவிப் பணம் .. | — | — | — | — | — | — |
| 4. பின்வருவனவற்றின் விற்பனையில் ஏற்பட்ட நட்டங்கள் | | | | | | |
| பருப்பு4 ... ... ... | — | — | — | — | — | — |
| வெண்காயம் ... ... ... | 9.1 | 7.3 | — | — | — | — |
| மிளகாய் ... ... ... | 3.2 | 2.6 | 4.0 | 5.0 | 5.6 | 6.0 |
| குழந்தைகளுக்கான பாலுணவு .. ... | 28.2 | 22.6 | 111.1 | — | 38.4 | — |
| வழங்கற் செலவுகள் என்பன உட்பட கோதுமை மா ... ... | — | — | — | — | 42.9 | 85.2 |
| சீனி2 ... ... ... | 16.3 | 13.0 | 21.9 | 0.8 | 27.4 | — |
| 5. பெறுமானத் தேய்வு ... ... | 2.0 | 1.6 | 2.4[3] | — | — | — |
| 6. கழிக்க: பல்வகை வருவாய்கள் ... ... | — | — | 2.6 | 0.5 | 0 6 | 0.5 |
| 7. மொத்த உணவு உதவிப் பணம் ... ... | 717.8 | 574.3 | 700.8 | 583.9 | 925.0 | 1092.2 |
| **II. உணவுப் பொருட்களின் விற்பனவிலிருந்து பெற்ற இலாபங்கள்** | | | | | | |
| 1. சீனி (வழங்கற் செலவு என்பவை தவிர்த்து) 2 ... ... | 58.9 | 47.1 | 21.8 | 123.9 | — | — |
| 2. கோதுமை மா (வழங்கீற் செலவு என்பவை தவிர்த்து) ... ... | — | — | — | 0.2 | — | 17.7 |
| 3. மாலைதீவுக் கருவாடு ... ... | 1.6 | 1.3 | — | — | — | — |
| கூட்டுக: அரிசி உதவிப்பண வரி ... ... | 0.9 | 0.7 | — | — | — | — |
| 4. இலாபங்கள் ... ... | 61.4 | 49.1 | — | 124.1 | — | — |
| **III. தேறிய உணவு உதவிப் பணம்** ... ... | 656.4 | 525.2 | 679.0 | 459.8 | 925.0 | 1074.5 |

மூலம்: உணவு ஆணையாளர்.

1. விகித சம அடிப்படையில்.
4. 1973, 1974 ஆம் ஆண்டுகளில் கூ. மொ. வி. நிலையத்திற்கான முறையே ரூ. 180 இலட்சத்தையும் 260 இலட்சத்தையும் உள்ளடக்கும்.
2 சீனி இறக்குமதி மீது பின்வருமாறு வெ. செ. உ. சா. செலுத்துமதிகளை உள்ளடக்கு.
1971/72 (15 மாதங்கள்) ரூ. 1630 இலட்சம். 1973 – ரூ. 2207 இலட்சம். 1974 தற்காலிகம்) – ரூ. 758 இலட்சம். 1975 – ரூ. 1852
(அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள்).
3 ரூ. 7 இலட்சம் கொண்ட தட்டுப்பாட்டையும் உள்ளடக்கும்.

நெல்லின் கொள்வனவிற்குச் செய்யப்பட்ட உயர்ந்தசெலுத்துமதிகளினாலும் ஏற்பட்டதாகும். 1973இல் ஒரு லோங் தொன் அரிசியின் சராசரி விலை (இறக்குமதி செய்யப்பட்டதும் உள்நாட்டில் உற்பத்தியானதும்) ரூ. 1227/- ஆக இருந்தது. 1971/72இல் இது ரூ. 903/- ஆக இருந்தது. பங்கீட்டின்கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவு (1973 ஒற்றோபரில் நடைமுறைப்படுத்தப் பட்டது) குறைக்கப்படாது, காசுக்கு வழங்கப்படும் அரிசியின் விலையும் அதி கரிக்கப்படாதிருந்திருப்பின்[1] 1973ஆம் ஆண்டின் மொத்த உணவு உதவுதொகை அதற்கு முந்திய நிதியாண்டினைவிடக் கணிசமான அளவு கூடிய தொன்றாக அமைந்திருக்கும். உணவு உதவுதொகைகள் மீதான உயர்ந்த விலைகளின் தாக் கத்தின் அளவினை 1971/72 விகிதசம எண்தொகைகளைவிட 1973இல் பங்கீட் டுத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அரிசியின் மொத்த அளவு 141,000 தொன் அல்லது 17.3 சதவீதம் குறைவாக இருந்தது என்பதிலிருந்து அளவிட முடி கின்றது, இன்னும் பங்கீட்டுத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அரிசிகளின் மொத்தச் செலவு ரூ. 900 இலட்சத்தினால் அல்லது 12.3 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

1971/72இன் மாவின் விற்பனை மட்டத்தைக் காட்டியதுடன் 1973இன் நட்டமானது 1971/72 ஐவிட ரூ. 1110 இலட்சம் அல்லது 5 மடங்கு அதிக மானதாகவிருந்தது. விற்பனை விலை இருத்தல் ஒன்று 33 சதத்திலிருந்து 70 சதமாக மூன்று தடவைகளில் அதிகரிக்கப்பட்டபோதும், மாவின் இறக்கு மதிச் செலவு ஒரு தொன்னுக்கு ரூ. 732 இலிருந்து ரூ. 1368 ஆக அதிகரித் தமை உதவுதொகையை 1971/72ஆம் ஆண்டினதைவிட ரூ. 890 இலட்சத் தினால் அதிகரிக்கச்செய்தது

1973இல் மிளகாய் இறக்குமதிகள் முற்றாக நிறுத்தப்பட்டதையடுத்து உள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாய் மீதான உதவுதொகை இல்லாமற் செய்யப்பட்டது. அதேவேளை பருப்பு, குழந்தைகளின் பாலுணவு என்பவற்றின் விற்பனையில் ஏற்பட்ட நட்டங்கள் முறையே ரூ 220 இலட்சத்திற்கும் ரூ. 40 இலட்சத்திற்கும் அதிகரித்தன.

*1974 நிதியாண்டு (தற்காலிகம்)*

உலகெங்கும் நிலவும் உணவு விலைகளின் அதிகரிப்பையும் போக்குவரத்துச் செலவையும் சமாளிப்பதற்காக அரசாங்கம் 1973 ஒற்றோபரிலும் 1974 இலும்[2] பெருந்தொகையான வழிமுறைகளைப் புகுத்துவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்ட போதும் 1974 இன் மொத்த உணவு உதவு தொகை ரூ. 2240 இலட்சத்தி னால் (அல்லது 33 சதவீதம்) ரூ. 9250 இலட்சத்திற்கு உயர்வடைந்தது. இவ் வதிகரிப்பு மாவின் மீதான உதவுதொகையில் ஏற்பட்ட ரூ. 730 இலட்சத்தி னால் ஓரளவு குறைக்கப்பட்ட ரூ. 2440 இலட்சம் அல்லது 47 சதவீதம் கொண்ட அரிசி மீதான அதிகரித்த உதவுதொகை, ரூ. 50 இலட்சம் கொண்ட

---

1. காசுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை 19-2-1973 இலிருந்து ரூ. 1.00 இலிருந்து ரூ. 1.60 ஆக அதிகரிக்கப்பட்டது தொடர்ந்து 12-3-73 இலிருந்து ரூ. 1.40 ஆகக் குறைக்கப்கட்டது. எனினும் 1-10-1973 இலிருந்து இவ்விலை மீண்டும் ரூ. 2.00 ஆகக் கூட்டப்பட்டது. இத்திகதியிலிருந்து பங்கீட்டின்கீழ் வழ்ங்கப்பட்ட அரிசியின் அளவும் ஆள் ஒருவருக்கு 2 படியிலிருந்து ½ படியாகக் குறைச்கப்பட்டது. இது வருமான வரி செலுத்தாதோருக்கு இலவசமாகவும் செலுத்துவோருச்கு மேற்குறிப்பிட்ட விலையிலும் வழங்கப்பட்டது.

2. 1974 இல் எடுக்கப்பட்ட வழிமுறைகளின் விபரம் ''ஏனைய நிதி வழிமுறைகள்'' என்ற பகுதியில் தரப்பட்டுள்ளது.

விநியோகச் செலவுகள், பருப்பு மீதான ரூ. 50 இலட்சம், முதல் தடவையாகச் சீனியில் ஏற்பட்ட ரூ. 430 இலட்சம் கொண்ட நட்டம் ஆகியவற்றின் விளைவாக ஏற்பட்டதாகும்.

அரிசி வழங்கல் 120, 700 தொன்களினால் வீழ்ச்சியடைந்தபோதும் விற்பனவு விலை அதிகரிக்கப்பட்ட நிலையிலும் கூட,[1] அரிசி மீதான உதவுதொகை கணிசமான அளவு அதிகரித்தது. 1974 இல் அரிசி மீதான உதவுதொகை ரூ. 7650 இலட்சமாக அமைந்தது. இறக்குமதி செய்யப்பட்ட ஒரு லோங் தொன் அரிசியின் இறக்கற்செலவு ரூ. 1015 இலிருந்து ரூ. 2639 ஆக இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்தமையும், நெல்லின் உத்தரவாத விலை ஒரு புசலுக்கு ரூ. 33 ஆக அதிகரித்தமையும் (32 சதவீதத்தால்) உதவுதொகையில் ஏற்பட்ட இவ்வதிகரிப்பிற்குக்[2] காரணமாகும். உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதும் இறக்குமதி செய்யப்பட்டதுமான அரிசிக்குச் செலுத்தப்பட்ட சராசரி விலை ஒரு லோங் தொன்னுக்கு ரூ. 1227 இலிருந்து ரூ. 2335 ஆக அதிகரித்தது.

கடந்த சில ஆண்டுகளில் குறைந்த இலாபத்தை அளித்துவந்த சீனி விற்பனவு முதற் தடவையாக ரூ 430 இலட்சம் கொண்ட நட்டத்தை ஏற்படுத்தியது. இவ்வுதவுதொகைக்கான முக்கிய காரணம் சீனியின் இறக்கற் செலவு ஒரு லோங் தொன்னுக்கு ரூ. 3093 இலிருந்து ரூ. 5486 ஆக மிகப் பெருமளவிற்கு அதிகரித்தமையே காரணமாகும். மறுபுறம் சீனி ஒரு இருத்தல் 72 சதப்படி தொடர்ந்தும் மிகப் பெருமளவான உதவுதொகையில் பங்கீட்டுக் குட்படுத்தப்பட்டது. பங்கீட்டின் கீழான சீனி ஒரு ஆளுக்கு 1 இருத்தலில் இருந்து ¾ இருத்தலாகக் குறைக்கப்பட்டு, பங்கீட்டில் அடங்காத சீனியின் விற்பனவுகள் (சில குறிப்பிட்ட வகையான நிறுவனங்கள் நீங்கலாக) முற்றாக நிறுத்தப்பட்டன. இதன்விளைவாக சீனியின் வழங்கலை முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் இதில் குறிப்பிடத்தக்க அளவான 94,700 தொன்கள் குறைவு ஏற்பட்டது. பங்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட சீனியின் அளவு குறைக்கப்படாதிருந்திருப்பின்[3] சீனி விற்பனையில் ஏற்பட்ட நட்டம் மிக உயர்ந்ததாக இருந்திருக்கும்.

மாவின் இறக்கற் செலவு ஒரு தொன்னுக்கு ரூ. 1368 இலிருந்து ரூ. 2124 ஆக அதிகரித்தபோதும், பங்கீட்டுத்திட்டத்தின் மூலமும் விற்பனவு விலை (57 சதவீதத்தால்) அதிகரிக்கப்பட்டதன் மூலமும்[4] மா வழங்கல் 42,500 தொன்களால் கணிசமான அளவு குறைக்கப்பட்டது (57 சதவீதத்தால்). இதன்விளைவாக மாவின் மீதான உதவுதொகை 1973 இன் ரூ. 1110 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ 380 இலட்சமாக மட்டும் அமைந்திருந்தது.

---

1. காசுக்கு வழங்கப்படும் அரிசியின் விலை 1974 எப்பிறல் 15 தொடக்கம் ரூ. 2 இலிருந்து ரூ 2.30 ஆகவும் 1974 யூலை 15 தொடக்கம் ரூ. 2.50 ஆகவும் உயர்த்தப்பட்டு 1974 ஓகத்து 5 இலிருந்து ரூ. 2 20 ஆகக் குறைக்கப்பட்டது. 1974 இல் பங்கீட்டுத்திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவுபற்றிய விபரங்களை "ஏனைய நிதி வழிமுறைகள்" என்ற பகுதியில் பார்க்கவும்.

2. ஒரு புசல் அரிசியின் உத்தரவாத விலை 1974 மாச்சு 31 தொடக்கம் ரூ. 25 இலிருந்து ரூ. 30 ஆக அதிகரிக்கப்பட்டு 1974 யூலை 15 இல் இது ரூ. 33 ஆக அதிகரிக்கப்பட்டது.

3. 1974 இல் சீனியின் அளவிலும் விலையிலும் ஏற்பட்ட மாற்றங்களின் விபரங்களுக்கு "ஏனைய நிதி வழிமுறைகள்" என்ற பகுதியைப் பார்க்கவும்.

4. ஒரு இருத்தலின் விலை 70 சதத்திலிருந்து 10 ஆக உயர்த்தப்பட்டது.

*1975 ஆம் நிதியாண்டு மதிப்பீடுகள்)*

1975 ஆம் ஆண்டுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் முந்திய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூ. 1670 இலட்சத்தால் அல்லது மொத்த உதவுதொகையில் 18 சதவீதத்தால் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது. மா விற்பனை மீதான நட்டம் முற்றாக நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக ரூ. 180 இலட்சம் கொண்ட இலாபம் பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது அரிசி மீதான உதவுதொகை ரூ. 1390 இலட்சத்தினுல் அதிகரிக்குமெனவும் அதே வேளை சீனி விற்பனையில் ஏற்படும் நட்டம் ரூ. 420 இலட்சத்தினுல் அதிகரிக்குமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது. விநியோகச் செலவுகள் ரூ. 510 இலட்சத்தினுல் அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**உணவுப்பொருட்களின் விற்பனையிலிருந்து பெற்ற இலாபங்கள் :-**

பல ஆண்டில் முதல் தடவையாக 1974 இல் உணவுப் பொருட்களின் விற்பனையிலிருந்து இலாபம் கிடைக்காமையால் ஆய்வுக்குரிய ஆண்டு தனித்தன்மையுடையதாக விளங்குகின்றது. தொடர்பாக இலாபம் பெறப்பட்டு வந்த ஒரே விற்பனவு விடயம் சீனியாகும். இதிலும் 1974 இல் ரூ. 430 இலட்சம் நட்டம் ஏற்பட்டது மொத்த உணவு உதவு தொகைச் செலவின் ஒரு பகுதியை சீனி மா என்பவற்றைக் கட்டுப்பாடின்றி விற்பதன் மூலம் பெறப்படும் இலாபத்தினுல் எதிரீடு செய்வது அரசாங்கத்தின் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கையாக இருந்தது. சீனியும் மாவும் இன்றியமையாத இறக்குமதிப் பொருட்களாகவும் அவற்றின் விலை கணிசமான அளவு அதிகரித்தும் உள்ளதால் அவற்றின் விநியோகத்தைக் கட்டுப்படுத்துவதை வலியுறுத்துவதற்காக இவற்றின் விற்பனை கட்டுப்படுத்தப்பட்டது இவ்வாறாக நட்டத்தினைக் குறைப்பதற்காகப் பங்கீட்டுமுறை பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டது. மாறுகின்ற நிர்ணயிக்கப்பட்ட விலைகளில் இப்பொருட்களை விற்பதால் பெறப்பட்ட இலாபங்கள், இவ்விடயங்களை இறக்குமதி செய்வதற்கான செலவினை ஈடுசெய்யாது என்பது தெளிவாயிற்று. மேலும் வாழ்க்கைச் செலவின் உயர்ச்சி இத்தகையதொரு நடவடிக்கைக்குத் தூண்டுதலாக இருந்திராது

*1973ஆம் ஆண்டு நிதியாண்டு:*

1973ஆம் ஆண்டு சீனி விற்பனை மாத்திரம் ரூ. 220 இலட்சம் இலாபத்தினைக் காட்டி முன்னைய ஆண்டு இலாபத்திலும், ரூ. 250 இலட்சம் (விகிதப்படி) குறைவாக இருந்தது. கடந்த சில வருடங்களாக சீனி விற்பனையிலான இலாபங்கள் வீழ்ச்சிப்போக்கினைக் காட்டுகின்றன. இது பெருமளவுக்கு சீனிக்கான அதிகரித்த இறக்கச் செலவினுலே ஏற்பட்டது. 1973ஆம் ஆண்டில் சீனி இறக்கற் செலவானது ஒரு லோங் தொன் ரூ 1087 ஆல் ரூ. 3093இற்கு ஏறக்குறைய 3 மடங்காக அதிகரித்தது. சீனியில் ஏற்பட்ட இவ்வதிகரித்த செலவானது, பங்கீட்டில்லாத சீனி விற்பனவு விலையில் ஏற்பட்ட அதிகரிப்பினையும்[1]

---

2. பங்கீட்டில்லாத வெள்ளைச் சீனியின் விலையானது இறாத்தலொன்றுக்கு 1973ம் ஆண்டு சனவரி 1ம் திகதி தொட்டு ரூ. 2 இலிருந்து ரூ. 1.50 ஆகக் குறைக்கப்பட்டது பின்பு 1973ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி தொட்டு இறாத்தலொன்றுக்கு ரூ. 1.75 ஆகக் கூட்டப்பட்டது. 1973ம் ஆண்டு ஒற்றோபர் 1ம் திகதி தொட்டு இறாத்தலொன்றுக்கு . 2.10 ஆகக் கூட்டப்பட்டது. பங்கீட்டில்லாத பழுப்புச் சீனியின் விலையானது இறாத்தலொன்றுக்கு 1973ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி தொட்டு ரூ. 1.65 ஆகக் கூட்டப்பட்டது. பின்பு 1973ம் ஆண்டு ஒற்றோபர் 1ம் திகதி தொட்டு இறாத்தலுக்கு ரூ. 2 ஆகியது.

பங்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட சீனியின் அளவினையும் குறைத்தமையும் ஆகிய இரு கூட்டுத்தாக்கத்தினையும் அதற்கு மேலால் பாதகமாக எதிரீடு செய்தது. 1973ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் தொட்டு பங்கீட்டின் கீழான சீனியின் அளவானது ஒரு ஆளுக்கு ஒரு இருத்தலாகவும், 1973 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதந்தொட்டு ஒரு ஆளுக்கு $\frac{3}{4}$ இருத்தலாகவும் நிர்ணயிக்கப்பட்டது. அதே நேரத்தில் பங்கீட்டின் கீழான சீனி விலை இருத்தலொன்றுக்கு 72 சதமாகத் தொடர்ந்து மாருதிருந்தது. பங்கீட்டில்லாத சீனி விற்பனை குறைந்தமையும், வெ. செ. உ. சா. செலவு 65 சதவீதமாக அதிகரிக்கப்பட்டமையும் இலாபம் குறைவதற்குக் காரணமாயிற்று.

*நிதியாண்டு 1974 (தற்காலிகமானவை):*

1974ம் ஆண்டில் எல்லா உணவுப் பொருட்களின் விற்பனைகளும் நட்டத்தினைக் காட்டின. கடந்த சில வருடங்களாகக் குறைவுற்றுச் சென்ற சீனி விற்பனையிலான இலாபமானது, சராசரி இறக்கற் செலவானது ரூ. 3039 இலிருந்து ரூ. 5458 ஆக அதிகரித்தமையினல் ரூ. 430 இலட்சம் நட்டத்தினைக் காட்டியது. முன்னைய ஆண்டுகளில் கணிசமானளவு இலாபத்தினைக் கொண்டுவந்த பங்கீட்டில்லாத சீனி விற்பனையினை இல்லாமல் செய்தமையும், சீனி விற்பனையிலான இலாபத்தில் தாக்கத்தினை ஏற்படுத்தியது.

*நிதியாண்டு 1975 (மதிப்பீடுகள்):*

1975ம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி உணவுப் பொருட்கள் விற்பனையில் இருந்து கிடைக்கக்கூடிய இலாபமானது ரூ. 180 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்விலாபமானதும் விற்பனவிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இது 1974ம் ஆண்டில் ரூ. 380 இலட்சம் நட்டத்தினை அடைந்தது. பங்கீட்டின் கீழான மா விநியோகம் அதிகரித்தமையாலும், இருத்தலொன்றுக்கான விலை 1974ம் ஆண்டு ஆவணி தொட்டு ரூ. 1.10ஆக அதிகரித்தமையாலும் 1974ம் ஆண்டில் ஏற்பட்ட நட்டத்திற்கு மாருக, 1975ம் ஆண்டில் சிறிய இலாபத்தினை ஏற்படுத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

*தேறிய உணவு உதவுதொகை:*

1974ம் ஆண்டிற்கான ரூ 9250 இலட்சம் கொண்ட தேறிய உணவு உதவுதொகை முந்திய நிதியாண்டிலும் பார்க்க ரூ. 2460 இலட்சத்தால் அல்லது 36 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. இது முந்திய ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பான ரூ. 1540 இலட்சத்திலும், ரூ. 920 இலட்சம் மேலதிகரித்துக் காணப்பட்டது 1975ம் ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் ரூ. 10,750 இலட்சம் கொண்ட தேறிய உணவு உதவுதொகைக்கு இடமளித்து 1974ம் ஆண்டிலும் பார்க்க ரூ 1500 இலட்சத்தால் அல்லது 16 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்படுகின்றன. இவவதிகரிப்பானது அரிசி, சீனி பங்கீட்டுச் செலவுகள் என்பவற்றிலான உதவுதொகை முறையே ரூ. 1390 இலட்சத்தாலும், ரூ. 420 இலட்சத்தாலும், ரூ. 510 இலட்சத்தினலும் அதிகரித்தமையால் ஏற்பட்டது மேலும் பருப்பு, மா என்பனவற்றில் ஏற்பட்ட நட்டத்தினை இல்லாமற் செய்து இவ்விடயங்களின் விற்பனவிலிருந்து ரூ 180 இலட்சம்கொண்ட இலாபம் எதிர்பார்க்கப்பட்டமையால் இது ஓரளவு எதிரீடு செய்யப்பட்டது.

நிருவகிக்கத்தக்க அளவுகளில் உணவு உதவு தொகையை வைத்திருக்கக் குறிப்பாக அரிசிக் கொள்வனவின் விலைகள் அதிகரிப்பதற்கு வழிவகுக்கும் முறையில் மிக உயர்ந்து செல்லும் இறக்குமதி விலைகள் நிலவிய சூழ்நிலையில் அரசாங்கம் எடுத்த முயற்சியை இது எடுத்துக்காட்டுகின்றது. 1970/71 ஆம் ஆண்டு தொட்டு சாதித்ததென்னவெனில் (கீழேயுள்ள அட்டவணை காட்டுவது போல) பங்கீட்டு முறை மூலம் உண்மையான நுகர்வினைக் குறைத்தமையேயாகும். தலையாளுக்கான பங்கீடு 1970/71 ஆண்டுடன் ஒப்பிடுமிடத்து, அரிசியும் சீனியும் முறையே 43 சதவீதத்தாலும் 65 சதவீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது. மாவின் பங்கீடு 8 சதவீதத்தால் தலையாளுக்கு அதிகரித்துள்ளது. இதன் விளைவாக, உணவு உதவு தொகையின் பண விலையானது 14 சதவீதத்தால் அதிகரித்தபோதிலும், மொத்த நடைமுறைச் செலவில் உணவு உதவுதொகை 20 சதவீதமாக இக்காலப்பகுதியில் இருந்தது.

அட்டவணை II (எ) 11

அரிசி, மா, சீனிப் பங்கீடு

| | 1970/71 (தொன்கள்) | தலையாளுக்கான (இருத்தல்) | 1974 (தொன்கள்) | தலையாளுக்கான (இருத்தல்கள்) | |
|---|---|---|---|---|---|
| அரிசி ... | 920,193 | 161.4 | 552,539 | 92.4 | — 43% |
| மா ... | 370,436 | 65.0 | 419,392 | 70.1 | + 8% |
| சீனி ... | 278,845 | 48.9 | 102,702 | 17.2 | — 65% |

6. அமைச்சுக்களின் குறைச் செலவு :

அட்டவணை II (எ) 12இல் துணைமதிப்பீடுகளும் மூலதனவாக்குகளின் கீழான செலவினம் பற்றிய தொடர்பான உண்மையான செலவுகளும் உள்ளடங்கிய மொத்த ஒதுக்குகள் அரசாங்கக் கணக்குகளில் உள்ளவாறு 1971/72இலிருந்து 1974 வரையான மூன்று நிதியாண்டுகளுக்கு அமைச்சுக்களின் பாகுபாட்டின்படி தரப்பட்டுள்ளன. 1971/72 ஆம் ஆண்டிற்கான தரவுகள் ஒப்பு நோக்கலுக்காக 12 மாத விகித சம அடிப்படையில் தரப்பட்டுள்ளன.

## அட்டவணை II (எ) 12

## அமைச்சுகளின் மூலதனச் செலவீடு 1971/72 — 1974(அ)

பத்து இலட்சம் ரூபாய்கள்

| அமைச்சு | 1971 / 72 15 மாதங்கள் மொத்த ஒதுக்கீடு | 1971 / 72 15 மாதங்கள் உண்மையான செலவீடு | 1971 / 72 15 மாதங்கள் குறைச் செலவு | 1971 / 72 12 மாதங்கள் மொத்த ஒதுக்கீடு | 1971 / 72 12 மாதங்கள் உண்மையான செலவீடு | 1971 / 72 12 மாதங்கள் குறைச் செலவு | 1973 மொத்த ஒதுக்கீடு* | 1973 உண்மையான செலவீடு | 1973 குறைச் செலவு | 1974 மொத்த ஒதுக்கீடு | 1974 உண்மையான செலவீடு | 1974 குறைச் செலவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. மகாதேசாதிபதி தலைமை அமைச்சர் உயர்நீதி மன்றங்கள், அமைச்சருக்குக் கீழ்ப்படாதவை | 0.1 | 0.1 | — | 0.1 | 0.1 | — | ... | ... | — | 0.1 | ... | 0.1 |
| 2. பாதுகாப்பு, வெளிநாட்டு அலுவல்கள ... | 58.6 | 51.6 | 7.0 | 46.9 | 41.3 | 5.6 | 23.3 | 16.5 | 6.8 | 42.6 | 34.4 | 8.2 |
| 3. திட்ட வேலைவாய்ப்பு அலுவல்கள் ... | 94.8 | 32.5 | 62.3 | 75.8 | 26.0 | 49.8 | 44.4 | 39.2 | 5.2 | 187.7 | 177.6 | 10.1 |
| 4. திட்ட நடைமுறைப்படுத்தல் ... | — | — | — | — | — | — | 0.1 | ... | ... | ... | — | — |
| 5. நீர்பாசன மின்சார நெடுஞ்சாலைகள் ... | 422.6 | 310.9 | 111.7 | 338.1 | 248.7 | 89.4 | 420.5 | 325.4 | 95.1 | 420.3 | 310.4 | 109.9 |
| 6. வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகம் ... | 13.4 | 4.0 | 9.4 | 10.7 | 3.2 | 7.5 | 14.7 | 6.8 | 7.9 | 11.7 | 6.2 | 5.5 |
| 7. கல்வி ... ... ... | 57.6 | 43.4 | 14.2 | 46.1 | 34.7 | 11.4 | 40.6 | 28.7 | 11.9 | 33.5 | 20.8 | 12.6 |
| 8. கப்பல் சுற்றுலா ... ... ... | 53.5 | 40.3 | 13.2 | 42.8 | 32.2 | 10.6 | 42.1 | 40.4 | 1.7 | 51.1 | 33.8 | 17.4 |
| 9. தொழில் ... ... ... | 3.2 | 2.6 | 0.6 | 2.6 | 2.1 | 0.5 | 0.7 | 0.3 | 0.4 | 1.1 | 0.5 | 0.5 |
| 10. பொது நிருவாக உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் ... ... | 30.3 | 28.7 | 1.6 | 24.2 | 23.0 | 1.2 | 29.4 | 25.3 | 4.1 | 31.1 | 13.4 | 17.7 |
| 11. கைத்தொழில், விஞ்ஞான அலுவல்கள் ... | 130.9 | 98.0 | 32.9 | 104.7 | 78.4 | 26.3 | 142.6 | 129.7 | 12.9 | 139.5 | 73.0 | 66.5 |
| 12. நிதி ... ... ... | 80.3 | 66.4 | 13.9 | 64.2 | 53.1 | 11.1 | 127.4 | 117.2 | 10.2 | 132.7 | 131.4 | 1.3 |
| 13. போக்குவரத்து ... ... .. | 77.3 | 36.3 | 41.0 | 61.8 | 29.0 | 32.8 | 71.8 | 53.9 | 17.9 | 90.9 | 52.8 | 38.1 |
| 14. தோட்டத் தொழில் ... | 76.9 | 54.9 | 22.0 | 61.5 | 43.9 | 17.6 | 85.7 | 58.2 | 27.5 | 189.9 | 174.4 | 15.6 |
| 15. நீதி ... ... ... | 0.8 | 0.8 | — | 0.7 | 0.7 | — | 0.6 | 0.5 | 0.1 | 0.9 | 0.7 | 0.2 |
| 16. விவசாயம் காணி .. .. | 221.3 | 162.5 | 58.8 | 177.0 | 130.0 | 47.0 | 179.8 | 155.6 | 24.2 | 119.2 | 97.3 | 21.9 |
| 17. கடற்றொழில் ... .. .. | 34.1 | 28.3 | 5.8 | 27.3 | 22.6 | 4.7 | 19.1 | 11.1 | 8.0 | 42.8 | 20.6 | 22.2 |
| 18. வீடமைப்பு நிர்மாணம் ... | 93.4 | 81.3 | 12.1 | 74.7 | 65.0 | 9.7 | 76.4 | 59.6 | 16.8 | 96.8 | 90.4 | 6.3 |
| 19. அஞ்சல், தந்தித் தொடர்புகள் .. | 43.3 | 25.8 | 17.5 | 34.6 | 20.6 | 14.0 | 37.5 | 28.8 | 8.7 | 61.8 | 29.8 | 32.0 |
| 20. நலத்துறை .. .. .. | 10.9 | 6.4 | 4.5 | 8.7 | 5.1 | 3.6 | 12.8 | 5.1 | 7.7 | 16.9 | 5.5 | 11.4 |
| 21. தகவல் ஒலிபரப்பு ... ... | 12.7 | 11.1 | 1.6 | 10.2 | 8.9 | 1.3 | 8.5 | 3.9 | 4.6 | 17.4 | 2.0 | 15.5 |
| 22. சமூக சேவைகள் ... ... .. | 0.2 | 0.1 | 0.1 | 0.2 | 0.1 | 0.1 | 0.1 | 0.4 | – 0.3 | 0.2 | 0.1 | 0.1 |
| 23. கலாச்சார அலுவல்கள் .. ... | 4.2 | 2.3 | 1.9 | 3.4 | 1.8 | 1.6 | 2.5 | 2.5 | — | 1.2 | 1.2 | — |
| 24. நாடாளுமன்ற அலுவல்கள் விளையாட்டு ... | 12.9 | 8.2 | 4.7 | 10.3 | 6.6 | 3.7 | 2.6 | 0.8 | 1.8 | 0.8 | 0.7 | 0.1 |
| 25. அரசியற்றிட்ட அலுவல்கள் .. ... | — | — | — | — | — | — | — | — | — | — | — | — |
| மொத்தம் ... | 1,533.2 | 1,096.4 | 436.8 | 1,226.6 | 877.1 | 349.5 | 1,383.3 | 1,109.9 | 273.4 | 1,690.1 | 1,277.0 | 413.3 |

* விகித சம அடிப்படையில்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) "மொத்த ஒதுக்கீடுகளின்" எண்தொகைகள் துணை மதிப்பீடுகளை உள்ளடக்கியிருக்கையில் "உண்மையான செலவின்" எண்தொகைகள் வாக்குப்பணங்களிற் சேர்ப்பதற்காக இருக்கும் வெளிநாட்டுக் கடன் செலவுகளை உள்ளடக்கியிருக்கின்றன. இவ்வெண்தொகைகள் கடன்கரைப்பு நிதியத்திற்கான உதவு தொகைகள் பொதுப்படு கடனின் நேரடி மீளக் கொடுப்பனவுகள், அனைத்துலக நிறுவனங்களுக்கான சிறப்புக் கொடுப்பனவுகள் என்பனவற்றையும் நீக்கியதாகும். "குறைச்செலவு" பத்தியிலுள்ள சய அடையாளம் மொத்த ஒதுக்கீடுகளிலும் பார்க்க உண்மையான செலவின் அதிகரிப்பினைக் காட்டுகின்றது.

1974ஆம் நிதியாண்டில் மூலதனச் செலவிற்கான மொத்த ஒதுக்குகள் ரூ. 16,900 இலட்சமாகவும் (துணை ஒதுக்குகள் உள்ளடங்க) ஆனல், உண்மையான செலவு ரூ. 12,770 இலட்சமாகவும் விளங்கின. இதன் விளைவாக ஏற்பட்ட குறைச் செலவானது 1974ஆம் ஆண்டில் ரூ. 4,130 இலட்சமாக அல்லது 24.5 சதவீதமாக இருக்கையில், 1973ஆம் ஆண்டில் ரூ. 2730 இலட்சமாக அல்லது 19.8 சதவீதமாக இருந்தது. 1974ஆம் ஆண்டில் குறைச்செலவானது 5 சத வீதத்தால் உயர்ந்திருந்தபோதிலும், இவ்வருடத்திற்கான வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டது போலக் காணப்பட்டது. கீழேயுள்ள அட்டவணை II (எ) 13 இன்படி காலப்போக்கில் மூலதனவாக்குகளைப் பொறுத்தளவில் குறைச்செலவு ஏற்பாடானது படிப்படியாக அதிகரித்ததுடன், தற்போது 25 சதவீதமாக அல்லது மூலதனச் செலவில் நாலில் ஒன்ருக ($\frac{1}{4}$) விளங்குகின்றது. மேலும் உண்மையான குறைச்செலவு கடந்த காலங்களில் கிட்டத்தட்ட மூல மதிப்பீடுகளை ஒத்துக் காணப்படுகிறது. திட்டமிட்ட செலவின் சரியான மதிப்பீடு இத்தகைய தொடர்ந்து வரும் பிரச்சினையை இல்லாமற் செய்யக் கூடும். இதனுல்தான் தொடர்துவரும் குறைச்செலவுகள் அண்மைக் காலத்தில் வரவுசெலவுத்திட்ட எண்தொகைகள் உண்மை நிலையற்றதாகக் காட்டுகின்றன. வெவ்வேறு அமைச்சுக்களின் குறைச்செலவின் பரந்த அடிப்படையிலான பகுப்பாய்வின்படி, உயர்ந்தளவு தொடர்பு அமைச்சுக்களினது குறைச்செலவுக்கும், இவ்வாண்டில் வெளிநாட்டுச் செலாவணி செலவீட்டிற்கான கிடைப்பனவிற்கும் உள்ளது

## அட்டவணை II (எ) 13

### மூலதனச் செலவு — குறைச் செலவின் அளவு

ப. இ. ரு.

| | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் | எதிர்பார்க்கப்பட்ட குறைச் செலவு | வீதம் | மொத்த ஒதுக்கு* துணை மதிப்பீடுகள் | உண்மையான செலவு | உண்மையான குறைச் செலவு | வீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1969/70 . | 930.0 | 140.0 | 15% | 964.2 | 812.0 | 152.2 | 15 8% |
| 1970,71 ... | 1,140.0 | 169.0 | 15% | 1,264.8 | 809.8 | 455.0 | 36.0% |
| 1971/72 ... | 1,482.0 | 296.0 | 20% | 1,533.2 | 1,096.4 | 436.8 | 28.5% |
| 1973 ... | 1,285.0 | 257.0 | 20% | 1,383.3 | 1,109.9 | 273.4 | 19.8% |
| 1974 ... | 1,438.0 | 359.5 | 25% | 1,690.1 | 1,277.0 | 413.3 | 24.5% |
| 1975 ... | 1,987.0 | 497.0 | 25% | — | — | — | — |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* கடன்கரைப்பு நிதிய உதவு தொகைகள், மீளக் கொடுப்பனவுகள் என்பன நீங்கலான மூலதனச் செலவு.

1974ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்ப்பதற்கு மேலாக மூலதனத்திட்டங்களில் ஏற்பட்ட குறைச்செலவு ஒவ்வொரு அமைச்சுக்களிலும் காணப்பட்டது. அதாவது, நீர்ப்பாசனம், சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சில் ரூ. 1100 இலட்சம் அல்லது 26 சதவீதமாகவும், வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தகம் ரூ. 60 இலட்சம் அல்லது 47 சதவீதமாகவும், கல்வி ரூ. 130

இலட்சம் அல்லது 38 சதவீதமாகவும், கப்பல் போக்குவரத்து, உல்லாசப் பயணம் ரூ. 170 இலட்சம் அல்லது 34 சதவீதமாகவும், பொதுநிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு அலுவல்கள் ரூ. 180 இலட்சம் அல்லது 57 சதவீதமாகவும், கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் ரூ. 660 இலட்சம் அல்லது 48 சதவீதமாகவும், போக்குவரத்து ரூ. 380 இலட்சமாக அல்லது 42 சதவீதமாகவும், மீன்பிடி ரூ. 220 இலட்சம் அல்லது 52 சதவீதமாகவும், அஞ்சல் தொலைபேசித் தொடர்பு ரூ. 320 இலட்சம் அல்லது 52 சதவீதமாகவும், நலத்துறை ரூ. 110 இலட்சம் அல்லது 68 சதவீதமாகவும், தகவல் ஒலிபரப்பு ரூ. 160 இலட்சம் அல்லது 89 சதவீதமாகவும் விளங்கின. தொழில், சமூக சேவைகள் அமைச்சினது குறைச்செலவுகள் உயர்ந்த சதவீதத்தைக் கொண்டிருந்த போதிலும், உண்மைத் தொகையளவில் சிறியதாகும். நீர்ப்பாசனம், சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சின் மொத்த ஒதுக்குகள் ரூ. 4200 இலட்சமாக விளங்கிய போதிலும், ரூ. 3100 இலட்சம் மட்டுமே செலவழிக்கப்பட்டது. இலங்கை மின்சாரச் சபை, ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திச்சபை என்பவற்றிற்கு வழங்கிய மொத்த மூலதன உதவுதொகை ரூ. 740 இலட்சமாக விளங்கியமையினால்தான் அமைச்சின் செலவுத் திட்டங்களில் ரூ 1100 இலட்சம் கொண்ட குறைச்செலவு ஏற்பட்டது. மேலும் குறைச்செலவானது கட்டடவாக்கம், பாலங்கள், தெருக்கள் போன்றவை அமைத்தல் (ரூ. 50 இலட்சம்), கட்டட அமைப்பும் முக்கிய நீர்ப்பாசன வேலைகளை அபிவிருத்தி செய்தலும் (ரூ. 30 இலட்சம்), பெருந்தெருக்கள் திணைக்களத்தினால் தெருக்கள், பாலங்கள் விமானத் தளங்கள் அமைத்தல் (ரூ 140 இலட்சம்), நீர் வழங்கல் வடிகால் திணைக்களத்தினால் நீர் வழங்கும் வசதிகள், வடிகால் திட்டங்கள் அமைத்தல் (ரூ. 50 இலட்சம்) என்பவற்றாலும் ஏற்பட்டது. இவ்வமைச்சின்கீழ் ஏற்பட்ட மொத்தச் செலவின் சதவீதமாகக் குறைச்செலவினை நோக்குமிடத்து (ரூ. 1100 இலட்சம் அல்லது 26 சதவீதம்) 1973 ஆம் ஆண்டில் காணப்பட்ட குறைச்செலவான ரூ 950 இலட்சம் அல்லது 23 சதவீதத்திலும் கணிசமானளவு அதிகரிப்பினைக் காட்டுகின்றது. வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சின் குறைச்செலவானது ரூ. 60 இலட்சம் அல்லது 47 சதவீதமாகக் காணப்பட்டது. இதற்கு முக்கிய காரணமாகக் கூட்டுறவு நிர்வாகசேவை நிலையங்கள் சந்தைப்படுத்தல் நிருவாகம், உணவுச் சேமிப்பு நிலையங்கள் என்பன காரணமாக ஏற்பட்ட குறைந்தமட்டச் செலவே காரணமாகும். எவ்வாறாயினும், இவ்வமைச்சினால் ஏற்பட்ட குறைச்செலவானது, முந்திய ஆண்டில் காணப்பட்ட ரூ. 80 இலட்சம் அல்லது 54 சதவீதத்திலும் குறைவாகக் காணப்பட்டது.

கல்வி அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட ரூ. 130 இலட்சம் அல்லது 38 சதவீதம் கொண்ட குறைச் செலவானது பொதுக் கல்வி, ஆசிரியர் கல்வி, தொழில் நுட்பக் கல்வி என்பன தொடர்பான உபகரணங்கள் நிருமானம், கட்டடங்களின் முன்னேற்றம் என்பவற்றில் ஏற்பட்ட குறைந்த மட்டச் செலவு காரணமாக ஏற்பட்டதாகும். 1971/72 இலும், 1973 இலும் இவ்வமைச்சில் ஏற்பட்ட தொடர்பான குறைச் செலவுகள் முறையே ரூ. 110 இலட்சம் (விகித சமம்) அல்லது 25 சதவீதமும் ரூ. 120 இலட்சம் அல்லது 29 சதவீதமுமாக அமைந்திருந்தன.

கப்பல் சுற்றுலா அமைச்சில் 1974 இல் ஏற்பட்ட குறைச் செலவு ரூ. 170 இலட்சம் அல்லது 34 சதவீதமாக அமைந்தது. அட்டவணை 11 (எ) 12 இல் காட்டப்பட்டவாறு உண்மையான செலவு 1973இன் வாக்குகளுக்கு அறவிடப்படவிருந்த வெளிநாட்டுக் கடன் செலவுகளான ரூ. 120 இலட்சத்தை உள்ளடக்காது. இத்தொகை இப்போது 1974ஆம் ஆண்டிற்குக் கணக்கிடப்பட்டுள்ளது. இவ்வுண்மையைக் கணக்கிலெடுப்பின் இவ் அமைச்சில் ஏற்பட்ட

குறைச் செலவு ரூ. 50 இலட்சம் அல்லது 10 சதவீதமாகும். இது 1974இன் வரவு செலவுத்திட்டத்தின் குறைச் செலவுப்படியை விட மிகவும் குறைந்த அளவாகும். இக்குறைச் செலவு உபகரணங்களினதும் பொறிகளினதும் கொள்வனவு, பண்டகசாலை வசதிகளின் நிருமாணம் என்பவற்றின் குறைந்த மட்டச் செலவினால் ஏற்பட்டதாகும்.

பொது நிருவாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ரூ. 180 இலட்சம் அல்லது 57 சதவீதமான குறைச் செலவிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட 1974இன் மதிப்பீடுகளில் ரூ. 180 இலட்சக் கடனிற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருந்தாலும், அரசாங்கத்தால் உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு எக்கடன்களும் வழங்கப்படாமையே காரணமாகும். இவ் அமைச்சின் 1971/72, 1973ஆம் ஆண்டுகளின் குறைச் செலவு முறையே ரூ. 10 இலட்சம் அல்லது 5 சதவீதம், ரூ. 40 இலட்சம் அல்லது 14 சதவீதமாகும்.

கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் கீழான குறைச் செலவு அட்டவணை 11 (எ) 12ல் காட்டப்பட்டவாறு ரூ 660 இலட்சம் அல்லது 48 சதவீதமாகும். அட்டவணையில் காட்டப்பட்டவாறு வெளிநாட்டுக்கடன் செலவுகட்கென 1973இன் வாக்களிப்புகளுக்குச் சேர்த்துக்கொள்ளப்பட விருக்கும் ரூ. 130 இலட்சம் தவிர்க்கப்பட்டுள்ளது ஆனால் இது 1974ம் ஆண்டுக்கு கணக்கிடப்பட்டுள்ளது. இதற்கு வழிமுறை விடுக்க 1974ஆம் ஆண்டில் இவ் அமைச்சின் குறைச் செலவு ரூ. 540 இலட்சம் அல்லது 31 சதவீத மாக அமைகிறது. இதற்கு அரச துறைத் தொழில் முயற்சிகளுக்கான உதவு தொகைகள், தன்கொடைகள் என்பவற்றில் ஏற்பட்ட ரூ. 1240 இலட்சம் கொண்ட ஒதுக்குடன் ஒப்பிடுகையில் ரூ 800 இலட்சம் கொண்ட குறைந்த மட்ட செலவே முதன்மைக் காரணமாக அமைகிறது. மேலும், அறிவியல் கைத்தொழில் ஆராய்ச்சியில் ரூ. 59 இலட்சம் கொண்ட குறைச் செலவும், சிறு கைத்தொழில்கள் அபிவிருத்தி ஊக்கம் என்பவற்றில் ரூ. 30 இலட்சம் கொண்ட குறைச் செலவும் காணப்படுகின்றது. இவ் அமைச்சின் 1971/72ஆம் ஆண்டினதும் (விகித அளவுப்படி) 1973ஆம் ஆண்டினதும் குறைச் செலவுகள் முறையே ரூ. 260 இலட்சம் அல்லது 33 சதவீதமாகவும் ரூ 130 இலட்சம் அல்லது 10 சதவீதமாகவும் அமைகின்றன.

போக்குவரத்து அமைச்சினது ரூ. 380 இலட்சம் அல்லது 42 சதவீதமான குறைச் செலவிற்குப் புகைவண்டிப் பகுதியால் கொள்முதல், செப்பஞ் செய்தல், தண்டவாளப் பாதுகாப்பு, தொடர் வண்டி இயக்கப் பொறிகள் அமைத்தல், என்பவற்றிற்கும் உள்ளூர் வான் போக்குவரத்துத் திணைக்களத்தால், பன்னாட்டு, பிரதேச, உள்நாட்டு வான் போக்குவரத்து வசதிகள் ஏற்பாட்டினை யொட்டி நிலையான பாதை கட்டுவித்தலிற்கும் பணத்தைச் செலவழிக்காமையே காரணமாக அமைகிறது. இவ் அமைச்சின் 1971/72ஆம் ஆண்டினதும் (விகித அளவுப்படி) 1973ஆம் ஆண்டினது குறைச்செலவு முறையே ரூ. 330 இலட்சம் அல்லது 53 சதவீதமாகவும் ரூ. 190 இலட்சம் அல்லது 26 சதவீதமாகவும் அமைகிறது.

அஞ்சல் தொலைபேசித் தொடர்புகள் அமைச்சு 1974இல் ரூ. 320 இலட்சம் அல்லது 52 சதவீதம் கொண்ட குறைச் செலவினைப்பதிவு செய்தது. துணைக் கோள் - நில நிலையத் திட்ட அமைப்பாக்கத்தின் மீது ஏற்பட்ட குறைந்த மட்டச் செலவே (ரூ. 220 இலட்சம்) இதற்கான முதன்மைக் காரணமாகும்.

மேலும் தொலைபேசித் தொடர்புகளின் பொதுவான அபிவிருத்தி, கொழும்புக்கு வெளியான பிரதேச அபிவிருத்தித் திட்டம், கொழும்புப் பிரதேச அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றின் மீது செலவிடப்படாத பணமும் இக்குறை மட்டச் செலவிற்குக் காரணமாகிறது. இவ்வமைச்சின் 1971/72ஆம் ஆண்டின் (விகித சம்பபடி) செலவு முறையே ரூ. 4 இலட்சம் அல்லது 40 சதவீதமாக அமைய 1973ஆம் ஆண்டின் குறைச்செலவு ரூ. 90 இலட்சம் அல்லது 22 சதவீதமாகும்.

1974இல் நலத்துறை அமைச்சில் ஏற்பட்ட குறைச்செலவு ரூ. 160 இலட்சம் அல்லது 89 சதவீதமாகும். இது பெரும்பாலும் நோயாளர் பராமரிப்புச் சேவை, சமூக நல சேவைகள், நோயாளர் பராமரிப்புச் சேவைக்கான நோயாளரைக் கொண்டுசெல்லும் வண்டிகள், மலேரியாத் தடுப்புப் பிரசாரத்திற்கான வாகனங்களும் உபகரணங்களும் என்பவற்றில் ஏற்பட்ட குறைந்த மட்டச் செலவினால் ஏற்பட்டதாகும். இவ் அமைச்சில் 1971/72இல் ஏற்பட்ட (விகிதசம) குறைச்செலவு ரூ. 40 இலட்சம் அல்லது 41 சதவீதமாக இருக்க 1973இல் இது ரூ. 80 இலட்சம் அல்லது 60 சதவீதமாக அமைந்திருந்தது.

ஒலிபரப்புச் செய்திகள் அமைச்சின் ரூ. 160 இலட்சம் அல்லது 89 சதவீதமான குறைச்செலவிற்குப் பெரும்பாலும் அரசின் கூட்டுத்தாபனங்கட்கு (குறிப்பாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு மத்திய அலை விரிவாக்கத் திட்டத்திற்கான) குறைந்த மட்ட அளவு மூலதன உதவுதொகைகளும், நன்கொடைகளும் செய்தித் திணைக்களத்தின் படத்தயாரிப்பிற்கான கருவிகள் கொள்முதல், அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் அச்சுத் தயாரிப்பிற்கான கருவி கொள்முதல் என்பனமீது செலவிடப்படாத பணத் தொகைகளும் பெரும்பாலும் காரணங்களாக அமைகின்றன. 1971/72ஆம் ஆண்டிலும் (விகித அளவுப்படி) 1973ஆம் ஆண்டிலும் குறைச்செலவு முறையே ரூ. 10 இலட்சம் அல்லது 15 சதவீதமாகவும் ரூ. 50 இலட்சம் அல்லது 118 சதவீதமாகவும் அமைகின்றது.

மீன்பிடி அமைச்சு 1974ஆல் ரூ. 220 இலட்சம் அல்லது 52 சதவீதமான குறைச்செலவு ஒன்றினைப் பதிவுசெய்தது. இதற்கு கடற்கரை மீன் பிடிப்பிற்கு கருவி கொள்முதல் செய்வதற்கு செலவு ரூ. 140 இலட்சம், மீன்பிடித் துறைமுகக் கூட்டுத்தாபனத்திற்கு மூலதன உதவுதொகையான ரூ. 50 இலட்சம், அளவீட்டுக்கும் ஆராய்ச்சிக்கும் ரூ. 20 இலட்சம் கொண்ட தொகை என்பன காரணமாகின்றன. இவ்அமைச்சின் 1971/72 ஆம் ஆண்டினதும் (விகிதசம அளவுப்படி) 1972ஆம்ஆண்டினதும் குறைச்செலவு முறையே ரூ. 50 இலட்சம் அல்லது 17 சதவீத மாகவும் ரூ. 80 இலட்சம் அல்லது 42 சதவீதமாகவும் அமைகிறது.

### 7. முற்பணக் கணக்குகள்

1974ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் முற்பணக் கணக்குகளின் தொழிற்பாடுகள் தேறிய கொடுப்பனவுகளான ரூ. 470 இலட்சமாக விளங்குகையில் 1973ஆம் ஆண்டில் தேறிய கொடுப்பனவுகள் ரூ. 480 இலட்சமாக விளங்கியது. தேறிய கொடுப்பனவான ரூ. 470 இலட்சம் அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் அரச ஊழியர்கள் என்பனவற்றிற்கான முற்பணக் கொடுப்பனவுகள் ரூ. 1580 இலட்சம், களஞ்சியங்களுக்கும் பொருட்

களுக்கான முற்பணம் ரூ. *11* இலட்சம், எதிர்பாராத நிதியத்துக்கான முற்பணம் ரூ. *20* இலட்சம் ஆகியவற்றை இலங்கை சீன வர்த்தகக் கணக்கின் கீழ் கிடைக்கப்பெற்ற தேறிய பெறுகைகளான ரூ. *1250* இலட்சத்தால் எதிரீடு செய்யப்பட்டதால் பெறப்பட்டது. அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுக் கணக்குகள்மீது எதிர்பார்க்கப்பட்ட தேறிய கொடுப்பனவுகள் ரூ. *1000* இலட்சமாகும்.

**8. பொதுப்படுகடன்[1]**

*1974* திசெம்பர் இறுதியில் மொத்தப் பொதுப்படுகடன் ரூ. *1,23,800* இலட்சமாக (வழங்குநர் கொடுகடனினால். அரசாங்கத் திணைக்களங்களுக்கு ஏற்பட்ட பொறுப்புக்களையும் சேர்க்குமிடத்து, ரூ. *1,27,460* இலட்சமாக) அமைந்து *1974* ஆம் நிதியாண்டில் ரூ. *10,000* இலட்சம் அல்லது (*9* சதவீதம்) அதிகரிப்பைப் பதிவுசெய்துள்ளது. வெளிநிற்கும் மொத்தப் பொதுப்படுகடனில் *76* சதவீதம் அல்லது *94,060* இலட்சம் உள்நாட்டுக் கடனையும், மிகுதி *26* சதவீதம் அல்லது ரூ. *29,740* இலட்சம் வெளிநாட்டுக் கடன்பாடுகளையும் கொண்டிருந்தது கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலாக (ரூபா, ஸ்ரேலிங் கடன்களைப் பொறுத்தவரை) ப் பொதுப்படுகடனானது ரூ. *7,460* இலட்சத்தால் ரூ. *1,10,270* இலட்சமாக அதிகரித்தது.

ஒவ்வொரு நிதியாண்டின் இறுதிக் காலப் பகுதியில் இருந்த படுகடனின் உள்ளடக்கம், உடைமை பற்றிய விவரங்கள் முறையே பின்னிணைப்பு II இன் அட்டவணைகள் *38, 39* இல் தரப்பட்டுள்ளன. மேலும் இதன் சுருக்கம் அட்டவணை II (எ) *14*இல் தரப்பட்டுள்ளது.

மொத்தப் படுகடனிலும், தேறிய படுகடனிலும் ஏற்பட்ட முறையே, ரூ. *10,000* இலட்சம் கொண்ட அதிகரிப்புக்கள், சென்ற நிதியாண்டில் பதிவு செய்யப்பட்ட முறையே ரூ. *10,610* இலட்சம், ரூ. *8,330* இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்புநோக்குகையில் குறைவாகக் காணப்பட்டன. மொத்தப் பொதுப்படுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ரூ *1790* இலட்சம் (அல்லது *18* சதவீதம்) வெளிநாட்டுக் கடனையும், ரூ. *8,210* இலட்சம் (அல்லது *82* சதவீதம்) உள்நாட்டுக் கடனையும் கொண்டுள்ளது. மொத்தப் பொதுப்படுகடனில் வெளிநாட்டுப் படுகடன் பங்கு தொடர்ச்சியாக அதிகரித்த பின், *1974* ஆம் ஆண்டின்போது உள்நாட்டுப் படுகடன் அதிகரிப்பு வீதம் வெளிநாட்டுப் படுகடன் அதிகரிப்பு வீதத்திலும் பார்க்க அதிகமாகவிருந்தது. இதன் விளைவாக மீளப் பார்வையிடும் காலப்பகுதியில் பொதுப்படுகடனின் வெளிநாட்டுப் பங்கில் சிறு வீழ்ச்சிஏற்பட்டது.

*1974* இன் வெளிநாட்டுக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்பு, ரூ. *1,780* இலட்சமாக இருக்கையில், *1973* ஆம் நிதியாண்டில் இவ்வதிகரிப்பு ரூ. *4,030* இலட்சமாக விளங்கியது. இவ்வதிகரிப்பு, உலக நாணயங்களின் ஒப்புமை விகித மாற்றங்களினால் பொறுப்புக்களில் ஏற்பட்ட ரூ *390* இலட்சம் கொண்ட வீழ்ச்சிக்கு

1. இங்கு 'பொதுப்படுகடன்' என்னும் பதம் இலங்கை அரசாங்கத்தின் உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன்பாடுகளை மட்டுமே குறிக்கின்றது. எனவே, அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் போன்ற அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களின் கடன்பாடுகளைத் தவிர்த்துள்ளது. மேலும், வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் கீழ் அரசாங்கத் திணைக்களங்களினாற் செய்யப்பட்ட இறக்குமதிகள் காரணமாக 1974, திசெம்பர் 31 இல் காணப்பட்ட ரூ. 3,660 இலட்சம் கொண்ட கடனும் இதனுள் உள்ளடக்கப்படவில்லை.

## அட்டவணை II (எ) 14

### மொத்தப் பொதுப்படுகடன் 1968/69 — 1974(அ)
(நிதியாண்டுகள்)

| நிதியாண்டு முடிவில் உள்ளபடி | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | | 1973 | | 1974 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % | தொகை ம. இ. ரூ. | % | தொகை ப. இ. ரூ. | % |
| 1. **மொத்தப் படுகடன்** ... | 6,888.5 | 100.0 | 7,873.2 | 100.0 | 8,782.8 | 100.0 | 10,318.7 | 100.0 | 11,379.9 | 100.0 | 12,380.1 | 100.0 |
| 1.1 வெளிநாடு ... | 1,375.5 | 20.0 | 1,578.4 | 20.1 | 1,800.1 | 20.5 | 2,392.5 | 23.2 | 2,795.3 | 24.6 | 2,973.7 | 24.0 |
| 1.2 உள்நாடு ... | 5,513.0 | 80.0 | 6,294 8 | 79.9 | 6,982.6 | 79.5 | 7,926.2 | 76.8 | 8,584.6 | 75.4 | 9,406.4 | 76.0 |
| 2. **தேறிய படுகடன்(ஆ)** ... | 6,238.9 | 100.0 | 7,236.8 | 100.0 | 8,108.0 | 100.0 | 9,448.3 | 100.0 | 10,280.8 | 100.0 | 11,026.9 | 100.0 |
| 2.1 வெளிநாடு ... | 1,337.3 | 21.4 | 1,550.9 | 21.4 | 1,767.6 | 21.8 | 2,352.5 | 24.9 | 2,750.5 | 26.8 | 2,921.5 | 26.5 |
| 2.2 உள்நாடு ... | 4,901.6 | 78.6 | 5,685.9 | 78.6 | 6,340.4 | 78.2 | 7,095.8 | 75.1 | 7,530.3 | 73.2 | 8,105.4 | 73.5 |

(அ) (i) தேசிய வீடமைப்பு, அரச ஈட்டு வங்கி முறிகள் (1974 திசெம்பர் இறுதியில் முறையே ரூ. 7 இலட்சமாகவும், ரூ. 323 இலட்சமாகவும் அமைந்தன) (ii) நிரம்பலர் கொடுகடனின் கீழ் அரசாங்கத் திணைக்களங்களின் இறக்குமதிகளின் பேரிலான படுகடன் (1974 இறுதியில் ரூ. 3660 இலட்சமாக அமைந்தது) பன்னாட்டு நிதி நிறுவனங்களின் பேரில் வழங்கப்பட்ட உறுதிமொழிக் கடன் பத்திரம்.

(ஆ) ஸ்ரேலிங் கடன், ரூபாக் கடன் என்பவற்றின் கடன்கரைப்பு நிதியங்கள் நீங்கலான மொத்தப் படுகடன்.

இடமளித்த பின் விளங்கும் தேறிய தொகையாகும். ஆகவே, இக்காரணிக்கு இடமளித்து நோக்கும்போது, வெளிநாட்டுக் கடனில் ஏற்பட்ட மொத்த அதிகரிப்பு ரூ. 2,180 இலட்சமாக அமைந்து 1973 இன் ரூ. 2,030 இலட்சம் கொண்ட ஒப்புநோக்கத்தக்க அதிகரிப்பிலும் பார்க்க ரூ. 150 இலட்சம் அதிகமாகவிருந்தது.

மீளப்பார்வையிடும் ஆண்டிற்கு முந்திய இறுதி ஐந்து நிதியாண்டுகளிலும் பொதுப்படுகடனின் வெளிநாட்டுப் படுகடன் பங்கு 1967/68 இல் 17 சதவீதத்திலிருந்து 1973 இல் 24 சதவீதமாகத் தளராத அதிகரிப்பைக் காட்டியது. அண்மை ஆண்டுகளில் உள்நாட்டுப் படுகடனின் முழுத் தொகை அதிகரிப்பு கணிசமானதாகவிருக்கையில், பங்கு வீதத்தின்படி, வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பு உள்நாட்டுப் படுகடன் அதிகரிப்பை விஞ்சும் வகையில் அமைந்தது. ஆயினும், 1974 ஆம் ஆண்டு வெளிநாட்டுப் படுகடன் பங்கு சிறிதளவுக்குக் குறைவுற்றபோது, இப்போக்கு, தற்காலிகமாகத் தடைப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இவ்வளவு காலமும் அரசாங்க வரவுசெலவுத்திட்டங்களை நிதியிடுவதில் வெளிநாட்டுதவி வகித்த முக்கிய பங்கையும், கூடுதலாக இந்நாட்டை எதிர்நோக்கும் அடிப்படைச் சென்மதி நிலுவைப் பிரச்சினைகளையும் இப்போக்கு வெளிக்காட்டுகிறது. பின்வரும் அட்டவணை II (எ) 15 காட்டுவதுபோல் வெளிநாட்டுதவியை மொத்தமாக எடுப்பனவு செய்தமை, குறிப்பாக 1969/70 தொடக்கம் ஓரளவு நிலைதழும்பிய போக்கைக் காட்டியிருக்கையில், வெளிநாட்டுக் கடன்களின் மீளக் கொடுப்பனவுகள் நிலையாக அதிகரித்துக்கொண்டே போகின்றன. ஆகவே, வெளிநாட்டுக் கடனின் தேறிய அதிகரிப்பு, மீளக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு வீதத்தினால் சிறிதளவு தணிக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டுதவி வருவாய்கள் கணிசமானளவிற்கு அதிகரித்தாலல்லாது அல்லது எதிர் ஆண்டு மீளக் கொடுப்பனவுகள் மீளப்பட்டியலிடப்பட்டாலல்லாது இப்போக்கு தொடர்ந்து நீடிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

### அட்டவணை II (எ) 15

### வெளிநாட்டு உதவிகள் 1964/65 — 1974

பத்து இலட்சம் ரூபாய்களில்

| நிதியாண்டு | மீளப் பெறுகைகள் | திருப்பிக் கொடுப்பனவுகள் | அதிகரிப்பு | கால முடிவிலுள்ள பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1964/65 | 92.8 | 17.2 | 75.6 | 489.3 |
| 1965/66 | 112.4 | 35.9 | 76.5 | 548.8 |
| 1966/67 | 236.3 | 45.7 | 190.5 | 739.3 |
| 1967/68 | 214.3 | 52.6 | 161.7 | 1045.4 |
| 1968/69 | 377.0 | 70.8 | 306.2 | 1375.7 |
| 1969/70 | 282.5 | 94.4 | 188.1 | 1578.4 |
| 1970/71 | 310.1 | 88.3 | 221.7 | 1800.1 |
| 1971/72 | 523.2 | 155.2 | 368.2 | 2392.5 |
| 1973 | 346.8 | 143.6 | 203.3 | 2795.3 |
| 1974 | 388.4 | 171.3 | 217.0 | 2973.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1 உலக நாணயங்களை மீளக் கூட்டுச் சேர்ப்பதன் மூலம் ஏற்படுகின்ற தாக்கம் உட்பட.

அண்மை ஆண்டுகளில் முழு நியதிகளின்படியான உள்நாட்டுப் படுகடன் அதிகரிப்பு மிகக் கணிசமானதாகவிருந்து, 1974 ஆம் ஆண்டிலும் இப்போக்கு தொடர்ச்சியாகக் காணப்பட்டது. மொத்தப் படுகடனில் உள்நாட்டுப் படு கடன் பங்கு 1973 இறுதியில், 75 சதவீதமாக விளங்கியமையுடன் ஒப்புநோக் கும்போது 1974 இறுதியில், இது 76 சதவீதமாக அமைந்தது.

அண்மை ஆண்டுகளில் உள்நாட்டுப் படுகடன் வளர்ச்சியில் ஏற்பட்ட குறிப் பிடத்தக்க போக்கு, பொதுப்படுகடனின் நிதி ஆக்கத்தில் காணப்பட்ட வளர்ச்சியாகும். இது, அரசாங்கம் ரூபாப் பிணைகளை வெளியிடுவதன் மூலம் படிப்படியாகக் கூடிய தொகைகளைப் பெறுந் திறனைக் காட்டுகிறது. இதே சம யம் அரசாங்கம் திறைசேரி உண்டியல்களில் குறைந்தளவிற்குத் தங்கியிருந்தது. அண்மை ஆண்டுகளில் தேசிய சேமிப்பு வங்கி போன்ற அரசாங்கச் சேமிப்பு நிறுவனங்களை ஒருங்குபடுத்தியமையும், ஊ. சே. நி திட்ட உள்ளடக்கத்தை விரிவுபடுத்தி, இத்துறைகளை அரசாங்கப் பிணைகளுள் உள்ளடக்கி விரிவு படுத்தியமையும் அரசாங்கக் கடன் திட்டங்கள் அதிகரித்த அளவில் நிதிகளைப் பெறக்கூடிய நிலைக்குப் பெருமளவு காரணமாயமைந்தன. அரசாங்கப் பிணை களில் இவ்வகைகளில் நிதியீடுசெய்வதற்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த பொருள் வளங்களின் அளவு எதிர்காலத்தில் சில ஆண்டுகளுக்கு நிலையாக அதிகரிக்கு மென எதிர்பார்க்கப்படுகின்றது. அரசாங்கமும், குறிப்பாக தேசிய சேமிப்பு வங்கி போன்ற அரசாங்கச் சார்பான நிதியீட்டாளர்களும் விரும்பத்தக்க வட்டி வீதங்களை (வரி நிவாரணங்களுடன்)க் கொடுத்து வைப்புக்கள் செய்வ தற்கு கவர்ச்சியான வருவாய் வீதத்தை ரூபாப் பிணைகள் இவைகளுக்கு அளித்தமையால் இவ்வளவு காலமும் இந்நிதிகளின் பெரும்பங்கு ரூபாப் பிணைகளில் நிதியீடுசெய்யப்பட்டுள்ளது. ஆயினும், இந்நிறுவனங்களின் நிதி யீட்ட வழிகளை விரிவுபடுத்தினாலல்லாது இவ்வகையான முதலீட்டத்தில் மேற் குறிப்பிட்ட நிறுவனங்கள் பெருமளவிற்குத் தங்கியிருத்தல் அரசாங்கத்திற்கு இடர்ப்பாடு நிலையை ஏற்படுத்தக்கூடும்.

அரசாங்கம், அதற்கு மிகவும் தேவையான வரவுசெலவுத் திட்டப் பொருள் வளங்களை அதிகரித்த அளவில் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து (திறைசேரி உண்டியல்கள் அநேகமாக வங்கித் துறையாகக் கொள்ளப் படுகின்றன.) திரட்டியிருப்பது ஒரு வரவேற்கத்தக்க அறிகுறியாகவிருக்கையில், இத்தகைய கடன்பாட்டினால் அரசாங்கம் தாங்கவேண்டிய மேலதிக வட்டிச் சுமையையும் மனதிற் கொள்ளுதல் முக்கியமாகும். அரசாங்கம் பெறும் உள் நாட்டுக் கடன்மீதான வட்டியால் ஏற்படும் செலவு, மாற்றல் கொடுப்பனவுகளா கமைந்து (குறிப்பாக 1970 தொடக்கம் 10-12 ஆண்டு பிணைகளின்மீது கொடுக்கப்படும் வட்டிவீதம் 9 சதவீதமாக நிர்ணயித்தபோது) தீவிர அதிகரிப் பைக் காட்டியமை பின்வரும் அட்டவணை 11 (எ) 16 காட்டுகின்றது. 1969/70 இற்கும் மீளப்பார்வையிடும் ஆண்டிற்கும் இடையில் உள்நாட்டுக் கடன்மீதான வட்டிச்செலவு இரண்டு மடங்கிலும் பார்க்க மேலதிகமாக விளங்கி தற்போது அரசாங்கத்தின் மொத்த நடைமுறைச்செலவில் 11 சதவீதத்திற்கு வகைகூறுகின்றது. ரூபாக் கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகளே உள் நாட்டுக்கடன்மீதான வட்டிச்செலவின் அதிகரிப்பிற்குப் பெருமளவு காரணமா யமைந்தனவென்பதை இவ்வட்டவணையும் காட்டுகின்றது.

அட்டவணை II (எ) 16

**உள்நாட்டுக் கடனில் வட்டி 1964/65 - 1974**

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| நிதியாண்டு | மொத்த நடைமுறைச் செலவு (1) | உள்நாட்டுக்கடனில்[1] வட்டி (2) | ரூபாக் கடன்களில் விதிக்கப்பட்ட வட்டி (3) | ஒன்றின் சதவீதமாக இரண்டு1 (4) |
|---|---|---|---|---|
| 1964/65 | 1895.8 | 87.4 | 73.6 | 4.6 |
| 1965/66 | 1996.8 | 103.2 | 85.4 | 5.2 |
| 1966/67 | 2096.7 | 118.4 | 100.1 | 5.6 |
| 1967/68 | 2392.4 | 133.0 | 113.4 | 5.6 |
| 1968/69 | 2617.1 | 165.0 | 132.2 | 6.3 |
| 1969/70 | 2824.5 | 206.1 | 148.3 | 7.3 |
| 1970/71 | 3096.7 | 263.4 | 195.7 | 8.5 |
| 1971/72 | 4084.8 | 401.0 | 309.5 | 9.8 |
| 1973 | 3790.6 | 392.8 | 319.1 | 10.4 |
| 1974[2] | 3890.3 | 475.5 | 380.2 | 12.2 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1 ரூபாக்கடன் வட்டி, திறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குச் சான்றிதழ்கள், தேசிய அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

2 ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள்.

வெவ்வேறு காரணங்களைக் கொண்டே ரூபாப் பிணைகள் மீதான வட்டி வீதங்கள் நடைமுறை மட்டத்தில் 9 சதவீதமாக நிர்ணயிக்கப்படுகின்றன. இவற்றுள் ஒன்று தேசிய சேமிப்பு வங்கி போன்ற சில நிறுவன முதலீட்டாளர்கள் தம்மிடம் பொதுமக்கள் வைத்திருக்கும் வைப்புக்கள் மீது அளிக்கும் வட்டி வீதமாகும். உள்நாட்டுக் கடன்மீது, சிறப்பாக கடன்கரைப்பு நிதியங்கள் வசமுள்ள முதலீடுகள் மீது, கொடுக்கப்படும் வட்டியில் ஒரு பகுதி அதிகமாக அரசாங்கங்களுக்கிடையிலுள்ள கொடுப்பனவுகளாக அமைந்துள்ளது. எனினும், அரசாங்கம் அதன்கடனைத் தீர்க்கும் திறனில் தடை ஏற்படாவிடின், திரட்டிய நிதிகள் அதேயளவு வருவாய் வீதத்தை அளிக்கக்கூடியதாகப் பயன்படுத்தல் வேண்டும்.

1975ஆம் நிதியாண்டில், அரசாங்கம் உள்நாட்டு வங்கியல்லா மூலங்களிலிருந்து ரூ. 9,000 இலட்சத்தையும், வெளிநாட்டு மூலங்களிலிருந்து ரூ. 109,500 இலட்சத்தையும் திரட்ட எண்ணியுள்ளது. எதிர்பார்க்கப்பட்ட வெளிநாட்டுக் கடன் ரூ. 2,300 இலட்சம்கொண்ட செயற்திட்டக்கடன்களையும், ரூ. 8,650 இலட்சம்கொண்ட செயற்திட்டமல்லா (பண்ட)க்கடன்களையும் கொண்டுள்ளது.

**உள்நாட்டுப் படுகடன்**

1974ஆம் நிதியாண்டிறுதியில் மொத்த உள்நாட்டுப் பொதுப்படுகடன் ரூ. 94,060 இலட்சமாக அமைந்து, சென்ற நிதியாண்டிலும் பார்க்க ரூ. 8,220 இலட்சம் (10 சதவீதம்) அதிகமாகவிருந்தது. கடந்த ஐந்து நிதியாண்டுகளின் இறுதியில் உள்ள உள்நாட்டுப் படுகடனின் உள்ளடக்கமும், மாற்றங்களும் கீழுள்ள அட்டவணை II (எ) 17இல் காட்டப்பட்டுள்ளன.

### அட்டவணை II (எ) 17

### உள்நாட்டுப் பொதுப்படுகடனின் அமைப்பும் அதன் மாற்றங்களும் 1968/69—1974 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| முடிவிலுள்ளபடி | ரூபாக் கடன்கள் மொத்தம் | ரூபாக் கடன்கள் கடன் கரைப்பு நிதியம் (அ) | ரூபாக் கடன்கள் தேறிய | திறைசேரி உண்டியல்கள் | வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் | மத்திய வங்கி முற்பணங்கள் (ஆ) | தேசிய அபிவிருத்தி முறிகள் | கூட்டுத் தொகை மொத்தம் | கூட்டுத் தொகை தேறிய |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1969 செத்தெம்பர்... | 3,409.1 | 611.4 | 2,797.7 | 1,750.0 | 24.5 | 329.3 | 0.1 | 5,513.0 | 4,901.6 |
| 1970 ,, .. | 3,924.9 | 608.9 | 3,316.0 | 1,950.0 | 45.4 | 374.4 | 0.1 | 6,294.8 | 5,685.9 |
| 1971 ,, ... | 4,511.9 | 642.2 | 3,869.6 | 2,025.0 | 66.0 | 379.5 | 0.2 | 6,982.6 | 6,340.4 |
| 1972 திசம்பர் ... | 5,103.4 | 830.4 | 4,273.0 | 2,325.0 | 78.0 | 419.6 | 0.2 | 7,926.2 | 7,095.3 |
| 1973 ,, ... | 5,812.2 | 1,054.3 | 4,757.9 | 2,250.0 | 66.1 | 456.1 | 0.2 | 8,584.6 | 7,530.4 |
| 1974 ,, .. | 6,590.5 | 1,301.0 | 5,289.5 | 2,250.0 | 67.9 | 497.9 | 0.1 | 9,406.4 | 8,105.8 |
| 1970/69 மாற்றம் | + 515.8 | — 2.5 | + 518.3 | + 200.0 | + 20.9 | + 45.1 | — | +781.8 | +784.3 |
| 1971/70 மாற்றம் | + 587.0 | + 33.3 | + 553.6 | + 75.0 | + 20.6 | + 5.1 | + 0.1 | +687.8 | +654.5 |
| 1972 திசெம்பர் /71 செத்தெ.மாற்றம் | + 591.5 | + 188.2 | + 403.4 | + 300.0 | + 12.0 | + 40.1 | — | +943.6 | +755.4 |
| 1973 மாற்றம் | + 708.8 | + 223.9 | + 484.9 | — 75.0 | — 11.9 | + 36.5 | — | +658.4 | +434.5 |
| 1974 மாற்றம் | + 778.3 | + 246.7 | + 531.6 | — | + 1.8 | + 41.8 | — 0.1 | +821.8 | +575.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) கடன்கரைப்பு நிதியத்தின் பேரில்வைக்கப்பட்ட முதலீட்டங்களின் சந்தைப் பெறுமதியைக் குறிக்கும் (துணைக் கடன்கரைப்பு நிதியங்களும் உட்பட)

(ஆ) பன்னாட்டு நாணய நிதி, பன்னாட்டுப் புனருத்தாரண அபிவிருத்தி வங்கி, பன்னாட்டு அபிவிருத்திச் சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றிற்கு உறுப்புரிமைக் கட்டணங்களைக் கொடுப்பதற்கென வழங்கப்பட்ட சிறப்புக் கடன்களும் உட்பட. 1973 திசெம்பர் இறுதியில் ரூ. 958 இலட்சமாகவும் 1974 திசெம்பர் இறுதியில் ரூ. 985 இலட்சமாகவும் விளங்கிய இக்கடன்கள் நீங்கலாக, 1974 இல் மத்திய வங்கி முற்பணங்கள் ரூ. 418 இலட்சத்தால் அதிகரித்தன. இச்சிறப்புக் கடன்கள் பன்னாட்டு நிதி நிறுவனங்களின் சார்பில் வழங்கப்பட்ட வாக்குறுதிச் சான்றிதழ்களைத் தவிர்க்கின்றன.

மொத்த உள்நாட்டுப்படுகடனில் ஏற்பட்ட ரூ. 8.220 இலட்சம் அதிகரிப்பானது ரூபாக் கடன்களின் ரூ. 7780 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், மத்திய வங்கி முற்பணங்களின் ரூ. 420 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும், வரி ஒதுக்குச்சான்றிதழ்களின் கையளிக்கப்படாத தொகையின் (தேசிய அபிவிருத்தி முறிகளில் ரூ. 1 இலட்சத்தைத் திருப்பிக் கொடுத்தமையால் ஈடுசெய்யப்பட்டது) ரூ. 20 இலட்சம் கொண்ட அதிகரிப்பையும் கொண்டுள்ளது. 1973 இறுதிக்கும் 1974 இறுதிக்கும் இடையில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் தொகையில் எதுவித மாற்றமுமில்லை. இதன் விளைவாக ரூபாக் கடன்களின் தொடர்பில் பங்கு 68 சதவீதத்திலிருந்து 70 சதவீதமாக அதிகரித்து, மத்திய வங்கி முற்பணங்கள் (5 சதவீதமாகவும்), வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் (1 சதவீதமாகவும்) எதுவித மாற்றமுமின்றியிருக்கையில், வெளிநிற்கும் உள்நாட்டுக் கடனில் திறைசேரி உண்டியல்களின் பங்கு 1973ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26 சதவீதத்திலிருந்து 24 சதவீதமாக வீழ்ச்சியுற்றது,

1973ஆம் ஆண்டிலும், மீளப்பார்வையிடும் ஆண்டிலும் ரூபாக் கடன்கள் வழங்குவதன் வாயிலாக (மாற்றற் கடன்கள் நீங்கலாக) பெறப்பட்ட கடன்பாடு, மொத்த உள்நாட்டுக் கடன்பாடுகளில் 95 சதவீதத்திற்கு வகை கூறியிருக்கையில், மத்திய வங்கி முற்பணங்கள் சென்ற ஆண்டிலும் பார்க்க ஒரு சிறு அதிகரிப்பை மட்டுமே காட்டின. 1973இல் அரசாங்கம் கணிசமானளவு தொகை கொண்ட திறைசேரி உண்டியல்களை எடுப்பனவு செய்தமையினுல் ஆண்டிறுதியில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்கள் ரூ. 750 இலட்சத்தால் குறைவுற்றன. 1974 இறுதியில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் தொகை 1973 இறுதித் தொகையின் அதே அளவாக விளங்கியது. ஆகவே அரசாங்கம் சென்ற ஆண்டு அளவிலும் பார்க்கக் கூடுதலாகத் திறைசேரி உண்டியல்களை நாடாது அதற்குத் தேவையான நிதியைப் பெற்றுள்ளது. அண்மை ஆண்டு வரவுசெலவுத் திட்டங்கள் அடைய எண்ணியுள்ள நிதிக் கட்டுப்பாட்டையும் இது காட்டுகின்றது 1973இல் வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் வெளிநின்ற தொகையில் ஏற்பட்ட ரூ. 120 இலட்சம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில், 1974இல் ரூ. 20 இலட்சம் கொண்ட அதிகரிப்புப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஐந்து நிதியாண்டுகளின் இறுதியிலுள்ளபடியான மொத்த உள்நாட்டுப்படுகடனின் முதிர்ச்சியமைப்பு அட்டவணை 11 (எ) 18இல் காட்டப்பட்டுள்ளது.

1974 நிதியாண்டிறுதி உள்நாட்டுப்படுகடனில் நிதியீட்டப்பட்ட படுகடனின் (ரூபாப் பிணைகளையே முழுதும் கொண்ட) தொடர்பான பங்கு, 70 சதவீதமாக அதிகரித்திருக்கையில், நிதியீட்டப்படாத படுகடனின் (திறைசேரி உண்டியல்களையே முக்கியமாகக் கொண்ட) 30 சதவீதமாகக் குறைவுற்றது இவ்வீழ்ச்சி 1959/60 தொடக்கம் எந்நிதியாண்டிலும் எப்பொழுதாவது பதிவு செய்யப்படாத ஆகக்குறைந்தளவு பங்கு வீழ்ச்சியைப் பதிவுசெய்துள்ளது. ஆயினும், நிதியாண்டிறுதியில் வெளிநிற்கும் நிதியீட்டப்படாத கடனின் மொத்தத் தொகை ரூ. 28,160 இலட்சமாக அமைந்து, சென்ற நிதியாண்டிலும் ரூ. 440 இலட்சம் அதிகமாகவிருந்தது. இவ்வதிகரிப்பிற்கு வரி ஒதுக்குச் சான்றிதழ்களினதும், வெளிநிற்கும் மத்திய வங்கி முற்பணங்களினதும் தொகைகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாகும். அண்மை ஆண்டுகளில் ரூபாப் பிணைகளை வழங்கும் வங்கியல்லா மூலங்களிலேயே அரசாங்க வரவு செலவுத் திட்டங்கள் பெருமளவு தங்கியிருந்ததை நிதியிடப்பட்ட கடனின் அதிகரித்த பங்கு எடுத்துக்காட்டுகின்றது.

1970-71ஐ அடுத்து வழங்கப்பட்ட எல்லா ரூபாப் பிணைகளும் 10-12 ஆண்டு வரையான முதிர்ச்சிக் காலப்பகுதியைக் கொண்டன. இதன் விளைவாக இவற்றின் முதிர்ச்சி அமைப்பு 5-10 ஆண்டுவரை, 10-15 ஆண்டு வரையான தொகுதிக் காலத்திற்குள்ளேயே அடங்குகின்றது. இவற்றின் தொடர்பான பங்குகள் 1969/70இல் 6 சதவீதமாகவும் 9 சதவீதமாகவுமிருந்து 1974இல் 17 சதவீதமாகவும் 32 சதவீதமாகவும் அதிகரித்தன. மறுபுறம் 1969/70 நிதியாண்டினிறுதியின் 20-25 ஆண்டு வரையான பிணைகளின் பங்கு மொத்த உள்நாட்டுப் பொதுப்படுகடனின் 23 சதவீதமாக அமைந்து சென்ற சில ஆண்டுகளாக நீண்ட தவணை ரூபாப் பிணைகள் வழங்காமையினுல் 1974 இறுதியில், இவை மிகச் சிறியளவு சதவீதமாக (0.4 சதவீதம்) பெரிதும் வீழ்ச்சியுற்றன. எதிர்காலத்திலும் இக்கொள்கை தொடர்ந்து நீடிக்கப்படுமாயின், 15 ஆண்டுகளையும், இதற்கு மேலாகவுள்ள முதிர்ச்சிக் காலப்பகுதியையுடைய பிணைகள் உள்நாட்டுக் கடன் முதிர்ச்சிப் பிரிவிலிருந்து படிப்படியாக நீக்கப்படும் சென்ற ஆண்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டவாறு, நீண்ட தவணைப் பிணைகளை வழங்குவதனுல் எதிர்காலத்தில் அரசாங்கம் எதிர்நோக்கவேண்டியிருக்கும் பொதுப்படுகடன் நிர்வாகம் பற்றிய பிரச்சினையை இலகுவாக்கலாம்.

## அட்டவணை II (எ) 18

### உள்நாட்டுப் படுகடன் முதிர்ச்சியின்படியான பகுப்பாய்வு
( அரசாங்க நிதியாண்டின் இறுதியிலுள்ளபடி )(அ)

| முதிர்ச்சிக்கான ஆண்டுகள் | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | | 1973 | | 1974 (தற்காலிகம்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | தொகை ப.இ.ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் | தொகை ப. இ. ரூ. | சத வீதம் |
| 1. நிதியீட்டப்படாத படுகடன்(ஆ) ... | 2,103.8 | 38.2 | 2,369.9 | 37.6 | 2,470.6 | 35.4 | 2,822.6 | 35.6 | 2,772.4 | 32.3 | 2,815.8 | 29.9 |
| 2. நிதியீட்டப்பட்ட படுகடன்(இ) ... | 3,408.6 | 61.8 | 3,924.9 | 62.4 | 4,511.9 | 64.6 | 5,103.4 | 64.4 | 5,812.2 | 67.7 | 6,590.5 | 70.1 |
| 2.1 முதல் 5 ஆண்டுகள் ... | 534.9 | 9.7 | 491.1 | 7.8 | 397.4 | 5.7 | 428.1 | 5.4 | 429.4 | 5.0 | 357.8 | 3.8 |
| 2.2 5 முதல் 10 ஆண்டுகள் வரை .. | 235.8 | 4.3 | 383.2 | 6.1 | 492.7 | 7.1 | 307.0 | 3.9 | 1,191.1 | 13.9 | 1,589.2 | 16.9 |
| 2.3 10 முதல் 15 ஆண்டுகள் வரை .. | 247.0 | 4.5 | 534.6 | 8.5 | 1,352.4 | 19.4 | 2,277.0 | 28.7 | 2,280.7 | 26.6 | 2,985.0 | 31.7 |
| 2.4 15 முதல் 20 ஆண்டுகள் வரை .. | 795.0 | 14.4 | 1 047.4 | 16.6 | 1,118.0 | 16.0 | 1,366.3 | 17.2 | 1,536.0 | 17.9 | 1,623.5 | 17·3 |
| 2.5 20 முதல் 25 ஆண்டுகள் வரை | 1,595.9 | 29.0 | 1,468.5 | 23.3 | 1,151.4 | 16.5 | 725.0 | 9.1 | 375.0 | 4.3 | 35.0 | 0.4 |
| 3. மொத்தம் ... ... ... | 5,512.4 | 100.0 | 6,294.8 | 100.0 | 6,982.5 | 100.0 | 7,926.0 | 100.0 | 8,584.6 | 100.0 | 9,406.4 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) அரசாங்கத்தின் நிதியாண்டு ஒற்றோபர் 1ந் திகதி தொடக்கம் செத்தெம்பர் 31ந் திகதி வரையாக இருந்தது. ஆனால், 1971/72 இல் இது 1971 ஒற்றோபர் 1ந் திகதி தொடக்கம் 1972 திசெம்பர் 31 வரையாக இருந்தது. 1973 இலிருந்து இது கலண்டர் ஆண்டுடன் ஒன்றுபடுகிறது. அதாவது சனவரி — திசெம்பர்.

(ஆ) திறைசேரி உண்டியல்கள், வரியொதுக்குச் சான்றிதழ்கள், மத்திய வங்கி முற்பணங்கள், தேசிய அபிவிருத்தி முறிகள் ஆகியவற்றைக் கொண்டது.

(இ) முதிர்ச்சியின் கடைசித் திகதியிலுள்ளபடி.

**ரூபாப் பிணைகள்**

1974இல் 10-12 ஆண்டு காலத்தைக் கொண்ட ரூ. 9,200 இலட்சம் பெறுமதியான ஆண்டொன்றுக்கு 9 சதவட்டிவீதம் கொண்ட 10 ரூபாக் கடன்கள் வழங்கப்பட்டன. சென்ற நிதியாண்டில் ரூபாக் கடன்கள் மூலமாகப் பெறப்பட்ட கடன்கள் ரூ. 8000 இலட்சமாக விளங்கின. இவற்றில் ரூ. 400 இலட்சம் மாற்றற் கடன்களுக்காகும்.

1974இல் வழங்கப்பட்ட ஒவ்வொரு ரூபாக் கடனுக்குமான உதவுதொகைகளின் விவரங்கள் பின்னிணைப்பு 111இன் அட்டவணை 41இல் தரப்பட்டுள்ளன. கடந்த ஐந்து நிதியாண்டுகளில் வழங்கப்பட்ட ரூபாக் கடன்களின் உதவுதொகைகளை அட்டவணை 11 (எ) 19 சுருக்கமாகத் தருகின்றது.

1974இற்கான வரவுசெலவுத் திட்டம், உள்நாட்டு வங்கியல்லாத் துறையிடமிருந்து ரூபாக் கடன்கள் மூலம் ரூ, 7,200 இலட்சம் திரட்டலாமென எதிர்பார்த்தது. எனினும், 1974ஆம் ஆண்டின் அரசாங்கக் கடன் தொழிற்பாடுகள் ரூபாப் பிணைகள் வாயிலாக ரூ. 9,200 இலட்சத்தைத் திரட்டின, இத்தொகை, முன்பு எதிர்பார்த்த எண்தொகையிலும்பார்க்க ரூ. 2.000 இலட்சம் கொணட பெருமளவு அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. இத்தொகை 1973இல் ரூபாக் கடன்கள் மூலம் பெறப்பட்ட தொகையிலும் பார்க்க ரூ 1,200 இலட்சம் அல்லது 15 சதவீதம் அதிகமாக விளங்குகின்றது.

1974ஆம் ஆண்டில் மூலவளங்கள் கவர்ச்சியளிக்கும் முறையில் திரட்டியமைக்கு, வங்கியல்லா முதலீட்டுத் தொகுதியின் உதவுதொகைகளே முற்றிலும் காரணமாகும். 1974[1]இல் வங்கித்துறை ரூபாக் கடன்களுக்கு ஒருவித உதவுதொகைகளும் வழங்கவில்லை.

1969/70ஆம் ஆண்டினைத் தவிர்த்து, கடந்த சில ஆண்டுகளாக ரூபாப் பிணைகளின் முதலீட்டுக்கான நிதி பெரும்பாலும் வங்கியல்லா முதலீட்டுத் தொகுதியிலிருந்து முக்கியமாக தேசிய சேமிப்பு வங்கி, கடன்கரைப்பு நிதியங்கள், ஊழியர் சேமநிதி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் மூலமே பெறப்பட்டு வந்துள்ளது.

1974இன் மொத்த உதவுதொகையில் இந்நான்கு மூலங்களின் பங்கு 95 சதவீதமாக அமைந்து முன்னைய ஆண்டிலும்பார்க்க 3 சதவீதம் மேலுமோர் அதிகரிப்பைக் காட்டுகின்றது. இவ்வாறு அரசாங்கத்தின் திட்டங்கள் பெரிதும் அரசாங்க ஆதிக்கத்திற்குட்பட்ட மூலங்களில் தங்கியிருந்து வருகின்றன. தேசிய சேமிப்பு வங்கியினதும் கடன்கரைப்பு நிதியங்களினதும், ஊழியர் சேமநிதியினதும், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் உதவுதொகைகள் முறையே ரூ. 3,330 இலட்சம் அல்லது 36 சதவீதமாகவும், ரூ. 2,350 இலட்சம் அல்லது 26 சதவீதமாகவும், ரூ. 1,980 இலட்சம் அல்லது 22 சதவீதமாகவும், ரூ. 1,110 இலட்சம் அல்லது 12 சதவீதமாகவும் விளங்கின. அரசாங்க ஆதிக்கத்திற்குட்படாத மூலங்களுள் தனியார் சேமநிதியிலிருந்து பெற்ற உதவுதொகைகளும் சிறிது அதிகரித்திருக்கையில், தனியாட்கள், சங்கங்கள் நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பெற்ற உதவுதொகைகள் சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் வீழ்ச்சியுற்றன.

---

1. வங்கித்துறை ரூபாப் பிணைகளுக்கு நேரடியாக கட்டணம் செலுத்துவது தவிர்க்கப்பட்டமையால் அண்மை ஆண்டுகளில் இத்துறை இப்பிணைகளில் செய்யும் முதலீடுகள் முதிர்ச்சியடையும் கையிருப்புக்களை மாற்றுவதனுல் ஏற்பட்ட கடன்கள் வடிவில் விளங்கின.

## அட்டவணை II (எ) 19

### ரூபாப் பிணைகளுக்கான உதவு தொகைகளின் பாகுபாடு (அ)

| உதவுநர்கள் | 1968/69 | | 1969/70 | | 1970/71 | | 1971/72 | | | 1973 | | 1974 (தற்காலிகம்) | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | 12 மாதங்கள் தொகை ப.இ.ரூ. | 15 மாதங்கள் தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % | தொகை ப.இ.ரூ. | % |
| 1. வங்கித்துறை | 0.6 | 0.2 | 117.5 | 20.3 | 12.7 | 1.9 | 37.4 | 46.7 | 6.3 | 13.3 | 1.7 | — | — |
| 1.1 வர்த்தக வங்கிகள் ... | 0.6 | 0.2 | 117.5 | 20.3 | 12.7 | 1.9 | 37.4 | 46.7 | 6.3 | 13.3 | 1.7 | — | — |
| 2. வங்கியல்லாத்துறை ... | 339.4 | 99.8 | 461.7 | 79.7 | 668.1 | 98.1 | 559.9 | 699.9 | 93.7 | 786.7 | 98.3 | 920.0 | 100.0 |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் (ஆ) .. | 36.0 | 10.6 | 156.1 | 26.9 | 216.0 | 31.7 | 97.4 | 121.7 | 16.3 | 213.9 | 26.7 | 333.5 | 36.3 |
| 2.2 கடன்கரைப்பு நிதியம் | 111.8 | 32 9 | 83.0 | 14.3 | 161.8 | 23.8 | 168.0 | 210.0 | 28.1 | 225.8 | 28.2 | 234.6 | 25.5 |
| 2.3 திணைக்கள நிதியங்களும் ஏனைய அரச கரும நிதியங்களும் ... | 8.4 | 2.5 | 6.2 | 1.1 | 9.4 | 1.4 | 12.7 | 15.9 | 2.1 | 9.5 | 1.2 | 2.0 | 0.2 |
| 2.4 உழியர் சேம நிதியம் | 101.3 | 29.8 | 97.9 | 16.9 | 143.0 | 21.0 | 158.2 | 197.1 | 26.5 | 196.9 | 24.6 | 198.3 | 21.6 |
| 2.5 காப்புறுதிக் கூட்டுத் தாபனம் ... | 42.5 | 12.5 | 45.5 | 7.9 | 60.8 | 8.9 | 55.3 | 69.1 | 9.3 | 100.0 | 12.5 | 110.0 | 11.9 |
| 2.6 தனியார் சேம நிதியங்களும் ஓய்வூதிய நிறுவனங்களும் ... | 36.8 | 10.8 | 53.9 | 9.3 | 62.1 | 9.1 | 64.6 | 80.8 | 10.8 | 34.0 | 4.2 | 35.8 | 3.9 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. | 0.6 | 0.2 | 16.1 | 2.8 | 6.3 | 0.9 | 0.4 | 0.5 | 0.1 | — | — | 0.6 | 0.1 |
| 2.8 ஏனைய கூட்டு நிலையங்கள் | 0.2 | 0.1 | 0.6 | 0.1 | 0.8 | 0.1 | 0.2 | 0.3 | ... | 0.6 | 0.1 | 0.4 | ... |
| 2.9 தனியார்களும், சங்கங்களும், நிறுவனங்களும் ... | 1.5 | 0.4 | 2.5 | 0.4 | 7.9 | 1.2 | 3.1 | 3.9 | 0.5 | 6.1 | 0.8 | 4.8 | 0.5 |
| 3. மொத்தம் ... | 340.0 | 100.0 | 579.2 | 100.0 | 680.7 | 100.0 | 597.1 | 746.6 | 100.0 | 800.0 | 100.0 | 920.0 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்.

(ஆ) தேசிய சேமிப்பு வங்கியானது 1972 ம் ஆண்டு ஏப்ரில் மாதம் 1 ம் திகதி தொட்டு தபாற்கந்தோர் சேமிப்பு வங்கி, இலங்கை சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ்கள் நிதியம் என்பவற்றின் சொத்துக்களையும், மொத்தக் கடன்களையும் கையேற்றுக்கொண்டது.

தேசிய சேமிப்பு வங்கி (இது 1972 ஏப்பிறல் தொடக்கம் அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியினதும், இலங்கைச் சேமிப்பு வங்கியினதும், சேமிப்புச் சான்றிதழ் களினதும் நிதிகளின் முதலீடுகளை ஒருமுகப்படுத்தியுள்ளது), 1974ஆம் ஆண்டின் ரூபாப் பிணைகளுக்கு ஆகக்கூடியளவு உதவுதொகைகளை வழங்கி யுள்ளது. இதன் உதவுதொகைகள் இவ்வாண்டின்போது ரூ. 3,330 இலட்சமாக அமைந்து, 1962/63 தொடக்கம் ஒரு தனி முதலீட்டாளரினுல் ரூபாப் பிணைகளுக்காக வழங்கப்பட்ட எவ்வாண்டுத் தொகையிலும்பார்க்க முழு நிதியின்படியும், தொடர்பான நிதியின்படியும் ஆகக்கூடிய முதலீட்டுத் தொகையைப் பதிவு செய்தன. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் தேசிய சேமிப்பு வங்கி வைப்புக்கள் (சேமிப்புச் சான்றிதழ்கள் உட்பட ரூ. 2,040 இலட்சத்தால் அதிகரித்தன. தன்னுடன் போட்டியிடும் நிறுவனங்களிலும் பார்க்க வைப்புக்களின் மீது கூடிய வட்டி வீதங்களை அளிப்பதுடன் சிறப்பான வருமானவரிச் சலுகைகள்[1] வைப்பாளர்களுக்கு வழங்குவதனுல் இவ்வங்கி கூடியளவு வைப்புக்களைத் திரட்டும் நிலையிலிருந்தது. இவ்வங்கியினுல் நடாத் தப்படும் சேமிப்பு ஊக்குவிப்பு இயக்கங்களும், புதிய கிளைகளைத் திறத்தலை உள்ளடக்கும் விரிவுத் திட்டமும் (இவ்வங்கி 1974 இறுதியில் 19 கிளைகளைத் திறந்துள்ளது) வைப்புக்களைத் திரட்டும் முயற்சிகளில் பெருமளவிற்கு உதவி யுள்ளன. வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பை விட, இதன் அண்மை முதலீடுகளில் பெறவிருக்கும் கூடிய வீத வட்டியினுல் இவ்வங்கிக்குத் தற்போது கிடைக்கக்கூடியதாயுள்ள உயர்ந்த வருவாயும், இது, அதிகரித்த முதலீட்ட வருவாய்கள் வழங்குவதற்குத் துணை புரிந்தன. இறுதியாக சென்ற ஆண்டைப் போன்று தேசிய சேமிப்பு வங்கி உரிமை வாயிலாகப் பெற்ற பழைய முதலீடுகள் தொடர்பான வங்கியின் குறைந்த வருவாய் பிணைகளுக்கு ஈடுசெய்யும் முகமாக திறைசேரியினுல் வழங்கப்பட்ட ரூ. 200 இலட்சம் கொண்ட கொடையும் 1974இல் ரூபாப்பிணைகளில் மீள முதலீடு செய்யப்பட்டது.

1974இல் ரூபாப் பிணைகளுக்கான அடுத்த முக்கிய உதவுதொகை கடன் கரைப்பு நிதியங்களிலிருந்து பெறப்பட்டது. கடந்த காலங்களில் அரசாங்கத் தினுல் பெறப்பட்ட கடன்பாடுகள் அதிகரித்ததன் விளைவால் இம்மூலத்திலிருந்து பெறப்பட்ட உதவுதொகைகள் அதிகரித்தன. மறுபுறம் இவை முதலீட்டுக் கிடைக்கத்தக்க கடன்கரைப்பு நிதியங்களின் அளவினையும் அதிகரிக்கச்செய்தன. மேலும், ரூபாப் பிணைகளின் முதலீடுகளுக்கு வழங்கப்படும் கூடிய 9 சதவீத வட்டியும், ஒப்பிடுகையில் அண்மை ஆண்டுகளில் சில கடன்களே மீட்கப் பட்டமையும் 1974இல் கடன்கரைப்பு நிதிகளின் முதலீட்டுத் திறனை உயர்த்தியுள்ளன.

ஊழியர் சேமிப்பு நிதியே 1974இல் ரூபாப் பிணைகளுக்கான மூன்ருவது பெரிய தொகையை வழங்குகிறது. சென்ற நிதியாண்டிலும்பார்க்க ரூபாப் பிணைகளுக்கான உதவுதொகைகளில் சிறு அதிகரிப்பு ஏற்பட்டபோதும், இதன் தொடர்பான பங்கு 1973இல் 25 சதவீதத்திலிருந்து 1974இல் 22 சதவீதமாகக் குறைவுற்றது. 1974இன் ரூபாப் பிணைகளில் இந்நிதியினுல் முதலீடுசெய்யப்பட்ட மாதாந்தச் சராசரி வீதம் மாதமொன்றிற்கு ரூ. 160 இலட்சம்கொண்ட அளவில்

---

1. தேசிய சேமிப்பு வங்கியிலுள்ள வைப்புக்களின்மீது, ஓராண்டிற்கு ஒரு தனியாள் ரூ. 1000 வரை பெற்ற வட்டிக்கும், ஆண்டொன்றிற்கு ஒரு குடும்பம் ரூ. 6000 உச்சவரம்பாகப் பெற்ற வட்டிற்கும் வருமான வரியிலிருந்து விலக்களிக்கும் முறையில் தற்போது கிடைக்கப்பெறும் வரிச் சலுகைகள் அமைந்துள்ளன.

அமைந்தது. இத்தொகை 1973இன் மாதாந்தச் சராசரி அளவிலும்பார்க்க சிறிது அதிகமாகவிருந்தது. ரூபாப் பிணைகளில் முதலீடுசெய்வதற்கு, ஊழியர் சேமநிதியத்தில் நிதி இருக்கின்றதா என்பதை அடிப்படையில் இரண்டு காரணிகளால் நிர்ணயிக்கப்படுகின்றது. அதாவது செலவுக்கு மேல் வருவாய் உண்டா என்பதனுலும், ஆண்டின்போது பெற்ற உதவுதொகைகளினுலுமாகும். செலவிலும்பார்க்க வருமானம் அதிகரிப்பதற்கு வேலை நிலையினதும் கூலிகளினதும் நிலையும், தொழிற் திணைக்களச் செயலகத்தின் நடைமுறைப்படுத்தும் திறனுமே காரணங்களாகும். பிற்கூறிய காரணிக்கு இந்நிதியிலிருந்து செய்யப்பட்ட மீளஎடுப்பனவுகளே முக்கிய காரணியாகும். சிறிமா - சாஸ்திரி உடன்படிக் கையின்கீழ் நாட்டை விட்டு வெளியேறும் இந்தியரின் உதவுதொகைகளை மீள எடுப்பனவு செய்தமை காரணமாக சென்ற சில ஆண்டுகளில் இந் நிதியிலிருந்து வெளிச்சென்ற தொகை சராசரி அளவிலும்பார்க்கக் கூடுதலாக விருந்தது. 1965-69 ஆண்டுகளுக்கிடையில் மீளப்பெற்ற எடுப்பனவுகள் ஆண்டொன்றிற்கு ரூ. 100 இலட்சம் மட்டுமாகவிருக்கையில், 1970-74 காலப் பகுதியில் இதன் சராசரி வீதம் ஐந்து மடங்கால் ரூ. 570 இலட்சமாக அதிகரித்தது. அத்துடன் ஊழியர் சேமநிதியின் தொழிற்படும் செலவுகளுக்காக தொடக்கத்தில் அரசாங்கத்தினுல் வழங்கப்பட்ட ரூ. 200 இலட்சம் கொண்ட கடனை 1973/1974ஆம் ஆண்டுகளில் இது மீளக்கொடுத்தது. இக்காரணிகள் நிலவியபோதும் ரூபாப் பிணைகளுக்கான மாதாந்த வீதம் 1973இலும் பார்க்க சிறிதளவு அதிகரித்தது

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் உதவுதொகைகள் சென்ற நிதியாண்டிலும் பார்க்க ரூ 100 இலட்சம்கொண்ட அதிகரிப்பைக் காட்டின. ஆயினும், இதன் தொடர்பான பங்கு 1973இல் 13 சதவீதத்திலிருந்து 1974இல் 12 சதவீதமாகக் சிறிதளவு குறைவுற்றது. இதன் கட்டண வருமானத்தில் குறிப்பாகப் பொதுக்கட்டணத்தில் ஏற்பட்ட கணிசமானளவு அதிகரிப்பு, இதன் ரூபாப் பிணை உடைமைகளில் ஏற்பட்ட கூடிய வட்டி, இழப்பில் ஏற்பட்ட குறைப்பு ஆகிய காரணிகள் இக்கூட்டுத்தாபனம் 1974ஆம் ஆண்டு ரூபாப் பிணைகளுக்கு அதிக உதவுதொகைகளைச் செய்ய வழிவகுத்தன.

1974இல் வங்கியல்லாத் தனியார் துறையிலிருந்து ரூபாப் பிணைகளுக்கான உதவுதொகை ரூ. 420 இலட்சமாக அமைந்து, சென்ற ஆண்டிலும்பார்க்க ரூ 10 இலட்சம் சிறு அதிகரிப்பைப் பதிவுசெய்தது. சென்ற சில ஆண்டுகளைப் போன்று இத்துறைக்கு தனியார் சேமநிதிகளும், இளைப்பாறல் நிதிகளுமே இத்துறைக்கான முக்கிய உதவு தொகையாளர்களாக விளங்கின. 1973இல் காப்புறுதிக் கூட்டுநிலையங்கள் ரூபாப் பிணைகளுக்கு எவ்வித உதவு தொகையும் அளிக்காதிருக்கையில் 1974இல் இவை ரூ. 10 இலட்சத்தை அளித்தன. இதேவேளையில் ஏனைய கூட்டு நிலையங்களிலிருந்தும், தனியாட்களிடமிருந்தும் சங்கங்களிலிருந்தும், நிறுவனங்களிலிருந்தும் பெற்ற உதவுதொகைகள் ரூ. 20 இலட்சத்தால் குறைவுற்றன.

கடந்த ஆறு நிதியாண்டுகளின் இறுதியில் காணப்பட்ட ரூபாப் பிணைகள் உடைமைப்பாகுபாடு கீழேயுள்ள II (எ) 20இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (எ) 20

### ரூபாப் பிணைகளின் உடைமைகள்(அ) – 1968/69 – 1974 நிதியாண்டுகளின் இறுதியிலுள்ளபடி

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 | 1973 | 1974 தற்காலிகம் |
|---|---|---|---|---|---|---|
| **1. வங்கித் துறை** ... ... .. | **367 0** | **586.0** | **588.2** | **536.1** | **498.8** | **469.3** |
| 1.1 மத்திய வங்கி .. ... ... | 111.8 | 249.0 | 247.5 | 197.3 | 183.5 | 173.5 |
| 1.2 வர்த்தக வங்கிகள் .. ... | 255.3 | 337 0 | 340.7 | 338.8 | 315.3 | 295.8 |
| **2 வங்கியல்லாத் துறை** .. ... | **3,042.0** | **3,338.9** | **3,923.7** | **4,567.3** | **5,313.4** | **6,121.3** |
| 2.1 சேமிப்பு நிறுவனங்கள் (ஆ) | 641.7 | 651.5 | 832 6 | 951.9 | 1,164.9 | 1,441.0 |
| 2.2 கடன் கரைப்பு நிதியங்கள் .. | 614.1 | 696.2 | 846.9 | 1,042.6 | 1.257.8 | 1,483.5 |
| 2.3 திணைக்கள ஏனைய அலுவலக நிதிகள் | 150.8 | 156.2 | 163.2 | 165.2 | 166.8 | 149.9 |
| 2.4 ஊழியர் சேமநிதி ... ... | 713.5 | 811.4 | 954 4 | 1,159.6 | 1,356.4 | 1,555.0 |
| 2.5 ஏனைய சேமநிதிகள் ... | 423.2 | 469.3 | 513.1 | 572.5 | 601.9 | 627.7 |
| 2.6 காப்புறுதிக் கூட்டுத்தாபனம் ... | 276.9 | 322.4 | 383.1 | 452.1 | 551.9 | 658.8 |
| 2.7 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் ... | 139.0 | 149.8 | 145.5 | 136.2 | 124.8 | 118.5 |
| 2.8 ஏனைய அரசாங்கக் கூட்டுத்தாபனங்கள்... | 2.9 | 2.2 | 2.2 | 2.2 | 2.2 | 2.2 |
| 2.9 ஏனையவை (இ) .. ... | 79.8 | 79 8 | 82.7 | 85.1 | 86.6 | 84.7 |
| **3. மொத்தம்** ... ... .. | **3,409.1** | **3,924.9** | **4,511.9** | **5,103.4** | **5,812.2** | **6,590.5** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) ரூபாக் கடன்களை மட்டும் குறிக்கும்,

(ஆ) அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கி, இலங்கைச் சேமிப்பு வங்கி, சேமிப்புச் சான்றிதழ்கள் நிதியம் ஆகியவற்றின் சொத்துக்களையும் பொறுப்புக்களையும், 1972 – எப்பிறல் 1 தொடக்கம் தேசிய சேமிப்பு வங்கி கையேற்றுள்ளது.

(இ) கூட்டுறவு வங்கிகள், ஏனைய கூட்டு நிலையங்கள், களரிகள், நிறுவனங்கள் தனியார் ஆகியவற்றை உள்ளடக்கும்,

1974 இறுதியில் பொதுமக்கள் வசமுள்ள ரூபாப் பிணைகளின் மொத்தத் தொகை ரூ. 6,590 இலட்சமாக விளங்கி மீளப்பார்வையிடும் நிதியாண்டில் ரூ. 7,770 இலட்சம் (அல்லது 13 சதவீதம்) அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இத்தகைய அதிகரிப்பு வங்கித் துறையின் ரூ. 290 இலட்சம் வீழ்ச்சியினால் ஓரளவிற்குக் குறைக்கப்பட்டு வங்கியல்லாத் துறை உடைமைகளின் ரூ. 8,080 இலட்சம் கொண்ட உயர்வினால் ஏற்பட்டது.

வங்கியல்லாத்துறை உடைமைகளின் அதிகரிப்பிற்கு ரூ 2,760 இலட்சத்தால் தேசிய சேமிப்பு வங்கியினதும், ரூ. 2,360 இலட்சத்தால் கடன்கரைப்பு நிதியங்களினதும், ரூ. 1,990 இலட்சத்தால் ஊழியர் சேமநிதியினதும் ரூ. 260 இலட்சத்தால் ஏனைய சேம நிதிகளினதும் ரூ. 1,070 இலட்சத்தால் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினதும் உடைமைகள் அதிகரித்தமையே காரணமாகும். மறுபுறம் திணைக்கள, ஏனைய அரசாங்க நிதி உடைமைகளும், காப்புறுதிக் கூட்டுநிலைய உடைமைகளும் முறையே, ரூ. 170 இலட்சத்தாலும், ரூ. 60 இலட்சத்தாலும் குறைவுற்றன. வங்கித் துறையின் உடைமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி மத்திய வங்கி உடைமைகளிலும், வர்த்தக வங்கி உடைமைகளிலும் ஏற்பட்ட முறையே ரூ. 90 இலட்சம், ரூ. 190 இலட்சம் கொண்ட வீழ்ச்சிகளினால் ஏற்பட்டதாகும். இவ்வீழ்ச்சி இவ்வங்கிகளினால் வைத்திருக்கப்பட்ட முதிர்ச்சியடைந்த இருப்புக்களின் மீளக் கொடுப்பனவுகளின் விளைவாகவே ஏற்பட்டது.

ஊழியர் சேமநிதியும், கடன்கரைப்பு நிதியமும் தேசிய சேமிப்பு வங்கியும் வெளிநிற்கும் ரூபாப் பிணைகளின் முக்கிய பங்குகளை வைத்திருந்தன. கடந்த ஒவ்வொரு ஆறு நிதியாண்டுகளின் இறுதியில், ஊழியர் சேமநிதியமே பிணைகளின் மிகக்கூடிய தொகையை வைத்திருந்தது. 1974 திசெம்பர் இறுதியில் இதன் உடைமைகளின் பங்கு ரூ. 15,560 இலட்சம் (அல்லது வெளிநிற்கும் மொத்த ரூபாப் பிணைகளில் 24 சதவீதம்) ஆகும். 1974 திசெம்பர் இறுதியில் கடன் கரைப்பு நிதியங்களும், தேசிய சேமிப்பு வங்கியும் முறையே ரூ. 1,484 இலட்சம் (அல்லது 23 சதவீதம்) ரூ. 1,441 இலட்சம் (அல்லது 22 சதவீதம்) கொண்ட ரூபாப் பிணைகளை வைத்திருந்தன.

**திறைசேரி உண்டியல்**

1974, திசெம்பர் இறுதியில் வழங்கப்பட்டதும், வெளிநின்றதுமான திறைசேரி உண்டியல்களின் தொகை சென்ற ஆண்டின் ரூ. 22,500 இலட்சம் கொண்ட அதே அளவில் இருந்தது. 1972 யூலை 21இல் தேசிய அரசுப் பேரவையின் தீர்மானத்தின் பேரில் ரூ. 25,500 இலட்சமாக உயர்த்தப்பட்ட திறைசேரி உண்டியல்களின் அங்கீகரிக்கப்பட்ட அளவானது ஆய்வுக்குரிய இவ்வாண்டில் மாற்றமுறாது விளங்கியது.

1974 நிதியாண்டுக் காலப்பகுதியில் வெளியிடப்பட்ட திறைசேரி உண்டியல் களின் விபரங்களை பின்னிணைப்பு IIஇன் அட்டவணை 42 தருகின்றது. அட்டவணை 11 (எ) 21, 1974இன் இறுதியில் திறைசேரி உண்டியல்களின் உடைமைபற்றிய ஒரு பகுப்பாய்வை கடந்த ஐந்து நிதியாண்டுகளின் புள்ளி விபரங்களுடன் தருகின்றது.

**அட்டவணை II (எ) 21**

**இறைசேரி உண்டியல்களின் உடைமைகள் — 1968/69 — 1974 நிதியாண்டுகளின் முடிவிலுள்ளபடி**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| உடைமையாளர்கள் | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72 | 1972 | 1974 (தற்காலிகம்) |
|---|---|---|---|---|---|---|
| **1. வங்கித்துறை** | **1,691.4** | **1,880.3** | **1,969.6** | **2,264.7** | **2,152.5** | **2,127.6** |
| 1.1 மத்திய வங்கி | 1,637.3 | 1,833.8 | 1,670.5 | 1,890.8 | 1,984.6 | 2,067.5 |
| 1.2 வர்த்தக வங்கிகள் | 54.1 | 46.5 | 299.1 | 373.9 | 167.9 | 60.1 |
| **2. வங்கியல்லாத்துறை ...** | **58.6** | **69.7** | **55.4** | **60.3** | **97.5** | **122.4** |
| 2.1 கடன்கரைப்பு நிதிகள் ... | 41.4 | 55.3 | 40.8 | — | — | — |
| 2.2 ஊழியர் சேமநிதி ... | 0.3 | 0.3 | 0.3 | 0.3 | 0.5 | 0.5 |
| 2.3 ஏனைய சேமநிதிகள் ... | ... | ... | 0.8 | 1.0 | 1.1 | 1.3 |
| 2.4 சேமிப்பு நிறுவனங்கள் ... | 1.3 | 2.4 | 2.0 | — | — | — |
| 2.5 காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் .. ... | 11.2 | 8.9 | 11.4 | 8.6 | 4.4 | 3.1 |
| 2.6 கட்டாய சேமிப்புகள் ... | — | — | — | 50.0 | 91.2 | 117.2 |
| 2.7 ஏனையவை ... ... | 4.5 | 2.8 | 0.2 | 0.4 | 0.3 | 0.3 |
| **3. மொத்தம் ... ...** | **1,750.0** | **1,950.0** | **2,025.0** | **2,325.0** | **2,250.0** | **2,250.0** |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

1974இல் திறைசேரி உண்டியல்களின் மொத்த உடைமைகளில் 95 சதவீதத்தை வங்கித்துறை வைத்திருந்தது. இவற்றில் மத்திய வங்கியின் பங்கு 88 சதவீதமாயும், ஏனைய வர்த்தக வங்கிகளின் பங்கு 3 சதவீதமாயும் இருந்தது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளிநிற்கும் திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை மாற்றமுறாதிருந்தபோதும், மத்திய வங்கி உடைமைகள் ரூ. 83 இலட்சத்தால் (4 சதவீதத்தால்) அதிகரிக்க, வர்த்தக வங்கி உடைமைகள் ரூ. 108 இலட்சத்தால் (64 சதவீதத்தால்) வீழ்ச்சியுற்றன. கடந்த காலங்களைப்போன்று வங்கித் துறையிலேயே சிறப்பாக மத்திய வங்கியிலேயே திறைசேரி உண்டியற் சந்தை தொடர்ந்தும் தங்கியுள்ளது.

வங்கியல்லாத்துறை தனது திறைசேரி உண்டியல் உடைமைகளை ரூ. 250 இலட்சத்தால் அதிகரித்துள்ளது. இதற்கு 1974இல் கட்டாய சேமிப்புப் பணத்தினை திறைசேரி உண்டியல்களில் முதலீடுசெய்தமையே முற்றிலும் காரணமாகும். மீளாய்வுக்குரிய ஆண்டின் இறுதிப்பகுதியில் சேமிப்பு நிறுவனங்களும், கடன்கரைப்பு நிதியங்களும் திறைசேரி உண்டியல் உடைமைகளை வைத்திருக்கவில்லை.

திறைசேரி உண்டியல் வீதங்கள் எதுவித மாற்றமுமின்றி ஆண்டு முழுவதும் 5 சதவீதமாகவே விளங்கின. மத்திய வங்கி வசமுள்ள திறைசேரி உண்டியல்களின் மீது வழங்கப்படும் வட்டி வீதமும் எதுவித மாற்றமுமின்றி ஆண்டொன்றிற்கு 6.24 சதவீதமாக விளங்கியது.

### வரி ஒதுக்குச் சான்றிதழ்கள்

ரூ. 6,000 பெறுமதியான அங்கீகரிக்கப்பட்ட வெளியீட்டுத் தொகையில், 1974, திசெம்பர் வரை ரூ. 5,870 இலட்சம் பெறுமதியான வரி ஒதுக்குச் சான்றிதழ்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. அத்திகதியன்று, கையளிக்கப் படாத வரி ஒதுக்குச் சான்றிதழ்களின் தொகை ரூ. 680 இலட்சமாகும். சென்ற நிதியாண்டின் இறுதியில் கையளிக்கப்படாத வரி ஒதுக்குச் சான்றிதழ் களின் தொகை ரூ. 660 இலட்சமாகும். ஆகவே, 1973ஆம் நிதியாண்டின் ரூ. 130 இலட்சம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வகையான படுகடனின் ரூ. 20 இலட்சம் கொண்ட அதிகரிப்பு ஏற்பட்டது.

வரி ஒதுக்குச் சான்றிதழ்களுக்கு வழங்கப்பட்ட ஆண்டொன்றிற்கு 3 சதவீத வட்டி வீதமானது, ஆண்டு முழுவதும் எதுவித மாற்றமுமின்றியிருந்தது.

### மத்திய வங்கி முற்பணங்கள்

மீளாய்வுக்குரிய நிதியாண்டில், நாணயத் திருத்தச் சட்டம் பகுதி 89இன் கீழ் மத்திய வங்கியினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் 1973ஆம் நிதியாண்டின் ரூ. 370 இலட்சத்திற்கு மாறாக ரூ. 420 இலட்சத்தால் அதிகரித்தன. பன்னாட்டு நாணய நிதிக்கு இலங்கை செலுத்தவேண்டிய அனுமதிப் பங்குக் கட்டணமான ரூ. 27 இலட்சம் கொண்ட சிறப்புக் கடனையும், மத்திய வங்கி முற்பணங்கள் உள்ளடக்கியுள்ளன.

அரசாங்கத்திற்கு மத்திய வங்கி அளித்த முற்பணங்கள் 1972ஆம் நிதியாண்டிறுதியில் ரூ. 4,560 இலட்சமாக விளங்கியமையுடன் ஒப்பிடுகையில் 1974 திசெம்பர் இறுதியில் ரூ. 4,980 இலட்சமாக அமைந்தன. 1974, நிதியாண்டின் இறுதியில், பன்னாட்டு நிதி அமைப்புக்களுக்கு இலங்கையின் உறுப்புரிமைக் கட்டணங்களாக மத்திய வங்கி வழங்கிய சிறப்புக் கடன்களின் மொத்தத் தொகை ரூ. 980 இலட்சமாக விளங்கியது.

**வெளிநாட்டுப் படுகடன்**

1974ஆம் நிதியாண்டின் இறுதியில் வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் மொத்தக் கூட்டுத் தொகை[1] ரூ. 29740 இலட்சமாக விளங்கியது. மொத்த வெளிநாட்டுப்படுகடன் 1973ஆம் ஆண்டின் ரூ. 4,030 இலட்சம்கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1974ஆம் ஆண்டில் ரூ. 1780 இலட்சத்தால்[2] அதிகரித்தது.

இவ்வாண்டில் பயன்படுத்தப்பட்ட வெளிநாட்டுக் கடன்களின் உண்மையான தொகை ரூ. 3,880 இலட்சமாகும்; இதில் ரூ. 800 இலட்சம் (அல்லது 21 சதவீதம்) செயற்றிட்டக்கடன்களாகவும், ரூ. 3080 இலட்சம் (அல்லது 79 சதவீதம்) செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்களாகவுமிருந்தன. சென்ற நிதியாண்டில் பயன்படுத்தப்பட்ட செயற்றிட்டக்கடன்கள், செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள், முறையே ரூ. 1530 இலட்சமாகவும் (அல்லது 44 சதவீதம்), ரூ. 1940 இலட்சமாகவும் (அல்லது 56 சதவீதம்) விளங்கின. 1973ஆம் ஆண்டில் நிலவிய சூழ்நிலைக்கு மாருக மீளப்பார்வையிடும் நிதியாண்டில் மிகக் குறைந் தளவிற்குச் செயற்றிட்டக் கடன்களைப் பயன்படுத்தியிருக்கையில் செயற் றிட்டமல்லா (பண்டக் கடன்களின் பயன்பாட்டில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டது என்பது அவதானிக்கத்தக்கது.

வெளிநாட்டு நிதி தொடர்ந்தும் வரவு செலவுத் திட்ட நிதியின் முக்கிய வளமாக விளங்கியது. ஆயினும், சென்ற ஆண்டைப் போன்று வெளிநாட்டு நிதியின் உண்மையான பெறுகைகள் 1975, வரவு செலவுத் திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட தொகையிலும் (ரூ. 1520 இலட்சம்) பார்க்க மிகக் குறைந்து விளங்குகின்றன. எதிர்பார்க்கப்பட்ட தொகையிலும் பார்க்கக் குறைந்தளவிற்கு, செயற்றிட்ட, செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்களைப் பயன்படுத்தியமையே காரணமாகும்.

1973ஆம் ஆண்டை மட்டும் தவிர்த்து கடந்த ஒன்பது ஆண்டுகளாக வெளி நாட்டுதவியின் உண்மைப் பெறுகைகள் குறிப்பாக செயற்றிட்ட உதவி எதிர்பார்க்கப்பட்ட தொகையிலும் பார்க்க நிலையாகக் குறைவுற்றிருந்தன. உள்நாட்டுக் காரணிகள் அதாவது உண்மைப் பயன்பாட்டில் ஏற்படும் தாமதம் வெளிநாட்டுக் காரணிகள் அதாவது கொடை வழங்குநர் வழங்குவதில் ஏற்பட்ட தாமதம் இந்நிலைக்குக் காரணமாயிருந்தது. செயற்றிட்ட உதவியில் ஏற்படும் வீழ்ச்சியானது, இவ்வாண்டு அரசாங்க மூலதனச் செலவை நேரடியாகக் குறைப்பதுடன் இச்செயற்றிட்டத்துடன் தொடர்புடைய மூலதனத்தின் உள்நாட்டுச் செலவை மேலும் குறைப்பதற்கு மறைமுகக் காரணமாகவும் அமையலாம், குறைந்த அளவில் வழங்கப்படும் பண்ட உதவியும் முதலீட்டிற்குத் தேவைப்படும் பொருட்களில் பாதகமான விளைவை ஏற்படுத்துவதனுல் அரசாங்க தனியார் ஆகிய இருதுறைகளிலும் முதலீட்டு மட்டத்தைப் பாதிக்

---

1. திருப்பிக் கொடுப்பனவுகள் நீங்கலாக. ஆனுல் ஸ்ரேலிங் கடனுக்குரிய கடன் கரைப்பு நிதியத்திற்கான உதவு தொகைகளைக் கழிக்குமுன்.

2. 1974ஆம் ஆண்டின்போது கடனுகப்பெற்ற மொத்தத் தொகை வெளிநிற்கும் படுகடன் பொறுப்பை ரூ. 2170 இலட்சத்தால் அதிகரித்திருக்கும். ஆயினும், ஒப்பமை விகித மாற்றங்கன் காரணமாக வெளிநிற்கும் பொறுப்பை மீளமதிபபீடு செய்தமை (இலங்கை ரூபா நியதிகளில் கணிக்கப்பட்டுள்ளது வெளிநிற்கும் கடனில் ரூ. 1780 இலட்சம் கொண்ட அதிகரிப்பை மட்டுமே ஏற்படுத்தியுள்ளது. மறுபுறம், 1973ஆம் ஆண்டில் ரூ. 4030 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்பு, இவ்வாண்டில் ஏற்பட்ட ஒப்புமை விகித மாற்றங்கள் காரணமாக இலங்கை ரூபா நியதிகளில் ரூ. 2000 இலட்சம் கொண்ட படுகடனின் அதிகரிப்பை உள்ளடக்கியது. பன்னுட்டு, நாணய மீள இணைப்புக் காரணமாக ஒட்புமை விகித மாற்றங்கள் காரணமாகவும் ஏற்படும் மாற்றங்களுக்கு இடம்விட்டு நோக்கின் 1974, 1973ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டுக் கடனில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் முறையே ரூ. 2170 இலட்சம், ரூ. 2030 இலட்சம் ஆகும்.

கலாம். இந்நிலை அரசாங்கத்தால் முதலீட்டிற்கென தொடக்கத்திலேயே, மதிப்பிடப்பட்ட வரவுசெலவுத் திட்டத் தொடர்புகள் தொடர்பாசு கீழ்ச் செலவின் அளவில் நேரடித் தாக்கத்தை விளைவிக்கும். முந்திய ஆண்டறிக்கைகளில் மீண்டும் வலியுறுத்தப்பட்டவாறு வெளிநாட்டு நிதியிலிருந்து கிடைக்கத்தக்க பெறுகைகளை முற்கூட்டியே மிகச்சரியாக எடுத்துரைப்பது அரசாங்க வரவு செலவுத்திட்டத் தேவைகளை நிறைவு செய்வதோடல்லாது, அரசாங்கத்துறை முதலீடு செய்ய வேண்டிய தொகை எவ்வளவாயிருக்க வேண்டும் என்று திட்டமிடுவதற்கும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1974இன் வெளிநாட்டுக் கடன்களின் திருப்பிக் கொடுப்பனவான ரூ. 1710 இலட்சத்தில் ரூ. 790 இலட்சம், செயற்றிட்டக் கடன்களாகவும் ரூ. 920 இலட்சம் செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்களாகவும் விளங்கின. இத்திருப்பிக் கொடுப்பனவுகளை நீக்கின், மொத்த வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1780 இலட்சத்தால் அதிகரித்தது.[1] ஸ்டேர்லிங் கடன் கரைப்பு நிதியத்தில் ஏற்பட்ட ரூ. 70 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் கணக்கிலெடுப்பின், தேறிய பொறுப்பின் அதிகரிப்பு ரூ. 1710 இலட்சமாகும்.

ஸ்டேர்லிங், செயற்றிட்ட, செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள் காரணமாக ஏற்பட்ட மீள எடுப்பனவுகள், மீளக் கொடுப்பனவுகள் கடன் பொறுப்புக்கள் ஆகியவற்றின் விபரங்களைக் கீழ்வரும் அட்டவணை II (எ) 22 தருகின்றது.

**ஸ்டேர்லிங் கடன்கள்:**

1974ஆம் ஆண்டிறுதியில் ஸ்டேர்லிங் கடன்களால் ஏற்பட்ட மொத்தப் படுகடன் ரூ. 780 இலட்சமாக அமைந்து ஆய்வுக்கெடுக்கப்பட்ட இக்காலப் பகுதியின்போது கடன்பாடுகளோ, திருப்பிக் கொடுப்பனவுகளோ இடம் பெறுததினல் 1973இன் இறுதி அதே மட்டத்திலிருந்து ஆயினும் கடன்கரைப்பு நிதியங்களிலேற்பட்ட ரூ. 70 இலட்சம் கொண்ட அதிகரிப்பினல் 1974இன் இறுதியில் வெளிநிற்கும் தேறிய கடன் ரூ. 260 இலட்சமாக விளங்கியது.

**செயற்றிட்டக் கடன்கள்:**

மீளாய்வுக்குரிய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட செயற்றிட்டக் கடன்கள் ரூ. 800 இலட்சமாகவும், இக்கடன்களின் மீளக்கொடுப்பனவுகள் ரூ. 790 இலட்சமாகவும் விளங்கின. இதன்விளைவாக செயற்றிட்டக் கடன்களின் கீழ் பெற்ற கடன்கள் காரணமாகப் பொறுப்புக்களில் ஏற்பட்ட தேறிய அதிகரிப்பு ரூ. 10 இலட்சமாக விளங்கியது. ஆயினும், உலக நாணயங்களின் ஒப்புமை விகித மாற்றங்கள் காரணமாக இலங்கை ரூபாக்களின் நியதிகளின்படி கடன் பொறுப்பில் ஏற்பட்ட ரூ. 80 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் கணக்கிலெடுப்பின் தேறிய கடன் பொறுப்பு ரூ. 70 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றது. சென்ற நிதியாண்டின்போது, செயற்றிட்டக் கடன்கள் காரணமாக ரூ. 1530 இலட்சம் கொண்ட கிடைப்பனவுகளும் ரூ. 620 இலட்சம் கொண்ட மீளக்கொடுப்பனவும் ஏற்பட்டன. உலக நாணய மீளிணைப்பின் காரணமாக ஏற்பட்ட ரூ. 600 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் கணக்கிலெடுப்பின் செயற்றிட்டக் கடன்களின் தேறிய பொறுப்பு ரூ. 1510 இலட்சமாகும்.

---

1. செலாவணி ஒப்புமை விகித மாற்றங்கள் காரணமாகத் தோன்றும் இலங்கை ரூபாக்களின்படியான ரூ. 390 இலட்சம் கொண்ட கடன் பொறுப்புக்களின் வீழ்ச்சியை நீக்கி.

## அட்டவணை II (எ) 22

## வெளிநாட்டுக் கடன்கள்

பத்து இலட்சம் ரூபாய்களில்

| வகைகளும் / மூலங்களும் | 1974 இல் எடுப்பன வுகள் | 1974 இல் திருப்பிக் கொ டுப்பனவுகள் | 1974 இல் அதிகரிப்பு | 1974 திசெம்பரில் உள்ளபடியான பொறுப்பு |
|---|---|---|---|---|
| 1. ஸ்ரேர்லிங் கடன்கள் | — | — | — | 78.0(அ) |
| 2. செயற்றிட்டக் கடன்கள் | 80.2 | 78.8 | - 7.4 | 848.6 |
| 2.01 ப. பு. அ. வ. | 8.5 | 12.8 | - 4.3 | 119.5 |
| 2.02 சேர்மன் சனநாயகக் குடியரசு | 2.1 | 13.9 | - 11.8 | 75.8 |
| 2.03 ஐ. சோ. ச. கு. | 0.6 | 11.1 | -10.5 | 53.9 |
| 2.04 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | — | 10.0 | -10.0 | 90.7 |
| 2.05 கனடா (இ) | — | 6.2 | - 6.2 | 31.7 |
| 2.06 மக்கள் சீனக் குடியரசு | — | 19.4 | -19.4 | 184.8 |
| 2.07 ஐ. அ. நா. (ஈ) | 2.2 | 1.7 | 0.5 | 23.5 |
| 2.08 தென்மாக்கு | 8.1 | — | 8.1 | 39.5 |
| 2.09 பன்னாட்டு அபிவிருத்திச் சபை | 41.3 | — | 41.3 | 135.8 |
| 2.10 ஐக்கிய இராச்சியம் | - 0.2 | 2.6 | - 2.8 | 16.8 |
| 2.11 இந்தியா | — | 0.3 | - 0.3 | 3.7 |
| 2.12 போலாந்து மக்கட் குடியரசு | — | 0.3 | - 0.3 | ... |
| 2.13 யூகோசிலாவிய மக்கட் கூட்டாட்சிக் குடியரசு | — | 0.3 | - 0.3 | 0.5 |
| 2.14 ஆசிய அபிவிருத்தி வங்கி | 17.6 | 0.2 | 17.4 | 72.6 |
| உலக நாணய மீள இணைப்பினால் கடன் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு | | | - 8.7 | |
| 3. செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள் | 308.2 | 92.5 | 185.8 | 2,047.1 |
| 3.01 ஐ. அ. நா. (உ) | 35.6 | 22.3 | 13.3 | 670.3 |
| 3.02 ஐக்கிய இராச்சியம் | 3.9 | 10.0 | - 6.2 | 281.4 |
| 3.03 சேர்மன் கூட்டாட்சிக் குடியரசு (ஆ) | 75.6 | 11.4 | 64.2 | 315.4 |
| 3.04 யப்பான் | 50.7 | 10.2 | 40.5 | 288.4 |
| 3.05 பிரான்சு | 29.2 | 16.6 | 12.6 | 116.2 |
| 3.06 இந்தியா | 19.9 | 2.2 | 7.7 | 79.9 |
| 3.07 கனடா | 4.6 | — | 4.6 | 89.6 |
| 3.08 மக்கட் சீனக் குடியரசு | 85.4 | 7.5 | 78.0 | 193.1 |
| 3.09 இத்தாலி | — | 1.9 | - 1.9 | 7.8 |
| 3.10 ஐ. சோ. ச. கு. | 2.6 | 0.4 | - 2.2 | 4.4 |
| 3.11 அங்கேரி | 0.7 | — | - 0.7 | 0.7 |
| உலக நாணய மீள இணைப்பினால் கடன் பொறுப்புக்களிலேற்பட்ட அதிகரிப்பு | | | -29.9 | |
| 4. கூட்டு மொத்தம் | 388.4 | 171.3 | 178.4 | 2,973.7 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) இத்தொகையில் ரூ. 522 இலட்சம், ஸ்ரேலிங்கடனுக்குரியகடன்கரைப்புநிதியங்களால்உள்ளடக்கப்படுகின்றன.

(ஆ) 'கிறடிற்றன்ஸ்டேரல்ற் பேர்விடரேபு கடன்களை' உள்ளடக்கும்.

(இ) ஏற்றுமதிக் கொடுகடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் கொடுகடன்களை உள்ளடக்கும்.

(ஈ) (I) பன்னாட்டுக் கூட்டுறவு நிருவாகம், (II) அபிவிருத்திக் கடன் நிதியம் ஆகியனவற்றிலிருந்து பெற்ற கடன்களையும் உள்ளடக்குகிறது.

(உ) பன்னாட்டு அபிவிருத்திக்கான முகவரிடமிருந்து பெறப்படும் கடன்களையும், பன்னாட்டுக் கூட்டுறவு நிருவாகத்திடமிருந்துபெறப்படும் கடன்களையும், பி. எல். 480 கடன்களையும் உள்ளடக்கும்.

இவ்வாண்டின்போது செயற்றிட்ட உதவியின் முக்கிய உதவுநர்களான பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கி, பன்னாட்டுப் புனருத்தாரன அபிவிருத்தி வங்கி, டென்மார்க் என்பன முறையே ரூ. 410 இலட்சம், ரூ. 180 இலட்சம், ரூ. 90 இலட்சம், ரூ. 80 இலட்சம் ஆகியத் தொகைகளை வழங்கின பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பிடமிருந்தும், பன்னாட்டுப் புனருத்தரான அபிவிருத்தியிடமிருந்தும் பெற்ற உதவி முக்கியமாக மகாவலி செயற்றிட்டத்திற்காகவும், அதே வேளையில் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெற்ற உதவி உடவளவைத் திட்டத்திற்காகவும், உலகத்துடன் தொடர்பு கொள்ளும் துணைக்கோள் நிலநிலைய செயற்றிட்டத்திற்காகவும் பயன்படுத்தப்பட்டது. டென்மாக்கிலிருந்து பெற்ற உதவி முக்கியமாகப் பாற்பண்ணை அபிவிருத்திக்காகப் பயன்படுத்தப்பட்டது.

பயன்படுத்தப்பட்ட செயற்றிட்டக் கடன்களினதும் பொறுப்புக்களின் வெளிநின்ற தொகை ரூ. 8490 இலட்சமாக அமைந்து மொத்த வெளிநாட்டுப் படுகடனில் ரூ. 28 சதவீதமாக விளங்கியது முன்னைய ஆண்டிறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 8560 இலட்சமாகும்.

**செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள் :**

1974ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட பண்ட உதவியின் ரூ. 3080 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டில் பயன்படுத்தப்பட்ட தொகை 1940 இலட்சமாக விளங்கியது. இவ்வாண்டின்போதான மீளக் கொடுப்பனவுகள் ரூ. 920 இலட்சமாக விளங்கிக் கடன் பொறுப்பில் ரூ. 2160 இலட்சம் கொண்ட தேறிய அதிகரிப்பை விளைவித்தது. ஆயினும், உலக நாணயங்களின் ஒப்புமை விகித மாற்றங்களினால் இலங்கை ரூபாக்களின் படியான கடன் பொறுப்பில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 1860 இலட்சம் மட்டுமேயாகும்.

பண்ட உதவித்திட்டத்தின் முக்கிய உதவுநர்களாக மக்கள் சீனக்குடியரசு (ரூ. 850 இலட்சம்), ஜப்பான் (ரூ. 510 இலட்சம்), ஐக்கிய அமெரிக்க நாடுகள் (ரூ. 360 இலட்சம்), பிரான்ஸ் (ரூ. 290 இலட்சம்), இந்தியா (ரூ. 200 இலட்சம்) ஆகிய நாடுகள் விளங்கின. அரிசி, கோதுமையும் கோதுமை மாவும், உரம், கைத்தொழில் மூலப்பொருட்கள், வேளாண்மை இயந்திரங்கள், மோட்டார் வாகனங்களும் உதிரிப்பாகங்களும், இரசாயனப் பொருட்கள் என்பன இவ்வுதவியின் கீழ்ப் பெறப்பட்ட முக்கிய இறக்குமதிகளாகும்.

செயற்றிட்டமல்லா (பண்ட)க் கடன்கள் காரணமாக ஏற்பட்ட பொறுப்பு 1974ஆம் நிதியாண்டிறுதியில் ரூ. 20470 இலட்சமாக அமைந்தது. ஒப்புநோக்குகையில் சென்ற நிதியாண்டிறுதியில் இத்தொகை ரூ. 18610 இலட்சமாக விளங்கியது.

1974ஆம் ஆண்டில் வெளிநாட்டுதவி இணைக்கிளை நிதிக்கு ரூ 5050 இலட்சம் வரவைக்கப்பட்டும், வரவு செலவுத்திட்டத் தேவைகளுக்காக ரூ. 5040 இலட்சம் எடுப்பனவு செய்யப்பட்டுமிருந்தது. ஒப்புநோக்குகையில் முன்னைய நிதியாண்டின் போது வரவு வைக்கப்பட்டதும், எடுப்பனவு செய்யப்பட்டதுமான தொகை ரூ. 2460 இலட்சமாகும். செயற்றிட்டமல்லா (பண்ட) உதவியின்கீழ் இறக்குமதிகளின் பேரில் பெறப்பட்ட ரூபா நிதியங்கள் பற்றியும் இவை வரவு செலவுத் திட்டத் தேவைகளுக்கு எங்ஙனம் பயன்படுத்தப்பட்டன என்பது பற்றியுமான விபரங்களை அட்டவணை 43 பின்னிணைப்புத் தருகின்றது.

**கடன்கரைப்பு நிதியங்கள்**[1]

ஸ்டேர்லிங் கடன்களுக்குரிய கடன்கரைப்பு நிதியத்தினதும், ரூபாக் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியத்தினதும் சந்தைப் பெறுமதிகள் முறையே ரூ. 520 இலட்சமும், ரூ. 13,010 இலட்சமுமாக விளங்கின. ஒப்புநோக்குகையில் முன்னைய நிதியாண்டிறுதியில் முறையே ரூ. 450 இலட்சமாயும், ரூ. 10,540 இலட்சமாயும் விளங்கின.

மீளப்பார்வையிடும் ஆண்டில் ஸ்டேர்லிங் கடனுக்குரிய கடன்கரைப்பு நிதியத்தின் பெறுமதி ரூ. 70 இலட்சத்தால் அதிகரித்தது. புதிய உதவுதொகைகளின் (ரூ. 10 இலட்சம்) முதலீடு, முன்னைய முதலீடுகளிலிருந்து பெற்ற வட்டி வருவாய் (ரூ. 20 இலட்சம்) முதலீடுகளின் சந்தைப் பெறுமதி அதிகரிப்பு ரூ. 40 இலட்சம்) ஆகியவற்றின் விளைவாலுமே இவ்வதிகரிப்பு ஏற்பட்டது.

ரூபாக் கடன்களுக்குரிய கடன்கரைப்பு நிதியங்களின் சந்தைப்பெறுமதி ரூ. 2470 இலட்சத்தால் அதிகரித்தது. புதிய உதவுதொகைகளின் (ரூ. 2020 இலட்சம்) முதலீட்டினாலும், முந்திய முதலீடுகளிலிருந்து பெற்ற வட்டி வருவாயாலும் (ரூ, 970 இலட்சம்), முந்திய முதலீடுகளின் சந்தைப் பெறுமதி கூடியதாலுமே (ரூ. 20 இலட்சம்) இவ்வதிகரிப்பு ஏற்பட்டது. இவ்வதிகரிப்பானது கடன்களை மீளக்கொடுப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட தொகைகளினால் (ரூ, 540 இலட்சம்) ஓரளவிற்குக் குறைக்கப்பட்டது.

**வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன்**[2]

தற்காலிகத் தரவுகளின்படி, வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடனின்கீழ் அரசாங்கத் திணைக்களங்களுக்குரிய பொறுப்புக்கள் ரூ. 3660 இலட்சமாக விளங்கின. வெளிநிற்கும் மொத்தப்பொறுப்புக்களில், இலங்கை அரசாங்கப் புகையிரதத் திணைக்களமும், உணவுத் திணைக்களமும், அஞ்சல் தொலைபேசித் திணைக்களமும் துறைமுகக் குழுவும், சந்தைபடுத்தற் திணைக்களமும் முறையே ரூ. 1350 இலட்சத்திற்கும், 1090 இலட்சத்திற்கும் ரூ. 280 இலட்சத்திற்கும், ரூ. 910 இலட்சத்திற்கும், ரூ. 20 இலட்சத்திற்கும் வகைகூறின. முன்னைய நிதியாண்டினிறுதியில் ஏற்பட்ட பொறுப்புக்களுக்கு மேலாக ஆய்வுக்குரிய ஆண்டின்போது பொறுப்புக்கள் ரூ. 1720 இலட்சம் கொண்ட அதிகரிப்பைக் காட்டின. இறக்குமதித் தேவைகளுக்காக அரசாங்கத் திணைக்களங்கள் அதிகரித்த அளவிற்கு நிரம்பல் கொடுகடனை நாடுகின்றன என்பது அவதானிக்கத் தக்கதாயுள்ளது.

**9. அரசாங்கச் சார்புடைய நிறுவனங்களாற் பெறப்பட்ட கடன்பாடு:**

தேசிய வீடமைப்பு நிதியம்

மீளப்பார்வையிடும் ஆண்டில் தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன் வெளியீடுகளோ அன்றி மீளக்கொடுப்பனவுகளோ எதுவுமிருக்கவில்லை. 1974

---

1. 1972 செத்தெம்பர் 1 தொடக்கம் ரூபாக் கடன்களுக்கான கடன்கரைப்பு நிதியங்கள் தொழிற்பாடுகள் கூட்டு முதலீட்டு நிதி மூலம் இந்நிதியத்தின் தொழிற்பாடுகள் பற்றிய விபரங்கள் 1972ஆம் ஆண்டறிக்கை பக்கம் 155 இல் தரப்பட்டுள்ளன.

2. அரசாங்கத் திணைக்களங்களால் செய்யப்பட்ட இறக்குமதிகள் காரணமாக ஏற்பட்ட வெளிநாட்டு நிரம்பலர் கொடுகடன் "பொதுப்படுகடனில்" சேர்க்கப்படவில்லை.

நிதியாண்டிறுதியில் வெளியிடப்பட்டதும் வெளிநின்றதுமான தொகுதிக்கடன்களின் மொத்தத்தொகை ரூ. 710 இலட்சமாக விளங்கியது. இந்நிதியாண்டின் போது தொகுதிக்கடன்களின் அங்கீகரிக்கப்பட்ட வெளியீட்டெல்லையான ரூ. 2200 இலட்சமானது எதுவித மாற்றமுமின்றியிருந்தது. தேசிய வீடமைப்புத் தொகுதிக்கடன்களின் மீட்புக்காகத் தொடக்கப்பட்ட கடன்கரைப்பு நிதியங்களின் சந்தைப் பெறுமதி 1974 திசெம்பர் இறுதியில் ஏறக்குறைய ரூ. 270 இலட்சமாக விளங்கியது.

அரசஈட்டு வங்கி

மீளப்பார்வையிடும் ஆண்டில் ரூ. 50 இலட்சம் (1969/74இன் 3 சதவீத தொகுதிக்கடன்) ரூ. 70 இலட்சம் (1971/74 இன் 3 சதவீத தொகுதிக்கடன்) கொண்ட அரச ஈட்டு வங்கித் தொகுதிக்கடன் வெளியீடுகள் மீளக்கொடுக்கப்பட்டன. அதே வேளையில் அதே தொகைகளுக்கான இருபுதிய தொகுதிக்கடன்கள் 1984/86 இல் உயர்ந்த சதவீத வட்டியான ஆண்டொன்றிற்கு 9 சதவீதத்தில் வெளியிடப்பட்டன. வெளியிடப்பட்டதும் வெளிநின்றதுமான தொகுதிக் கடன் 1973இன் நிதியாண்டின் இறுதியில் இருந்த மட்டமாகிய ரூ. 320 இலட்சத்திலேயே 1974 இறுதியிலும் இருந்தது.

10. **வரவுசெலவுத்திட்டம் 1975**

1975, நிதியாண்டிற்கான வரவுசெலவுத்திட்டம் 1974 நவெம்பர் 6 இல் சமர்ப்பிக்கப்பட்டு 1974 திசெம்பர் 26 இல் தேசிய அரசுப் பேரவையினால் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

நிதியமைச்சர் தமது வரவுசெலவுத்திட்ட உரையில் இலங்கை 1973 இல் அனுபவித்த இன்னல்களைவிட, 1974 இல் அவை இன்னும் கூடியுள்ளதாக அவதானித்துள்ளார். உலக ரீதியான பண வீக்கமும் பன்னாட்டுப்பொருளாதார உறுதியின்மையும் இதற்குப் பெரிதும் காரணமாக இருந்ததுடன் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வுக்கும் காரணமாயின. இலங்கை மட்டும் இந்த இக்கட்டான நிலையில் இல்லையென்பதைக் குறிப்பிட்ட அதே வேளையில், மேற்கூறிய காரணிகளின் தாக்கத்தைச் சமாளிக்கும் வகையில் உள்நாட்டு முயற்சிகளும் வெற்றிகரமான முறையிற் குறிப்பாக, வேளாண்மையில் மேற்கொள்ளப்பட்டிருப்பதையும் வலியுறுத்தினர். உணவில் தன்னிறைவடையும் பொருட்டுத் தனது நிறைவான இயற்கை வளங்கள் எல்லாவற்றையும் ஒன்றுசேர்ப்பதான இலங்கையின் உறுதியானது தவறுது விடின், 1975 இல் வளர்ச்சி வீதம் 8 சதவீதமாக இருக்குமென அவர் எதிர்பார்த்தார்.

வரவுசெலவுத்திட்ட உரையில் உள்ள புதிய அரசிறை செலவின் எடுத்துரைப்புக்கள் வரவுசெலவுத்திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகளைக் குறிப்பிடத்தக்க வகையில் மாற்றியமைக்கவில்லை. வரவுசெலவுத்திட்ட எடுத்துரைப்புக்கள் பெரும்பாலும் அரசிறையைப் பெறும் வழிமுறையாக மட்டுமன்றி நேர் வரிகளைச் சீராக்கும் முயற்சியாகவும் நடைமுறையிலுள்ள சலுகைகள் ஊக்கங்கள் என்பவற்றின் திட்டங்களின் மீளாய்வாகவும், வீக்கத்திற்கெதிரான இடர் உதவி வழங்குவதாகவும் கடந்த 20 வருடங்களின் சமூக அபிவிருத்திகளிலிருந்து எழும் வரி அமைப்பில் ஏற்பட்ட தாக்கங்களைத் திருத்தும் முயற்சியாகவும் உள்ளது.

**வரவுசெலவுத் திட்டத்தின் பொதுவான நிலை**

1975 ஆம் நிதியாண்டின் பொதுவான வரவுசெலவுத்திட்ட நிலைமை அட்டவணை II (எ) 23 இல் தரப்பட்டுள்ளது.

## அட்டவணை II (எ) 23

## வரவுசெலவுத்திட்ட பொதுப்படையான நிலைமை 1975

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயங்கள் | வரவுசெலவுத் திட்டத்துக்கு முந்திய மதிப்பீடுகள் | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகள் |
|---|---|---|
| **1. மீண்டெழுஞ் செலவுகள்** ... ... | **4,770** | **4,862** |
| கழிவு: குறைச் செலவு (2 %) ... ... | 95 | 95[1] |
| | 4,675 | 4,767 |
| **2. மூலதனச் செலவு** ... .. | **2,571** | **2,571** |
| கழிவு: குறைச் செலவு (25 %) 2 ... .. | 497 | 497 |
| | 2,074 | 2,074 |
| **3. முற்பணக் கணக்கு** ... .. | **100** | **100** |
| **4. மொத்தச் செலவு** ... ... | **6,849** | **6,941** |
| **5. மொத்த அரசிறை** ... .. | **4,525** | **4,881** |
| **6. வரவு செலவுத்திட்டக் குறைவு** ... .. | **2,324** | **2,060** |
| கழிவு: கடன்கரைப்பு நிதியம் மூதலிய வற்றுக்கு உதவு தொகைகள் ... | 584 | 584 |
| **7. தேறிய பணக் குறை** ... ... | **1,740** | **1,476** |
| **8. வரவு செலவுத்திட்டக் குறைவை நிதியீட்டம் செய்தல்** | | |
| 8.1 வங்கியல்லா மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடுகள் ... ... | | 900 |
| 8.2 நிருவாகக் கடன்பாடுகள் ... ... | | 73[3] |
| 8.3 வெளிநாட்டு நிதி | | |
| 8. 3. 1. செயற்றிட்டக் கடன்களும் நன்கொடைகளும் ... | | 230 |
| 8. 3. 2. செயற்றிட்டமல்லா (பண்டக்) கடன்கள் ... ... | | 865 |
| | | 2068 |
| **9. தேறிய பணக் குறையை நிதியீட்டஞ் செய்தல்** | | |
| 9.1 வங்கியல்லா மூலங்களிலிருந்து பெற்ற உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு ... ... | | 657 |
| 9.2 நிருவாகக் கடன்பாடுகள் ... ... | | 73[3] |
| 9.3 வெளிநாட்டு நிதி | | |
| 9. 3. 1 செயற்றிட்டக் கடன்களும், நன்கொடைகளும் ... } 9. 3. 2 செயற்றிட்டமல்லா (பண்டக்) கடன்கள் .. } | | 754 |
| | | 1484 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1 வரவு செலவுத் திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகளில் இருந்தே குறைச் செலவு கணிக்கப்படுகிறது.

2 கடன் கரைப்பு நிதி செலுத்து தொகைகளும் பொதுப்படு கடனின் நேரடி மீளக் கொடுப்பனவுகளையும் நீக்கிய மூலதனச் செலவே குறைச் செலவு என கணிக்கப்படுகின்றது. வரவு செலவுத் திட்ட உரைக்கு முன்பு தேசியப் பேரவையில் ஒப்படைக்கப்பட்ட மாதிரி மதிப்பீடுகளில் தரப்பட்டுள்ள வருவாய், செலவு, குறை ஆகிய எண் தொகைகளை "வரவு செலவுத் திட்டத்துக்கு முந்திய மதிப்பீடுகள்" என்ற அடைப்புச் சோடு தருகின்றது. இது வரவு செலவுத் திட்டத்துக்கு முந்திய வீதங்களில் விதிக்கப்பட்ட வரிகளினும், ஏனைய பெறுகைகளினும் பெற்ற மொத்த வருவாயை எடுத்துக் காட்டுகிறது. வரவு செலவுத் திட்டத்துக்கு முந்திய செலவினங்களின் மதிப்பீட்டு எண் தொகைகள் 1975 ஆம் நிதி ஆண்டுக்கான அரசாங்கத்தின் நடைமுறைச் செலவுகளையும், மூலதனச் செலவுகளையும் கொண்டதாகும்.

அட்டவணையில் உள்ள அங்கீரிக்கப்பட்ட மதிப்பீடுகள் என்ற பத்தி நிரல் தேசிய அரசப் பேரவையினுல் அங்கீகரிக்கப்பட்ட அரசிறை, செலவு. நிதியீட்ட எடுத்துரைப்புக்கள் என்பவற்றைத் தருகின்றது.

வரவுசெலவுத்திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகள் ரூ 68,490 இலட்சங் கொண்ட மொத்தச் செலவை (குறைச் செலவு நீங்கலாக) ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் ரூ. 46,750 இலட்சம் மீண்டெழும் செலவிற்கும், ரூ. 20,740 இலட்சம் மூலதனச் செலவிற்கும், ரூ. 1,000 இலட்சம் தேறிய முற்பணக் கொடுப்பனவிற்கும் ஆகும். எதிர்பார்க்கப்பட்ட அரசிறை ரூ. 45,250 இலட்சமாகும். மதிப்பிடப்பட்ட நடைமுறைக் கணக்கின் குறை ரூ. 2,500 இலட்சமாகவும், வரவுசெலவுத்திட்டத்தின் பொதுவான குறை ரூ. 23,240 இலட்சமாகவும் இருந்தது. கடன்தீர்ப்புக் கொடுப்பனவிற்கும் கடன் கரைப்பு நிதிக்கும் ரூ. 5,840 இலட்சம் ஒதுக்கப்பட்ட நிலையில் தேறிய பணக் குறை ரூ. 17,400 இலட்சமாகவிருந்தது.

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி மொத்தச் செலவு (குறைச் செலவு நீங்கலாக) ரூ. 69,410 இலட்சமாக எதிர்பார்க்கப்படுகிறது. ரூ. 920 இலட்சம் கொண்ட மீண்டெழும் செலவில் ஏற்பட்ட அதிகரிப்புக்குத் தேயிலை ஏற்று மதித் தீர்வைக் கழிவுத் திட்டத்தின் பேரிலான செலவில் ஏற்பட்ட (ரூ. 80 இலட்சம்) குறைவினுல் எதிரீடு செய்யப்பட்ட, உரத்தின் மீதான உதவு தொகையும் (ரூ. 700 இலட்சம்) 'லக்ஸ்பிரே' பால் உணவிற்கு வழங்கப்பட்ட (ரூ. 300 இலட்சம்) உதவுதொகையும் காரணமாகும். எதிர்பார்க்கப்படும் அரசிறை ரூ. 48,810 இலட்சமாகும். இதன் விளைவாக, மதிப்பிடப்பட்ட நடைமுறைக் கணக்கு மிகை ரூ. 140 இலட்சமும், வரவுசெலவுத்திட்டக் குறையும் தேறிய பணக் குறையும் முறையே ரூ. 20,600 இலட்சமும், ரூ. 14,760 இலட்சமுமாக எதிர்பார்க்கப்படுகின்றது.

அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் உள்ள பணக் குறையை வரவுசெலவுத் திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகளுடன் ஒப்பிடுகையில், ரூ 2,560 இலட்சம் கொண்ட குறைவிற்கு மீண்டெழும் வாக்குகளில் ஏற்பட்ட ரூ 920 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் அரசிறை வரவுகளில் ஏற்பட்ட ரூ. 3,560 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் காரணமாகும்.

அரசிறையில் எதிர்பார்க்கப்படும் ரூ. 3,560 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு வெளிநாட்டிலிருந்து பெறப்படும் உதவியான ரூ. 2,700 இலட்சமும் அதனுல் பெறப்படும் பெரும்பாலும் அதேயளவு தொகையான வெ. செ. உ. சா. வருமானமும் (ரூ. 1,730 இலட்சம்), இறக்குமதித் தீர்வைகள் (ரூ 520 இலட்சம்) வியாபார மொத்த விற்பனவு வரி (ரூ. 405 இலட்சம்) என்பவற்றின் விளைவாக அரசிறையிலேற்படும் மேலதிகச் சேகரிப்புகளே காரணமாகும். செலவு வரியிலும் வருமான வரியிலும் ஏற்பட்ட அதிகரித்த வீதங்களும் (ரூ 230 இலட்சம்) வரவுசெலவுத்திட்டத்திற்கு முந்திய மதிப்பீடுகளுக்கு மேலாக அரசாங்கக் கூட்டுத்தாபனங்களின் வரிகளில் எதிர்பார்க்கப்படும் ரூ. 680 இலட்சம் கொண்ட மேலதிகத் தொகையும் மிஞ்சியவற்றுக்கு வகை கூறும்.

தேறிய பணக் குறையை நிதியீட்டுவதற்கு ரூ. 7,540 இலட்சங்கொண்ட (செயற்றிட்ட, செயற்றிட்டமல்லா) வெளிநாட்டு நிதி பெறப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது. ரூபாக் கடன்களினுலும், நிருவாகக் கடன்பாடுகளினுலும் பெறப்படும் உள்நாட்டு வங்கியல்லாச் சந்தைக் கடன்பாடுகள் முறையே ரூ. 6,570 இலட்சமாகவும், ரூ. 730 இலட்சமாகவும் அமையுமென எதிர்பார்க்கப்படுகிறது. இம்மூன்று நிதியீட்ட மூலங்களும் முழுக் குறையையும் ஈடு செய்யு

மென்றும், எனவே, வங்கிக் கடன்பாடுகளைப் பெறுவதற்கான தேவை இருக்காது என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. 1975 இன் வரவுசெலவுத்திட்டம் நேரடிப் பண உதவிக்கும், மேலதிக உள்நாட்டு அரசிறைக்கும் வெளிநாட்டுக் கடன்பாடுகளையே பெரிதும் நம்பியிருக்க வேண்டுமென அவதானிக்கப்படுகிறது. எனவே, வெளிநாட்டு உதவி சென்மதி நிலுவையைப் பொறுத்து மட்டுமன்றி வரவுசெலவுத்திட்ட வகையிலும் ஒரு முக்கிய அம்சமாக அமைந்துவிட்டது.

**வரவுசெலவுத்திட்ட எடுத்துரைப்புக்கள்**

*(அ) 1975/76 மதிப்பீட்டாண்டு தொடக்கம் செயல்படுத்தப்படும் எடுத்துரைப்புக்கள் :-*

*(1)* வருமான உச்ச வரம்பு, கட்டாய சேமிப்பு, வருமான வரி வீதங்கள்:- தற்போதுள்ள பண வீக்கப் போக்கினால் கொள்வனவுச் சக்தி பெருமளவு பாதிக்கப்பட்டுள்ள நடுத்தர வருமான முடையோர்க்கு நிவாரணம் அளிக்கும் வகையில் வருமான உச்ச வரம்பிற்குக் குறைந்த வருமானத்தின் மீதான, கட்டாயச் சேமிப்பு உதவுதொகைகள் நீக்கப்படுமென நிதி அமைச்சர் எடுத்துரைத்தார்.

சாதாரணக் கட்டாய வரி நீக்கப்படுவதுடன் உயர்ந்த வருமான வகுப்பினரது வருமான வரி வீதம் உயர்த்தப்படுமென எடுத்துரைக்கப்பட்டுள்ளது. இன்றுள்ள வருமான வரி வீதத்தின் கடைசி மூன்று கூறுகள் பின்வருபவையாகும்.

| | |
|---|---|
| ரூ. 10,800 | 50 சதவீதம் |
| ரூ. 10,800 | 60 சதவீதம் |
| எஞ்சியவை | 65 சதவீதம் |

புதிய கூறுகளாவன :

| | |
|---|---|
| ரூ. 7,200 | 50 சதவீதம் |
| ரூ. 7,200 | 60 சதவீதம் |
| ரூ. ,200 | 70 சதவீதம் |
| எஞ்சியவை | 75 சதவீதம் |

வருமான உச்ச வரம்பு கட்டாய சேமிப்பின் பிரத்தியேக உதவுதொகை மூலமாகத் தொடர்ந்தும் செலுத்தப்படுமாயினும் வாழ்க்கைச் செலவின் மிகப் பெரிய அதிகரிப்புக் காரணமாகத் தற்போது நிலவும் மட்டமாகிய ரூ. 24,000 இலிருந்து ரூ. 30,000 இற்கு உயர்த்தப்படும்.

**(II) உழைத்த வருவாயில் நிவாரணம்**

பணித்துறை, மற்றைய தொழில்கள் ஆகியவற்றிலிருந்து வருமானம் பெறும் தனிப்பட்டோருக்கு வழங்கப்படும் வரியற்ற படி ரூ. 1,200 ஆகும். ரூ. 1,200 வரை செலவழிக்கப்படும் வர்த்தகம் சார்ந்த செலவுகளுக்கும் தமது அடிப்படைச் சம்பளத்தில் 10 சதவீதம் வரை செலவழிக்கப்படும் தொழில் தொடர்பான விருந்துபசாரத்திற்கும் வரியிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. தனது வரவுசெலவுத்திட்ட உரையில் நிதியமைச்சர் உரைத்த வருவாய்க்குரிய படிகள் பயண விருந்துபசாரச் செலவிற்கு வழங்கப்படமாட்டாதெனவும், தொழில் புரிவோருக்கு மட்டுமே வழங்கப்படுமெனவும் அறிவித்தார். எனினும், ஒவ்வொரு தொழில் புரிவோருக்கும் தமது திரட்டிய உழைக்கும் வரு

வாயில் 20 சதவீதம் படியாக வழங்கப்படும். இது ரூ. 1,200 ஐக் கீழ் எல்லையாகவும் ரூ. 3,000 ஐ மேல் எல்லையாகவும் கொண்டிருக்கும். இந்நடவடிக்கை தற்போதைய பணவீக்க வேளையில் நிலையான வருவாய் பெறுவோருக்கு நிவாரணம் அளிக்கும் நோக்குடன் எடுக்கப்பட்டுள்ளது.

### (III) சுயமாகத் தொழில் புரிவோருக்கு இளைப்பாறும் நன்மைகள் ஏற்பாடு

சுயமாகத் தொழில் புரிவோரின் வருவாய்கள் நிர்ணயிக்கப்படாததனால் பணவீக்கக் காலத்தில் வருவாய் பெறும் ஊழியர்கள் பாதிக்கப்படும் அதே அளவிற்கு இவர்கள் பாதிக்கப்படுவதில்லை. எனவே, இத்தகைய வகுப்பைச் சார்ந்தோர்களுக்குத் தொழில் புரியும் காலத்தில் தமது வருவாயையொட்டி வரி நிவாரணம் தேவையில்லை, அவர்கள் இளைப்பாறும் காலத்தில்தான் இத்தகைய நிவாரணம் தேவையென நிதியமைச்சர் கருதினர். இவ்வாறு இவ்வெடுத்துரைப்பானது இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் அவர்களது வருமானத்திலிருந்து வழங்கப்படும் காலம் தாழ்த்திய ஆண்டுத் தொகைக்குத் தமது வருமானத்திலிருந்து செலுத்தப்படும் கட்டணத்தில் குறைவை ஏற்படுத்தி அவர்களுக்கு நிவாரணம் வழங்குகிறது. இக்குறைப்பானது செலுத்தப்பட்ட உண்மையான கட்டணத்தின் அளவிற்கு அல்லது தமது தொழிலிலிருந்து பெறும் வருமானத்தில் 15 சதவீதம் அல்லது ரூ. 6,000 ஆகியவற்றில் எது மிகக் குறைந்த தொகையோ அந்த அளவிற்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

### (IV) குடும்ப வருமானங்களின் கூட்டுத்தொகை

தற்போது 25 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் வருமானமும் செல்வமும் வருமான வரி செல்வ வரி என்பவற்றைக் கணிக்கும் நோக்குடன் முறையே குடும்பத் தலைவனின் வருமானத்துடனும் செல்வத்துடனும் கூட்டப்படுகிறது. வயது வந்தவர்களைப் பற்றி இரு வேறு கொள்கைகள் இருப்பது திருப்தியற்றதாகையால் 21 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் வருமானமும் செல்வமுமே கூட்டப்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டது. உள்நாட்டு வருமான வரிச் சட்டத்திலுள்ள "பிள்ளை" என்னும் பதம் தகுந்த முறையில் திருத்தியமைக்கப்படும்.

### (V) வட்டிக் கொடுப்பனவுகள் மீது வரி நீக்கம்

பங்கிலாபங்களின் மூலத்திலிருந்து கழிக்கப்படும் வரியினைப் போன்று எல்லா நிதி நிறுவனங்களினாலும்[1] அடைவுகாரரினாலும் கொடுக்கப்படும் வட்டிக் கொடுப்பனவுகள் மீதான 33⅓ சதவீத வரியை நீக்குந் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதென எடுத்துரைக்கப்பட்டது. தேசிய சேமிப்பு வங்கியின் வட்டிக் கொடுப்பனவுகளின் பெரும் பங்கு அதைப் பெறுவோரைப் பொறுத்த வரை வரிக்கு உட்படுத்தப்படாததினால் தேசிய சேமிப்பு வங்கிக்கு இத்திட்டத்திலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. நிறுவன ரீதியான மூலங்களினால் வட்டி செலுத்தப்பட்ட நிலையிலும் கூட, வட்டி வரவுகளைப் பொறுத்த வரை வரியிலிருந்து தப்பும் நிலைமை காணப்படுவதாக உணரப்பட்டமையினாலேயே இவ்வாறு எடுத்துரைக்கப்பட்டது.

---

1. இதன் பின் வர்த்தக வங்கிகளையும் இவ் எடுத்துரைப்பிலிருந்து விலக்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது.

**(VI) வரிச் சலுகை வழங்கப்பட்ட கூட்டு நிலையங்களின் பங்கிலாபங்களில் வரி அறவிடல்**

கைத்தொழில் முயற்சிகளுக்கென வழங்கப்பட்ட ஐந்தாண்டு வரிச் சலுகை அனுபவித்த கூட்டுநிலையங்களங்கொன்றும் இங்கொன்றுமாகப் பன்னிரண்டு கூட்டு நிலையங்களை மாதிரி அளவைக் கொடுத்தபோது இக்கூட்டு நிலையங்கள் மிகப் பெருமளவு பங்கிலாபத்தைக் காட்டியுள்ளதாக நிதியமைச்சர் எடுத்துக் காட்டியுள்ளார். இக்கொள்கை பகட்டான நுகர்வுச் செலவை ஏற்படுத்தியுள்ளதென அமைச்சர் குறிப்பிட்டார். இதனால் 1975/76 மதிப்பாண்டு தொடக்கம் இப்பங்கிலாபங்களுக்கு வழங்கப்பட்ட இவ்விதிவிலக்கை நீக்கிவிடுவதென அவர் எடுத்துரைத்தார். இது தொழில் விரிவு படுத்தற்பொருட்டு இலாபங்களை மீள முதலீடு செய்வதற்கு ஒரு குறிப்பிடத்தக்க தூண்டு கோலாக அமையுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

வெளிநாட்டு முதலீடுகளைப் பொறுத்தவரை விதி விலக்குகள், சலுகைகள் வழங்குதல் ஆகியவை பற்றிக் கடைப்பிடிக்க வேண்டிய கொள்கையானது வரி கட்டாது விடல், அல்லது காலம் தாழ்த்தி வரி செலுத்துதல் ஆகிய வழி முறைகளின் ஊடாக இரட்டிப்பு வரி நிவாரண மரபுக் கட்டங்களுள் உள்ளடக்கப்படும். விதி விலக்குகள் வழங்கப்படாதவற்றைப் பொறுத்தவரை புதிய முதலீட்டில் வருமான வரி விதிக்கையில் குறைவான வீதத்தை விதிப்பதையிட்டுக் கவனம் செலுத்தப்படும். இது பேச்சுவார்த்தைகள் நடாத்தப் பட்ட பின்பு தகுந்த முறையில் உடன்படிக்கை ஏற்பாடுகளில் உள்ளடக்கப்படும்.

**(VII) கூட்டுறவுச் சங்கங்கள் மீது வரி அறவிடல்**

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் விரிவும், குறிப்பாகக் காணிச் சீர் திருத்தச் சட்டத்தையடுத்து உற்பத்தித் துறையில் அவை காட்டியுள்ள முன்னேற்றமும் அரசாங்க அரசிறையைப் பொறுத்தவரை இவற்றின் சில நடவடிக்கைகளை வரிக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டிய தேவையை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகளை வரிக்கு உள்ளாக்குவது இத்துறையின் திருந்திய நிதிக் கட்டுப்பாட்டிற்கும் துணையாக அமையும் என நம்பப்படுகின்றது. எனவே, இக்கூட்டுறவுச் சங்கங்களின் உற்பத்தி நடவடிக்கைகளையும், ஏனைய சில நடவடிக்கைகளையும் வரிமுறைக்குள் கொண்டுவர வேண்டுமென எடுத்துரைக்கப்பட்டது. எத்தகைய நடவடிக்கைகள் வரிக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்பது வெளிநாட்டு உள்நாட்டு அமைச்சருடன் ஆலோசனை செய்து, முடிவு செய்யப்படும்.

**(VIII) கப்பற் பணி, வான் கலப் பணி இலாபங்களில் வரிவிதிப்பு**

இலங்கையிலிருந்து பயணிகள் பொருட்கள் கொண்டு செல்லல் தொடர்பாக நாட்டில் வதியாதோர் நடாத்தும் கப்பற் பணியில் இருந்தும் வான்கலப் பணியில் இருந்தும் ஈட்டும் இலாபங்கள் மீது மிக எளிய அடிப்படையில் அமைந்த வரி விதிப்பைக் கொண்டுவரவிருப்பதாக நிதியமைச்சர் எடுத்துரைத்தார். தற்போதுள்ள முறை சிக்கலானதும், ஓராண்டின் இலாபத்தை முடிவாகக் கணித்து அதுபற்றி ஒத்துக்கொள்வதற்குக் காலதாமதம் ஏற்படுவதாகவும் உளது. புதிய முறையின்படி வெளிச் செல்லும் கப்பற் கட்டண வருவாயில் நிலையான ஒரு வீதம் இலங்கையிலிருந்து எழும். இலாபமாகக் கணிக்கப்படும். இவ்வீதம் 6 சதவீதமாக இருப்பதுடன் இவ்வீதமானது ஏறக்குறையத் தற்போதுள்ள அதே அளவான அரசிறையைத் தருவதாகவும் அமையும். கூட்டு நிலையங்களுக்குப் பொருத்தமான அதே சாதாரண வரி வீதம் இவ்வாறு கணிக்கப்பட்ட இலாபங்களுக்கும் பொருந்துவதாகும்.

## (IX) அபிவிருத்தித் தள்ளுபடிகளை ஒழித்தல்

வரி அமைப்பில் கெல்டர் முறையுடன் 1958/59 இல் அபிவிருத்தித் தள்ளுபடிகளைக் கொண்டுவந்ததன் முக்கிய நோக்கம் கைத்தொழில் மூலதன வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கேயாகும். இது தொழில் சக்தி அபரிமிதமாகவுள்ள தற்போதைய பொருளாதார அமைப்பில் தொழிற் செறிவுள்ள, விவசாய அடிப்படைக் கைத்தொழில்களுக்குப் போதிய ஊக்கமளிப்பதைவிட, இறக்குமதி செய்யப்பட்ட உள்ளீடுகளிலேயே பெருமளவிற்குத் தங்கியிருக்கும் மூலதனச் செறிவுடைய கைத்தொழில்களுக்கே ஊக்கமளிப்பதுபோல் தோன்றுகிறது. எனவே, இயந்திரங்கள், பொறிகள், பொருத்துக்கள் என்பன தொடர்பாக வழங்கப்பட்ட அபிவிருத்தித் தள்ளுபடிகளை ஒழிக்க வேண்டுமென எடுத்துரைக்கப்பட்டது. கைத்தொழில் கட்டடங்கள், தொழிலாளர், கீழ்நிலை உத்தியோகத்தர் ஆகியோரின் வதிவிடங்கள் என்பவற்றுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடி தற்போதைக்குத் தொடர்ந்துமிருக்கும்.

## (X) செல்வ வரி

மூலதனவரி, காணிச் சீர்திருத்தம், வீட்டு உடைமைகள் உச்சவரம்பு ஆகியவை முதலீடு செய்யப்படும் மரபுவழி எல்லைப் பரப்புகளிலுள்ள தனிப்பட்டோரின் செல்வத்தைக் கடுமையாகப் பாதித்த நிலையிலும் அரசாங்கத்தின் மீளப் பங்கிடும் கொள்கை வலையிலிருந்து அண்மை ஆண்டுகளில் செல்வம் சேர்த்த செல்வந்தர் பலர் நழுவிச் சென்றுள்ளனரென்று 1975 இற்குரிய வரவுசெலவுத்திட்டத்தில் நிதியமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையில், கடந்த சில ஆண்டுகளில் கைத்தொழில், வர்த்தக, நிதி மூலதனம் ஒரு சிலரின் கையில் பெருமளவு திரண்டிருப்பதைக் காண்கிறோம். இந்த அடிப்படையில் பார்க்கையில் தற்போதைய செல்வ வரியின் வீதம் மிகக் குறைவானதாகும். இதன் காரணமாக ஆகக் கூடிய வரி வீதம் 8 சதவீதமாக அமையும் முறையில் செல்வ வரியைச் சீராக்கம் செய்வதாக நிதி அமைச்சர் அறிவித்தார். உத்தேசிக்கப்பட்டுள்ள வரி வீதத்தின் நிரல் கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| தற்போதுள்ள வரி விலக்கு வரம்பு | ரூ. 100,000 | |
| வரி விதிக்கப்படக்கூடிய முதலாவது | ரூ. 100,000 | ½% |
| வரி விதிக்கப்படக்கூடிய அடுத்த | ரூ. 100,000 | 1% |
| ,, ,, | ரூ. 200,000 | 2% |
| ,, ,, | ரூ. 250,000 | 4% |
| ,, ,, | ரூ. 250,000 | 6% |
| ,, ,, | மீதியின் மீது | 8% |

புதிய வரிவீத நிரலின்படி தேறிய செல்வம், ரூ. 600,000 இற்கு மேற்படுகையில் செல்வ வரியில் கணிசமான அளவு அதிகரிப்புகள் இருக்கும்.

தமது மூலதன வரி தொடர்பாகத் தற்போது செலுத்துமதிகளைச் செய்யும் செல்வ வரி செலுத்துவோருக்கு 1975/76 மதிப்பீட்டாண்டில் ஓரளவு நிவாரணம் அளிக்கும்பொருட்டு 1975 திசெம்பர் 31 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் மூலதன அறவீட்டு நோக்கங்களுக்காக அவர்களால் செலுத்தப்பட்ட காசுக் கொடுப்பனவில் 50 சதவீதம் 1975/76 ஆம் ஆண்டிற்கான வரவாகவுள்ள செல்வ வரிக்கு எதிராகக் கொடுக்கற்பாலதான செல்வ வரியின் 50 சதவீத வரம்பெல்லை வரைக்கும் வரவாக அனுமதிக்கப்படும்.

வரி விடுதலை முயற்சிகள், தனிப்பட்ட பாவிப்பிற்கான மோட்டார் வாகனங்கள் என்பவற்றில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனங்களை வரி எல்லைக்குட் கொண்டுவருவதன் மூலம் செல்வ வரி விரிவாக்கப்பட்டது.

**(XI) பூதல் வரியும் நன்கொடை வரியும்**

மரணச் சொத்து வரி வீத நிரலை மாற்றியமைத்து நன்கொடை வரியுடன் அதற்குரிய தொடர்பை எளிதாக்கிச் சீர்படுத்த எண்ணியுள்ளதாக நிதியமைச்சர் எடுத்துரைத்தார். மரணச் சொத்து வரி மீதும், நன்கொடை வரி மீதும் அவர் புகுத்திய பொது வீத நிரல் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| முதலாவது | ரூ. 50,000 | 3% |
| அடுத்தது | ரூ. 50,000 | 9% |
| | ரூ. 40,000 | 15% |
| | ரூ. 40,000 | 18% |
| | ரூ. 80,000 | 22% |
| | ரூ. 80,000 | 24% |
| | ரூ. 80,000 | 30% |
| | ரூ. 80,000 | 40% |
| | ரூ 80,000 | 50% |
| | ரூ. 80,000 | 60% |
| மீதி | | 75% |

அடிப்படையில் ஒரு தனி வரியெனினும், கொள்கை அடிப்படையில் பார்க்கையில், மரணச் சொத்து வரியும் நன்கொடை வரியும் இரு தொடர்பான பகுதிகளாக விளங்குவதனால் புதிய பொது வீத நிரல் நிருவாகத்தை எளிதாக்கும். இது வரி செலுத்துவோரின் வாழ்நாள் முழுவதும் நடைமுறையில் இருக்கும். கொடுகப்பட்ட நன்கொடைகள் அனைத்திற்கும் வரி செலுத்தப்பட வேண்டும். இவ்வரி திரண்டு வரும் அடிப்படையில் அமைவதுடன் முன்பு கொடுக்கப்பட்ட நன்கொடைகள் தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டிய வரிகளுக்கு வரவாகக் கருதப்படும். இதன்படி பொதுவான வீதப் பட்டியலில் அடங்கும் கடைசி விடயம் பூதல் வரியாகும். உடைமையாளர் மாறிய காலத்தில் தனிப்பட்ட வீதப் பட்டியலின் செயலாற்றம் இடை நிலையிலிருக்கும். இது மதிப்பிடப்படுநரின் ஆயுட் காலத்திலோ, அவரது இறப்பின் போதோ இவ்வாறே செயற்படும். தற்போது உயர்ந்த நன்கொடை வரி வீதங்கள் வரி இறுப்போர் ஒருவரின் வாழ்நாளில் சொத்துக்களை மாற்றுவதற்கான ஊக்கத்தைக் குறைக்கும் நேரடிச் செயலாக அமைகிறது.

**(XII) நன்கொடையின் மீதும், இறப்பின்மீதுமான மூலதன இலாபங்கள்:**

நன்கொடை வரி அல்லது பூதல் வரியுடன் நன்கொடை அல்லது மரணத்தின்மீது விதிக்கப்படும் மூலதன இலாபங்கள் மிகக் கடுமையானதாகவும் உளது. காரணம் பெறப்படும் இலாபம் காசு வடிவில் இல்லாது பெயரளவில் பெறப்படும், இலாபமாகவே உளது. அதிகரித்த எப்பெறுமதிக்கும் அதிகரிக்கப்பட்ட நன்கொடை வரி, பூதல்வரி வீதங்கள் அடங்குவதினால், நன்கொடை மீது, அல்லது மரணத்தின்போது ஏற்படும் பெயரளவான மூலதன இலாபங்கள்மீது விதிக்கப்படும் வருமான வரியை நீக்குவதென எடுத்துரைக்கப்பட்டது. எதிர்காலத்தில் உண்மையில் பெறப்பட்ட மூலதன இலாபங்கள் மீதே வருமானவரி விதிக்கப்படும்.

**(XIII) 1975/76 மதிப்பீட்டாண்டுக்குரிய இடைக்கால ஏற்பாடுகள் :**

1974. சனவரி 1 இலிருந்து எல்லா வருமானங்களுக்கும் நடைமுறை ஆண்டு அடிப்படையில் வரி விதிக்கப்படும். எனவே, 1976, மதிப்பீட்டாண்டில் எல்லா மூலங்களிலிருந்தும் பெறப்படும் வருமானத்தின்மீது அந்த ஆண்டின் வருமானத்தின் அடிப்படையில் வரி செலுத்தப்பட வேண்டும். எனினும், 1975/76 மதிப்பீட்டாண்டிற்கான வருமானம் ஒன்பதுமாத வருமானத்தின்மீது இரட்டை வரி விதிப்பின்றி, வரியிலிருந்து தப்பக்கூடிய காலத்தை மிகக் குறைக்கக் கூடியதுமாக 1976ஆம் ஆண்டு மதிப்பீடுகளை நடைமுறை ஆண்டு அடிப்படைக்குத் தங்குதடையின்றி மாற்றக்கூடியவொரு முறையில் கணக்கிடப்படும். எனவே, வர்த்தகம், தொழில், உயர்தொழில் அல்லது வாழ்க்கைத் தொழில், வாடகை, வட்டி ஆகியவற்றிலிருந்து பெறப்படும் 1975/76 மதிப்பீட்டாண்டுக்குரிய இலாபங்கள் 1975ஆம் பஞ்சாங்க ஆண்டின் அல்லது 31 மாச்சு 1975இல் முடிவடையும் ஆண்டின் இலாபங்களில் எது கூடியதோ அந்தத் தொகையாகக் கணிக்கப்படுமென நிதியமைச்சர் குறிப்பிட்டார். எனினும், 1974 ஏப்பிறல் 1இலிருந்து 1975 திசெம்பர் 31 வரை உள்ள காலப்பகுதியில் எழும் அல்லது பெறப்படும் பங்கிலாபங்கள், மூலதன இலாபங்கள், நன்கொடைகள் என்பவற்றின்மீது வரி விதிக்கப்படும்.

**(XIV) வியாபார மொத்த விற்பனவு வரி :**

நிதியமைச்சர் 1973இன் இல. 11 கொண்ட நிதிச்சட்டத்தைத் திருத்தி, உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வியாபார மொத்த விற்பனவு வரி செலுத்துவோரின் பெயரையும், அவர்கள் வரிசெலுத்தும் மொத்த விற்பனையையும் பிரசுரிப்பதற்கு அதிகாரம் அளிக்க எண்ணியுள்ளதாகக் குறிப்பிட்டார். இது மொத்த விற்பனவு வரியிலிருந்து நழுவுதலைத் தடைசெய்ய உதவலாம் என அவர் கருதினார், வரிவீத அமைப்பைத் திருத்தியமைக்கும் நோக்கம் தற்போது தமக்கு இல்லையெனக்கூறிய அவர், காலப்போக்கில் வரி செலுத்துவோரின் பொருள்கோடல் பற்றிய பிரச்சினைகளை எளிதாக்கும் முறையில் வரிவீத மாற்றல்களைச் செய்ய எண்ணியுள்ளதாக அறிவித்தார்.

**(ஆ) 1976ஆம் மதிப்பீட்டாண்டு முதல் நடைமுறைபபடுத்தப்படும் எடுத்துரைப்புக்கள்:**

**(I) வரி விடுதலையும் முதலீட்டு நிவாரணமும்**

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திச் செய்முறைகள் ஒருசில செல்வந்தக் குடும்பங்களின் கையில் மூலதனங்கள் திரளுவதற்கு ஏதுவாய் அமைந்ததை வரவுசெலவுத்திட்ட உரை வலியுறுத்தியது. இன்றைய சட்டத்தின்படி வரி விடுதலையாலும் முதலீட்டு நிவாரணங்களாலும் இக்குடும்பங்களே பெரிதும் நன்மையடைந்துள்ளன என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1971 ஏப்பிரலுக்கும் 1973 திசெம்பருக்கும் இடையில் உருவாக்கப்பட்ட கூட்டு நிலையங்களில் பெரும்பாலானவை தனியார் கூட்டுநிலையங்களாகவே இருந்தமை மூலதனம் பெருமளவில் குவிக்கப்பட்டதை, எடுத்துக்காட்டுகிறதெனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

கிராமியப் பட்டண மக்கள் பெரும் அளவில் பங்குகொள்ளும் முறையில் சமமான நிலைத்துநிற்கக் கூடியதொரு வளர்ச்சியை ஏற்படுத்தும் வகையில் 1976 சனவரி 1 தொடக்கம் மரபுவழியல்லா ஏற்றுமதி தொடர்பாக விரிவான அடிப்படையில் அனுமதிக்கப்பட்ட கூட்டுநிலையங்களுக்கு மட்டுமே வரி நிவாரணம் அளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டது. 1976 சனவரி 1 இற்கு முன்

அங்கீகரிக்கப்பட்டு வர்த்தமானியிலிடப்பட்ட கூட்டுநிலையங்கள் சட்டத்தில் குறிக்கப்பட்டதுபோல் தமது ஏற்றுமதி இலாபங்கள்மீது ஐந்து அல்லது எட்டு வருட முழுக்காலப் பிரிவிற்கும் வரி விடுதலைச் சலுகையை அனுபவிப்பார்கள். மேலும், உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரிவு 16 சீசியின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட முதலீடுகளுக்கு கூட்டுநிலையங்கள் 1975 திசெம்பர் 31 இற்கு முன் அங்கீகரிக்கப்பட்டு சாதாரண பங்குகள் விநியோகிக்கப்பட்ட முதலீடுகளுக்கே சலுகை வழங்கப்படும். அங்கீகரிக்கப்பட்ட பரந்த அடிப்படையில் அமைந்த கூட்டுநிலையங்களில் முதலீடு செய்யப்படும் முதலீடுகளுக்கு மட்டுமே மேலும் நிவாரணம் வழங்கப்படும். தொடர்ந்து பேசுகையில், விரிவான அடிப்படையிலான கூட்டுநிலையங்களுக்குரிய மாதிரி அமைப்பு தற்போது தயாரிக்கப்பட்டு வருகிறதென்றும் தொடக்கத்தில் இம்மாதிரி அமைப்புக்கள் இரத்தினக்கல் துறையில் அமைக்கப்படலாம் எனவும் கூறினர்.

## (II) பெறுமானத்தேய்வு மொத்தத்தொகைச் சலுகைகளை ஒழித்தலும், தொழில் வளம்தரும் துறைகளை ஊக்குவித்தலும்:

நிதி வழிமுறைகளை மூலதனத்தைப் பெருக்கும் துறையிலிருந்து தொழில் வளத்தைப் பெருக்கும் துறைக்கு இட்டுச்செல்லும்முகமாக 1976ஆம் ஆண்டு தொடக்கம் பொறி, இயந்திரம், இணைப்புக்கள் ஆகியவற்றுக்குரிய பெறுமானத் தேய்வு மொத்தத் தொகைச் சலுகைகளை இல்லாமல் செய்வதென நிதியமைச்சர் அறிவித்தார். பதிலாக, குறைந்துசெல்லும் நிலுவையின் மீதான வேறுபடும் வீதங்களுக்குப் பதிலாகப் பெறுமானத்தேய்வு வழங்கப்படும்.

1976ஆம் ஆண்டு தொடக்கம், புதிய கைத்தொழில்களில் ஒரு வரிக்கான கொடுகடன் அல்லது மேலதிக வேலை வாய்ப்பிற்கென ஒரு கழிவை அளிக்க விருப்பதாக அவர் எடுத்துரைத்தார். பொதுவாகக் கூறின், இவ்வெடுத்துரைப்பு புதிதாக அமைக்கப்பட்டதும், 25 தொழிலாளர்களுக்கு மேலாக (உயர் அலுவலாளர்கள் நீங்கலாக)ப் பணிபுரிவதுமான நிறுவனங்களின் கூலி உண்டியலில் 20 சதவீதம்கொண்ட மேலதிக நிவாரணம் கொடுக்கப்படுமென்பதேயாகும். தற்போது நடைமுறையிலுள்ள வியாபார நிறுவனங்களைப் பொறுத்தவரை அவற்றால் தொடக்கப்படும் புதிய தொழிற்பாடுகள் தொடர்பாக 1975இல் நிலவிய மட்டத்திற்கு மேலாக அமர்த்தப்படும் தொழிற்படையின் அளவுக்கு இந்நிவாரணம் மட்டுப்படுத்தப்படும். ஊழியர் சேமநிதி அல்லது ஏனைய இளைப்பாறல் நிதி ஆகியவற்றுக்குச் செலுத்தப்படும் உதவுதொகைகளைக் கவனத்திற்கொண்டே இந்நிவாரணம் வழங்கப்படும். இந்நிவாரணம் வழங்கப்படுவதற்கு சம்பளமும் மற்றும் தொழில் நிபந்தனைகள் சம்பந்தமான ஏனைய நிறுவனங்களில் நிலவுவதைவிடக் குறைந்தநிலையில் இருக்கக்கூடாதென்பது ஒரு மேலதிக நிபந்தனையாகும்.

## (III) நழுவுவதற்கெதிரான நடவடிக்கைகள்.

பொதுவாக உறுதிகளில் சொத்துக்களின் பெறுமதி குறைவாக மதிப்பிடப்படுவதால் அசைவற்ற சொத்துக்களை அவற்றின் உறுதிகளில் கூறப்பட்ட பெறுமானங்களில் கொள்வனவு செய்யும் உரிமையை அரசாங்கத்திற்கு அளிப்பதற்கான சட்டவாக்கத்தைக் கொண்டுவருவதென எடுத்துரைக்கப்பட்டது. அத்துடன் வரி கட்டத் தவறியவர்களுக்கு சலுகையோ நிவாரணமோ கிடைக்காமற் செய்வதற்கும் சட்டம் கொண்டுவருவதெனவும் எடுத்துரைக்கப்பட்டது.

ஏனைய எடுத்துரைப்புக்கள்.

**(I) மாற்றத்தக்க ரூபாக் கணக்குகள்.**

மாற்றத்தக்க ரூபாக் கணக்குகள் திட்டத்தின்படி இரத்தினக்கல் ஏற்றுமதியும், உயர்தொழில் துறையிலுள்ள சில வரையறுக்கப்பட்ட வகைகளும் 25 சதவீதத்திற்கும் பொதுவான மரபுவழியற்ற ஏற்றுமதிகள் 3 சதவீதத்திற்கும் உரித்துடையனவாகும். இவ்விரண்டு வீதங்களேயும் ஒருங்கே கிட்டிய அளவிற்குக் கொண்டுவருவதற்காக உடனடியாக 25 சதவீதத்தை 20 சதவீதமாகக் குறைப்பதென்றும், 3 சதவீதத்தை 5 சதவீதமாக உயர்த்துவதென்றும்[1] எடுத்துரைக்கப்பட்டது. இவ்விரு வீதங்களிலும் மாற்றத்தக்க ரூபாக் கணக்குகளுக்கு உரித்துடைய வரிகள், வகுப்புகள் மாருது இருக்கும்.

**(II) அரசதுறைக் கூட்டுத்தாபனங்களிலிருந்து வருமானம்.**

நிதியமைச்சர் தமது வரவுசெலவுத்திட்ட உரையின்போது அரச துறைக் கூட்டுத்தாபனங்களினுல் நடாத்தப்படும் செயற்பாடுகள்மீது நிதிசார் கட்டுப்பாடுகளும், மேற்பார்வைக் கட்டுப்பாடுகளும் அவசியமென்பதை வலியுறுத்தி, அவற்றின் வரவுசெலவுத்திட்டக் கணக்குகளும் அரச பேரவையில் சமர்ப்பிக்கப்படுமெனக் கூறினுர். அரசதுறைக் கூட்டுத்தாபனம் ஒவ்வொன்றினதும் தனித்தனியான வரவுசெலவுத்திட்டங்கள் மிகப் பெருமளவினதாக இருக்குமாகையால் அந்தந்த அமைச்சர்களினுல் அங்கீகரிக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களின் வரவுசெலவுத்திட்டங்களே ஒன்ருகச் சேர்த்து 1974ஆம் ஆண்டு முடிவில் அரச பேரவையில் சமர்ப்பிக்கப்படுமென அவர் கூறினுர்.

அரசதுறைக் கூட்டுத்தாபனங்கள் தமது 1974ஆம் ஆண்டுக்குரிய இலாபங்களில் ரூ. 1,280 இலட்சத்தைத் திரட்டியநிதிக்குச் செலுத்துமென வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டது. இத்தொகை, 1975 மாச்சு 31, யூன் 30, செத்தெம்பர் 15, நவெம்பர் 30ஆந் திகதிகளில் அல்லது அதற்கு முன்னராக நான்கு காலாண்டுக் கட்டுப்பணங்களாகச் செலுத்தப்படும். செலுத்தப்படவேண்டிய தொகை ஒவ்வொரு கூட்டுத்தாபனத்தினதும் அவற்றின் பணம் செலுத்தும் இயலளவைப் பொறுத்தும் கணிக்கப்பட்டுள்ளது.

**(III) தேயிலேப் பெறுமான விகித வரியும் ஏற்றுமதித் தீர்வைத் தள்ளுபடித் திட்டமும்.**

தேயிலே உற்பத்தியாளருக்கு நீண்ட காலத்தில் தேயிலேக் கைத்தொழில் நிலேத்து நிற்பதான அவர்களது நோக்கத்தை அடைவதில் தடை ஏற்படுத்துவதாயுள்ள உயர்ந்துசெல்லும் உற்பத்தி விலேகளைக் கவனத்திற்கொண்டு நிதியமைச்சர் தற்போது நிலவும் தேயிலேப் பெறுமான விகிதவரி, ஏற்றுமதித் தீர்வைக் கழிவுத்திட்டம் என்பவற்றின் அமைப்பை மாற்றியமைக்க எண்ணியுள்ளதாக எடுத்துரைத்தார்.

பின்வரும் சீராக்கங்கள் செய்யப்படும் :

(அ) ஏற்றுமதித் தீர்வைக் கழிவுத்திட்டம்.

கழிவுத்திட்டம் செயற்படுத்துவதற்கான குறைந்த விலே இருத்தலுக்கு ரூ. 1.60 இலிருந்து ரூ 2.00 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. தள்ளுபடி செயற்படாது நிறுத்தப்படுவதற்கான மேல் எல்லே இருத்தலுக்கு ரூ. 2.00 இலிருந்து 2.30 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

---

1. அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் (பிரத்தியேக) 1974.11.6 இல் 136/7

(ஆ) பெறுமான விகித வரி:

தற்போது பெறுமான விகிதவரி இருத்தலுக்கு ரூ. 2.20 ஆகக் குறைந்த மட்ட விலையில் செயற்படுகின்றது. இவ்விலையை இருத்தலுக்கு 2.50 ஆக உயர்த்துவதென எடுத்துரைக்கப்பட்டுள்ளது. பெறுமான விகிதவரி, செலுத்தப்படவேண்டிய வீதம் 50 சதவீதமாகத் தொடர்ந்துமிருக்கும். ஆனல், செலுத்தப்பட வேண்டியதான உச்ச வரி இருத்தலுக்கு 70 சதத்திலிருந்து 1 ரூபாவாக உயர்த்தப்பட்டுள்ளது.[1]

வரி அமைப்பில் மாற்றம் செய்ததன் விளைவாக மதிப்பீடுகளில் அரசிறையிலும் மீண்டெழும் செலவிலும் சிறு சீராக்கங்கள் செய்யவேண்டி ஏற்படும் என்று நிதி அமைச்சர் குறிப்பிட்டார். இச்சீராக்கங்கள் வரவுசெலவுத்திட்டக் குழு ஆய்வுநிலையில் செய்யப்பட்டு மதிப்பீடுகள் இறுதியாக அச்சிடப்படும்போது அவற்றுள் சேர்க்கப்படும்.

## (IV) தட்டை றப்பருக்கு ஆகக்குறைந்த விலைத்திட்டம்

1972, செத்தெம்பரில் புகுத்தப்பட்ட தட்டை றப்பருக்கான ஆகக் குறைந்த விலைத்திட்டத்தின்கீழ் பண்டக்கொள்வனவு ஆணையாளரின் வெளியூர்ச்சாலைகளில் கொடுக்கப்படும் றப்பரானது றப்பர் உற்பத்தியாளருக்கு 1 இருத்தல் ஆர். எஸ். எஸ். இல. 1 றப்பர் 80 சதப்படியும், 1 இருத்தல் ஆர். எஸ். எஸ். இல. 2 றப்பர் 73 சதப்படியும் கொடுக்கப்படுமென உறுதியளிக்கப்பட்டது. நிதியமைச்சர் இவ்விலைகளை முறையே 95 சதமாகவும், 88 சதமாகவும் மீளாய்வு செய்வதென எடுத்துரைத்தார் தற்போது நிலவும் விலைகள் இம்மட்டங்களுக்கு மேலாகவிருப்பதால் இவ்வெடுத்துரைப்பின் பயனாக மீண்டெழும் செலவில் உடனடித் தாக்கமேதும் ஏற்படாதென எதிர்பார்க்கப்படுகிறது.

## 11. ஏனைய நிதி வழிமுறைகள்:

1974ஆம் ஆண்டுக் காலத்தின்போது பின்வரும் நிதி வழிமுறைகள் புகுத்தப்பட்டன. (i) அரிசி, கோதுமை மா, சீனி என்பவற்றின் பங்கீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட அளவிலும் விலையிலும் ஏற்பட்ட மாற்றங்கள்:

1.1 அரிசி

1.1.1 1974, சனவரி 1 இலிருந்து இதுவரை குறைநிலைப் பிரதேசங்களுக்கும் பெருந்தோட்டத்துறைக்கும் வழங்கப்பட்ட மேலதிக ½ படி அரிசியானது நாட்டிலுள்ள ஒவ்வொரு பங்கீட்டுப் புத்தகக்காரருக்கும் விரிவாக்கப்பட்டது. இது ஆரம்பத்தில் ஒரு மாத காலத்திற்கு நடைமுறைப்படுத்தப்பட்டது. பெப்புருவரி 18 இலிருந்து கொழும்பிலும், அதனைச் சுற்றியுள்ள நெல் பயிரிடப்படாத சில பகுதிகளிலும் மேலதிகமாக ½ படி அரிசி, ஒரு படி ரூ. 2/-ன்படி வழங்கப்பட்டது.

1.1.2 இதுவரை பங்கீட்டுப் புத்தகத்தில் வழங்கப்பட்ட கோதுமை மாவிற்குப் பதிலாக 1974, மாச்சு 18 இலிருந்து மேலதிகமாக ½ படி அரிசி வழங்கப்பட்டது. இதனல், கொழும்பிலும் அதனைச் சுற்றியுள்ள சில இடங்களிலும் ஒரு பங்கீட்டுப் புத்தகத்திற்கு வழங்கப்படும் மொத்தப் பங்கீட்டரிசியின் அளவு 1½ படியாகவும் நாட்டின் ஏனைய பகுதிகளில் இது 1 படியாகவும் இருந்தது.

---

1. அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் (பிரத்தியேக) 1974.11.6 இல் 136/17.

1.1.3 1974, ஏப்பிரலில் அரிசிப் பங்கீட்டில் மூன்று மாற்றங்கள் செய்யப்பட்டன :

(அ) கொழும்பிலும் அதன் சுற்றுப்பகுதிகளிலும் வழங்கப்பட்ட மேலதிக ½ படி அரிசி நாட்டின் முழுப் பகுதிக்கும் விரிவாக்கப்பட்டது எனவே மாதத் தொடக்கத்திலிருந்து ஒவ்வொரு அரிசிப் பங்கீட்டுப் புத்தகக்காரரும் ஒரு வாரத்திற்கு 1½ படி அரிசியைப் பெறுவர்.

(ஆ) ஏப்பிறல் 29 இலிருந்து இம்மேலதிக ½ படி அரிசி இல்லாமல் செய்யப்பட்டது. வருமானவரி செலுத்துவோர் தொடர்ந்து தமது முழுப்படி அரிசிக்கும் பணம் செலுத்த வேண்டியிருக்கையில் ஏனையோர் ½ படி அரிசியை இலவசமாகப் பெற்றனர்.

(இ) 1974, ஏப்பிறல் 15 தொடக்கம் பணம் செலுத்த வேண்டிய அரிசியின் விலை படியொன்றுக்கு ரூ. 2.00 இலிருந்து ரூ. 2.30 ஆக உயர்த்தப்பட்டது.

1.1.4 மே, 6 தொடங்கி பங்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட அரிசியின் அளவு தேர்ந்த அடிப்படையில் அதிகரிக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட 21 பிரதேசங்களில்[1] உள்ள பங்கீட்டுப் புத்தகக்காரருக்கு ஒரு வாரத்திற்கு 1½ படி அரிசி வழங்கப்பட, நாட்டின் ஏனைய பகுதிகளில் வாழும் மக்களுக்கு 1 படி அரிசி வழங்கப்பட்டது.

1.1.5 யூலை 15இலிருந்து இலவசமாக வழங்கப்பட்ட ½ படி அரிசி நீங்கலாக பங்கீட்டின்கீழ் வழங்கப்பட்ட ஏனைய அரிசியின் விலை 1 படி ரூ. 2.30 இலிருந்து ரூ. 2.50 ,ஆக உயர்த்தப்பட்டது. (1 இருத்தல் ரூ. 1.25).

1.1.6 1974 ஓகத்து 5இல் மேலும் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. அதன்படி பங்கீட்டரிசியின் விலை ஒரு படி ரூ. 2.20ற்குக் குறைக்கப்பட்டது. (1 இருத்தல் ரூ. 1.10) கொழும்பிலும் சில குறிப்பிட்ட பிரதேசங்களிலும் குறைநிலை மாவட்டங்களிலுள்ள[2] சில நகரப் பிரதேசங்களிலும் உள்ள பங்கீட்டுப் புத்தகக்காரர் ஒரு கிழமைக்கு 1½ படி அரிசியைப் பெறுகையில் நாட்டின் ஏனைய பாகங்களில் 1 படி அரிசி மட்டும் வழங்கப்பட்டது. வருடம் முடியும் வரையும் இந்த ஒழுங்கே தொடர்ந்திருந்தது.

1.2 கோதுமை மா

1.2.1 1974 மாச்சு 18இலிருந்து ஒரு ஆளுக்கு ஒரு கிழமைக்கு இருத்தல் 70 சதப்படி வழங்கப்பட்ட கோதுமை மா நிறுத்தப்பட்டது. பாண் மனைகளுக்கு வழங்கப்பட்ட மா மாற்றமின்றித் தொடர்ந்து வழங்கப்பட்டது.

---

1. இப்பிரதேசங்களாவன, கொழும்பு மாநகர சபை, தெகிவளை, கல்கிசை, ந. ச., மொறட்டுவ கொலன்னுவ. கோட்டை, பேலியகொடை, ஜாஎலை, வத்தளை-மாபோல, பாணந்துறை ந. ச. பத்தரமுல்லை, தளுகம, எந்தளை, களனி, பிலியந்தலை, முல்லேரியாவ, கொட்டிகாவத்தை, வெலிசறை, மகரகம, கந்தானை, பமுனுகம, கொஸ்வத்தை ப. சபைகள்.

2. குறைநிலை மாவட்டங்கள் : கொழும்பு, களுத்துறை, கண்டி, காலி, மாத்தறை, இரத்தினபுரி, கேகாலை, பதுளை, புத்தளம், யாழ்ப்பாணம், குருநாகல், மாத்தளை, நுவரெலியா.

1.2.2 ஏப்பிரலில் மாப் பங்கீடு மீளாய்வு செய்யப்பட்டது. ஆரம்பத்தில், ஏப்பிரல் 8 தொடக்கம் ஒரு கிழமைக்கு ½ இறுத்தல் மா இறுத்தலொன்று 70 சதப்படி வழங்கப்பட்டது. தொடர்ந்து அரிசியில் ஏற்பட்ட வெட்டின் காரணமாக 1974 ஏப்பிரல் 29 தொடக்கம் ஒரு ஆளுக்கு 2 கிழமைக்கு ஒரு முறை ஒரு இறுத்தல் மா வழங்கப்பட்டது.

1.2.3 ஓகத்து 5 இலிருந்து பங்கீட்டு பங்கீட்டல்லா (பாண் மனையாளருக்கு) மாவின் விலை இறுத்தல் ரூ. 1.10 இற்கு உயர்த்தப்பட்டது.

மேலும் பெருந்தோட்டங்களுக்கு[1] ஒரு கிழமைக்கு 1½ இறுத்தல் மாவும், கொழும்பிற்கும் சில குறிப்பிட்ட பிரதேசங்களுக்கும் 1 இறுத்தல் மாவும் தீவின் ஏனைய பாகங்களுக்கு ½ இறுத்தல் மாவும் வழங்கப்பட்டது.

1.2.4 திசெம்பர் 23இலிருந்து பெருந்தோட்டங்கள் (இங்கு ஒரு ஆளுக்கு 1½ இறுத்தல் தொடர்ந்து வழங்கப்படும்) நீங்கலாக தீவின் ஏனைய பகுதிகளுக்கு 1 இறுத்தல் மா வழங்கப்படும்

1.3 சீனி

1.3.1. 1974 மாச்சு 1 இலிருந்து பங்கீட்டில் இல்லாத சீனி ஒரு இறுத்தல் ரூ. 2.00 இலிருந்து ரூ. 5.00 ஆக உயர்த்தப்பட்டது. அதே வேளை ஒரு ஆளுக்கு ஒரு மாதத்துக்கு வழங்கப்பட்ட சீனியின் அளவும் ¼ இறுத்தலால் அதிகரிக்கப்பட்டு 1 இறுத்தலாக இறுத்தலொன்று 72 சதப்படி வழங்கப்பட்டது.

1.3.2 செத்தெம்பர் 5 இலிருந்து பங்கீட்டில் இல்லாத சீனி சில குறிப்பிட்ட வகையான நிறுவனங்களுக்கு மட்டும் இறுத்தலொன்று அதிகரிக்கப்பட்ட விலையான ரூ 7.50 இல் வழங்கப்பட்டது.

1.3.3. 1974 ஒற்றோபர் 1 இலிருந்து பங்கீட்டின்கீழ் வழங்கப்பட்ட சீனியின் அளவு ¼ இறுத்தலால் குறைக்கப்பட்டு ஒரு ஆளுக்கு ¾ இறுத்தலாக வழங்கப்பட்டது. அதேவேளை விலை மாற்றமடையாது இருந்தது.

2. நெல்லின் உத்தரவாத விலையில் மாற்றம்

2.1 ஒரு புசல் நெல்லின் உத்தரவாத விலை 1974 மார்ச்சு 31 இலிருந்து ரூ. 5.00 இனால் உயர்த்தப்பட்டு ரூ. 30.00 ஆக விளங்கியது.

2.2 விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட உரத்தின் மீதான உதவுதொகையை நீக்கிவிடுவதென்ற தீர்மானத்தையடுத்து நெல்லின் உத்தரவாத விலை 1974 யூலை 15 இலிருந்து ரூ. 33 ஆக உயர்த்தப்பட்டது.

3. கூலி அதிகரிப்பு

1973 ஒற்றோபர் 1 இல் வழங்கப்பட்ட சிறப்புப் படியானது 1974 ஏப்பிரல் 1 இலிருந்து உயர்ந்த அளவு படியால் பதிலீடு செய்யப்பட்டது இப்படி மாதம் ரூ. 8 00 அல்லது அதற்குக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு ஆகக்கூடியது ரூ. 50ஐ மேலெல்லையாகக்கொண்டு சம்பளத்தின் 20 சதவீதம் அமைந்தது அதே அதிகரிப்பு மாதம் ரூ. 800 அல்லது அதற்குக் குறைவான ஒய்வூதியம் பெறுவோருக்கும் வழங்கப்பட்டது. அதேவேளை 1972 இல் வழங்கப்பட்ட மாதாந்த சிறப்புப் படியான ரூ. 7.50 தொடர்ந்து வழங்கப்பட்டது.

---

1. பெருந்தோட்டங்கள் உணவுக்கட்டுப்பாட்டு நோக்கங்களுக்காக பதிவுசெய்யப்பட்டன.

4. வரி மாற்றங்கள்

4.1 தேயிலை விற்பனவு வரி :

1974 பெப்புருவரி 25 தொடக்கம், பெறுமான விகித வரி விதிக்கப்படும் விலையின் ஆகக்குறைந்த கூடிய எல்லைகள் உயர்த்தப்பட்டன. அதாவது, ஆகக் குறைந்த எல்லை ரூ. 2.00 இலிருந்து ரூ. 2.20இற்கும், ஆகக்கூடிய எல்லை ரூ. 3.40இலிருந்து ரூ 3.60 இற்கு உயர்த்தப்பட்டது வரி வீதம் மாற்ற முறுது ஏல விலைக்கும் ஆகக்குறைந்த எல்லைக்குமிடையிலான வேறுபாட்டின் 50 சதவீதமாக, ஒரு இறுத்தலுக்கு 70 சதத்தை ஆகக்கூடிய விற்பனவு வரி யாகக் கொண்டிருந்தது.

4 2 தேயிலை ஏற்றுமதித் தீர்வைக் கழிவு

பெப்புருவரி 25இலிருந்து ஏற்றுமதித் தீர்வையில் கழிவு செலுத்தற்பால தான விலை வீச்சு 20 சதத்தால் உயர்த்தப்பட்டது. ஆகக்குறைந்த எல்லை இறுத்தலொன்றுக்கு ரூ. 1.40 இலிருந்து ரூ. 1.60 இற்கும் ஆகக்கூடிய எல்லை இறுத்தலொன்றுக்கு ரூ. 1.95 இலிருந்து ரூ. 2.15 இற்கும்உயர்த்தப்பட்டது. எனினும், கிடைக்கக்கூடியதாகவிருந்த ஆகக்கூடிய நிவாரணம் மாற்றுமுறுது தாழ் பிரதேச, இடைத்தரத் தேயிலைகளுக்கு இறுத்தலுக்கு 20 சத மட்டத் திலுமே இருந்தது.

4.3 மொத்த விற்பனவு வரி :

4.3.1. 1974 ஏப்பிரல் 1 இலிருந்து பின்வரும் விடயங்கள்மீது[1] மொத்த விற்பனவு வரி வீதத்திற் குறைப்புகள் செய்யப்பட்டன.

(அ) பருத்தி பெனியன்கள் 20% இலிருந்து 10%

(ஆ) ஆபரணங்கள், பவுணும் இரத்தினமும் 15% இலிருந்து 5%

(இ) போசிலெயின் மேசைப் பொருட்கள் 35% இலிருந்து 5%

(ஈ) கடதாசி மட்டைகள் 25% இலிருந்து 15%.

4.3.2. 1974 ஏப்பிரல் 26 இலிருந்து நெல் விற்பனவுச் சபையினுல் மேற் கொள்ளப்படும் எந்தவொரு நடவடிக்கையிலிருந்தும் பெறும் வருவா யும் மொத்த விற்பனவு வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது.[2]

4.3.3 1974 யூலை 1 இலிருந்து இசைக் கருவிகளின் தயாரிப்பின் மீதான மொத்த விற்பனவு வரி 15 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.[3]

4 3.4 1974 ஒற்ரோபர் 1 இலிருந்து உயர்தர,ன ஒழுங்கா பெற்றேல் தயா ரிப்பின் மீதான மொத்த விற்பனவு வரிவீதம் 42 சதவீதத்திலிருந்து 33 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. உராய்வு எண்ணெய், பெற் றேலிய உற்பத்திப் பொருட்கள் மீதான வரி 23 சதவீதத்திலிருந்து 16 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது[4] அதேவேளை மொத்த விற் பனவு வரிக்குட்படுத்தப்பட்ட பொருட்களும் பல் தூரிகைகளினை 35 சதவீத ஆடம்பர எல்லைக்குள்ளாக அடக்கும் வகையில் விரிவாக்கப் பட்டன.

---

1. அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் (பிரத்தியேகம்) 1974.4.2 இன்105/51ஐப் பார்க்கவும்.
2. ,, ,, ,, சாதாரணம் 1974.4.26இன் 109 ,,
3. ,, ,, ,, பிரத்தியேகம் 1974.7.1இன் 118/57 ,,
4. ,, ,, ,, ,, 1974.9.30இன் 131/2 ,,

4.4. வரி இடர் உதவி : 1974 ஏப்பிரலிலிருந்து, உழைக்கும்போது செலுத்தும் திட்டத்தின்கீழ் வரி செலுத்தும் அனைவருக்கும் (வருடாந்தம் ரூ. 300) அரசாங்கம் மாதாந்தம் ரூ. 25 இடர் உதவி வழங்கியது.

4.5. உள்நாட்டு இறைவரி (திருத்த)ச் சட்டம் இல. 1 1974 :
1974 சனவரி 10இல் உள்நாட்டு இறைவரி (திருத்த)ச் சட்டத்தினால் 1963இன் இல. 4 உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் திருத்தங்கள் கொண்டுவரப்பட்டன. புதிய ஏற்பாடுகள் பின்வருமாறு.

4 5.1 அரசாங்கத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும் சொத்துக்களிலிருந்து எழும்தேறிய மூலதன இலாபங்கள் வருமான வரியில் இருந்து விலக்களிக்கப்படும்

4.5.2. 1971இன் இல. 35 வியாபார நடவடிக்கைகள் (கொள்வனவு) சட்டத்தின்கீழ் கொள்வனவு செய்யப்பட்ட அல்லது அரசாங்கத்தில் முதலிட்ட எந்த வியாபார நடவடிக்கைகளிலிருந்தும் எழும் இாலபங்கள் அவ்வாறு கொள்வனவு செய்யப்பட அல்லது முதலிடப்பட்ட நாளிலிருந்து வருமான வரிக்கு உட்படுத்தப்படும். அதன் இலாபங்களிலும் வருமானத்திலும் விதிக்கப்படும் வரியின் அளவு வதியும் கூட்டுநிலையங்கள்மீது விதிக்கப்படும் அதே அளவாகவே இருக்கும்.

4.5.3. 1972 ஏப்பிரல் 1 அல்லது அதன்பின் தொடங்கும் எந்த ஒரு மதிப்பீட்டாண்டிலும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஆயுட் காப்புறுதித் தொழிற்பாட்டிலிருந்து பெறப்படும் இலாபத்தின்மீதும் வருமானத்தின்மீதும் வரி விதிக்கப்பட மாட்டாது.

4.5,4 1975 ஏப்பிரல் 1இற்கு முன் 5 வருட வரி விடுதலைக்கு அங்கீகரிக்கப்பட்ட உணவகத் தொழில் முயற்சிகள் அவை கூட்டு நிலையங்களாயின் 5 வருட வரி விடுதலைக்குப் பின் 15 வருட பகுதி வரி விடுதலைக்கு உரித்துடையவராவர்.

4.5.5. 1973 ஏப்பிரல் 1இல் தொடங்கும் மதிப்பீட்டாண்டிலிருந்து அது 1973/74 தனி ஒருவர் சொந்தமாக வைத்திருக்கும் வதிவிடத்தின் தேறிய ஆண்டுப் பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

4.5.6 நெல் பயிரிடப்பட்ட நிலத்தின் சொந்தக்காரன் அல்லது பயிரிடுவோன் நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு நெல்லை விற்பதன் மூலம் பெறும் வருமானம் 1973/74 மதிப்பீட்டாண்டிலிருந்து வரி விலக்களிக்கப்படும்.

4 5.7. 1973 மாச்சு 31இல் அல்லது அதற்கு முன்பு கொள்வனவு செய்யப்பட்ட இலங்கைச் சேமிப்புச் சான்றிதழ்களிலிருந்து பெறப்படும் வட்டிக்கு வருமானவரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

4.5.8 இலங்கைச் சேமிப்பு வங்கி அல்லது இலங்கை அஞ்சல் அலுவலகச் சேமிப்பு வங்கியில் ஒரு ஆளுக்கு ரூ. 15,000 இற்கு மேற்படாத தொகையை வைப்புச் செய்திருப்பின் அதற்குத் தற்போது வழங்கப்பட்டுள்ள விலக்களிப்பு 1972 மார்ச்சு 31இற்கு முந்திய எந்தவொரு காலத்திலும் வரவு வைக்கப்பட்ட வட்டிக்கும் அளிக்கப்படும்.

4.5 9. 1973 மாச்சு 31இற்குப் பின் கொள்வனவு செய்யப்பட்ட சேமிப் புச் சான்றிதழ்களுக்குச் செலுத்தப்படவேண்டிய வட்டி ஒரு ஆளுக்கு ரூ. 1000 இற்கு மேற்படாதவிடத்து (ஒரு குடும்பத்திற்கு ரூ. 6,000 எல்லையாக) அதற்கும், தேசிய சேமிப்பு வங்கியில் ஒருவரது (அல்லது குடும்ப அங்கத்தினர்கள்) பெயரில் வரவாக உள்ள பணத் திற்கும் 1973/74 மதிப்பீட்டாண்டிலிருந்து வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்படும்.

4.5.10. யாராவது ஒருவருக்கு வர்த்தக வங்கியில் உள்ள அவரது வரவி லிருந்து பெறப்படும் வருமானம் உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் கருத்தின்படி அது கடவுச்சீட்டு (ஒழுங்கு) வெளிச்செல்லும் அனுமதிச் சட்டத்தின் 1971இன் இல. 53இன் கீழ்ச் செய்யப்பட்டிருப்பின் அவ் வருமானம் வருமான வரியிலிருந்தும் செல்வ வரியிலிருந்தும் விலக் களிக்கப்படும்.

4.6. உள்நாட்டு இறைவரி திருத்த)ச் சட்டம் 1974 இல. 15.

உள்நாட்டு இறைவரிச் சட்டம் 1963இன் இல. 4ஐத் திருத்தியமைப் பதற்கான மசோதா 1974 ஏப்பிரல் 2இல் தேசிய அரசப் பேரவை யினுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இது தொழில் நிறுவகங்களைப் கலண் டர் ஆண்டு அடிப்படையாகக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வதா யுள்ளது. இது 1976இல் நடைமுறைப்படுத்தப்படும்.

4.7. கட்டாயச் சேமிப்பை மீளச் செலுத்துதல் :

நிதியமைச்சர் கட்டாய சேமிப்புச் சட்டம் 1971இன் இல, 6இன் கீழ் செலுத்தப்பட்ட கட்டாய சேமிப்புத் திட்டத்தின் முதல் ஆண்டில் சில வகுப்பைச் சார்ந்த வரி செலுத்துவோருக்குத் திருப்பிக்கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார். இவ்வெடுத்துரைப்பின்படி பின்வரு வோர் பணத்தை மீளப் பெற உரித்துடையராவர்.

(அ) 1971 திட்டத்தின்கீழ் மொத்த உதவுதொகை ரூ. 240 அல்லது அதற்குக் குறைவாக உள்ள அனைவரும், அதாவது ஆண்டுக்கு ரூ. 6,000 தொடக்கம் ரூ. 12,000 வரை வருமானம் பெறு வோர்,

(ஆ) உதவுதொகை, ரூ. 240 இற்குக் கூடுதலாயின் சேவையிலிருந்து ஒய்வுபெற்ற ஊழியர்களும் அதாவது, 1973/74 மதிப்பீட்டாண் டில் வருமானவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டோர்.

4.8 வருமான உச்சவரம்பும் கட்டாய சேமிப்புச்சட்டக் கட்டளையும்.[1] 1974 யூலை 2இல் இச்சட்டத்தில் மேலும் திருத்தம் தேசிய அரசப் பேரவையினுல் அங்கீகரிக்கப்பட்டது. இத்திருத்தத்தின்படி நடை முறை மதிப்பாண்டு அல்லது மதிப்பாண்டிற்கு முந்திய ஆண்டில் செலுத்தப்பட்ட காப்புறுதி முற்பணத் தொகையில் அரைப்பங்கு அல்லது சேமநிதி உதவுதொகை 1973 ஏப்பிரல் 1 அல்லது அதன் பின் தொடங்கும் எந்தவொரு மதிப்பாண்டிலும் கட்டாய சேமிப்பி லிருந்து கழிக்கப்பட அநுமதிக்கப்படும். தொடர்ந்துவரும் எந்த வொரு மதிப்பாண்டிற்கும் காப்புறுதிப் பணம் பொறுத்து வேறு கழி வுகள் ஏதும் அனுமதிக்கப்படமாட்டாது.

---

1. 18.1.74இன் இல. 95 (சாதாரண) அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

5. வெ. செ. உ. சா.

1974 யூன் 3இல் தேங்காய்த் துருவல் ஏற்றுமதிக்குப் பயன்படுத்தப் படும் தடுக்கிதழ்கள் வெ. செ. உ. சா. விற்கு உட்படுத்தப்பட்டன. இது 1973 டிசெம்பர் 1 இலிருந்து செல்லுபடியாகும். இத்தகைய தடுக்கிதழ்கள் ஒன்றுக்கு ரூ. 15.51ஐ வெ. செ. உ. சா. ஆகப் பெறுவதற்குத் தகுதியுடையனவாகும்.

6. மாற்றக்கூடிய ரூபாக் கணக்குகள்

1974 சனவரி 10 இலிருந்து மாற்றக்கூடிய ரூபாக் கணக்குகள் திட்டம் பதனிடப்பட்ட தேங்காய்த்தும்பு, நார் நூல், நார்க் கயிற்று நூல், கயிறு என்பனவற்றின் ஏற்றுமதி வருவாய்களை உள்ளடக்கும் வகையில் விரிவாக்கப்பட்டது.[1] இதன்படி 1973 நவெம்பர் 14ஆந் திகதி அல்லது அதற்குப் பின் இத்தகைய ஏற்றுமதிகளிலிருந்து இலங்கையில் பெறப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி வருவாய்களில் 3 சதவீதம் மாற்றக்கூடிய ரூபாக் கணக்குகளில் வரவு வைக்கப்படத் தகுதியுடையனவாகும்.

1974 ஓகத்து 26 இலிருந்து சில குறிப்பிட்ட சூழ்நிலைகளில் நிதியை மாற்றக்கூடிய ரூபாக்கணக்கிலிருந்து இன்னுமொன்றுக்கு மாற்றுதல் செலாவணிக் கட்டுப்பாட்டாளரின் முன் அங்கீகாரத்துடன் செய்யப் படுவதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. இது இத்திட்டத்தின் செயற் பாட்டில் நிலவிய சமமின்மையைத் தீர்க்க உதவலாமென எதிர் பார்க்கப்பட்டது. இத்திருத்தத்தின்கீழ் தற்போது ஏற்றுமதியாளர் நன்மைகளை உற்பத்தியாளருக்கு வழங்கமுடியும்.

சில குறிப்பிட்ட விடயங்களைப் பொறுத்து மாற்றக்கூ ய ரூபாக் கணக்குகளுக்கு என்ன வீதத்தில் வரவுகள் அனுமதிக்கப்படல் வேண்டுமென்பதை மீளாய்வு செய்யும் வரவுசெலவுத்திட்ட எடுத்துரைப்புகள் 1974 நவெம்பர் 6[2] இலிருந்து நடைமுறைப்படுத்தப்பட்டது.

7. பேருந்து, புகைவண்டிக் கட்டண உயர்வுகள்

எரிபொருள்களின் விலை உயர்வையும், இறக்குமதி செய்யப்பட்ட உதிரிப் பாகங்கள், துணைக்கருவிகள் என்பனவற்றினதும் அதிகரித்துச் செல்லும் விலைகளையும் அடுத்து 1974 பெப்புருவரி 4 இலிருந்து பேருந்துக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டன. பயணம் செய்யும் முதலாவது கட்டத்தில் ஆகக்குறைந்த கட்டணம் 10 சதத்திலிருந்து 20 சதத்திற்கு உயர்த்தப்பட்டது. அடுத்த இரு கட்டங்களுக்கான கட்டணம் ஒவ்வொன்றும் 5 சதத்தினலும் ஏனைய அடுத்த கட்டணங்கள் ஒவ்வொன்றும் 10 சதங்களினலும் உயர்த்தப்பட்டன.

இதேபோன்று இ. அ. பு. சபையும் தனது பயணிகள் கட்டணத்தை (பருவகாலச் சீட்டுக் கட்டணங்கள் உட்பட) மேலதிகமாக 50 சதவீதத்தால் உயர்த்தியது. பொதிகள், பொருட்களின் கட்டணங்களும் 25 சதவீதத்தால் உயர்த்தப்பட்டன.

---

1. 15.1.74இன் இல. 94/3 (பிரத்தியேக) அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.
2. 6.11.74இன் இல. 136/7 (பிரத்தியேக) அரசாங்க வர்த்தமானி.